பிரிட்டிஷ் கவுன்சில்

கூட்டாளி அமைப்பு

FASHION REVOLUTION INDIA

ஆராய்ச்சி

# வானிலைப் பிரச்சினைகள் உள்ள காலத்தில் கைவினைக் கலைகள்

## கைவினைக் கலை மூலமாக வானிலை நெருக்கடியில் இருந்து மீளுதல்: இந்தியாவில் நிலையான ஃபாஷன் ஏற்பட ஒரு வழி

தொடர்புடையவர்களின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கை

அக்டோபர் 2023



**ஆசிரியர்**
ஷ்ருதி சிங்

**ஆராய்ச்சிக் குழு**
அஸ்தா ஜெயின்
அமல் அகமது
பாவ்யா கோயங்கா
டிமிக்ஸா பஞ்ச்சால்
குஷி செகல்
நிவேதிதா பத்மநாபன்

**புராஜெக்ட் குழு**
ஆஞ்ச்சல் சோதானி
அதிதி ஹொலானி
பாவ்யா கோயங்கா
டெல்பைன் பாவ்லிக்
தேவிகா புரந்தரே
ஷ்ருதி சிங்

**டிசைன் குழு**
மக்ரந்த் ராணே
பரேஷ் பாட்டில்

## வெளியீடு

பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

## குறிப்பு

அறிக்கை: தி பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா (2023). ‘வானிலைப் பிரச்சினைகள் உள்ள காலத்தில் கைவினைக் கலைகள்: இந்தியாவில் கைவினைக் கலை மூலமாக வானிலை நெருக்கடியில் இருந்து மீளுதல்: நிலையான ஃபாஷன் ஏற்பட ஒரு வழி’

முகப்பு அட்டை படம்: இரோ இரோ



" கைவினைக் கலைஞர்களுக்கு பருவநிலை மாற்ற நெருக்கடிகளுக்குச் சரியான எதிர்வினையாற்றியும், மேலும் வெளிப்படையான, நியாயமான சமுதாயத்தை உருவாக்கியும் உற்பத்தி மற்றும் நுகர்வு முறையில் மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தி உள்ளது. "

-கேரி சோமர்ஸ், இணை நிறுவனர், ஃபாஷன் ரெவல்யூஷன்

படம்: டெல்பைன் பாவ்லிக்

# கூட்டாளி அமைப்புக்கள்

## பிரிட்டிஷ் கவுன்சில் பற்றி

இங்கிலாந்தின் கலாச்சார உறவுகள் மற்றும் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்கான ஒரு சர்வதேச அமைப்புதான் பிரிட்டிஷ் கவுன்சில். இங்கிலாந்து மக்கள் மற்றும் உலகெங்கும் உள்ள நாடுகளின் மக்களிடையே இணைப்பையும், புரிதலையும் ஏற்படுத்தி, நம்பிக்கையை உருவாக்குவதன் மூலம் அமைதியும் வளமும் ஏற்பட நாங்கள் ஆதரவாக இருக்கிறோம். கலை மற்றும் கலாச்சாரம், கல்வி மற்றும் ஆங்கில மொழி தொடர்பான எமது பணிகள் மூலமாக நாங்கள் இதைச் செய்கிறோம். 200-க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுடன் சேர்ந்து நாங்கள் செயல்படுகிறோம். 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளை அமைத்துள்ளோம். 2022-23-ஆம் ஆண்டில் நாங்கள் 600 மில்லியன் மக்களைச் சென்றடைந்தோம்.

www.britishcouncil.in

## ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா பற்றி

ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா லாப நோக்கற்ற ஒரு அமைப்பு. இது தூய்மையான, பாதுகாப்பான, நேர்மையான, ஒளிவுமறைவற்ற , பொறுப்பேற்கும் ஃபாஷன் தொழிலுக்காக பிரத்யேகமாகச் செயல்படுகிறது. 75 நாடுகளுக்கும் மேலாக பரவியிருக்கும் உலகளாவிய ஃபாஷன் ரெவல்யூஷன் இயக்கத்தின் ஒரு பகுதியாகச் செயல்படும் ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா அமைப்பு, ஃபாஷன் தொழிலில் வளர்ச்சியும், லாபமும் காணும்போது மக்களின் நலனிலும் அக்கறை செலுத்துவதோடு, சுற்றுச்சூழலைப் பராமரிப்பதற்கும், மீட்பதற்கும் முன்னுரிமை தருகிறது. 2013-இல் ராணா பிளாஸா பேரிடர் ஏற்பட்டபோது உருவாக்கப்பட்ட ஃபாஷன் ரெவல்யூஷன் அமைப்பு குடிமக்களையும், தொடர்புடைய தொழில்துறையினரையும், கொள்கை வரைவாளர்களையும் ஒன்றுபடுத்தி உலகிலேயே மிகப்பெரிய துடிப்புமிக்க ஃபாஷன் இயக்கமாக வளர்ந்திருக்கிறது. எமது அமைப்பு கல்வி, ஆராய்ச்சி, பணிகளுக்கு ஆதரவு ஆகியவற்றின் மூலமாக மாற்றத்தைக் கொண்டுவர முனைந்திருக்கிறது.

www.fashionrevolution.org



படம்: ஷ்ருதி சிங்

## கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ் பற்றி

பிரிட்டிஷ் கவுன்சிலின் இந்தியாவில் கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ் திட்டம்¢ திட்டம், கைவினைக் கலைகளுக்காக புதிய எதிர்காலத்தைக் கண்டறியும் புராஜெக்டுகளில் ஒத்துழைக்கும் இந்திய மற்றும் இங்கிலாந்து கூட்டாளிகளை ஒருங்கிணைக்கிறது. 2019-ஆம் ஆண்டில் இருந்து கைவினைக் கலைப் பொருளாதாரத்தில் வெவ்வேறு போக்குகளைக் கண்டறிவதற்காக இருநாடுகளின் தொழில்துறையினர் மற்றும் கல்வியாளர்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் ஒன்பது  ஒத்துழைப்புத் திட்டங்களுக்கு கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ் ஆதரவு அளித்து வந்துள்ளது. 2022/23-இல் கிராஃப்டிங் கனெக்ஷன்ஸ் என்னும் கலந்தாய்வு முறையை பிரிட்டிஷ் கவுன்சில் தொடங்கியுள்ளது. இதன்கீழ், ஃபாஷன் ரெவல்யூஷன்ஸ் இந்தியா அமைப்பின் ஒத்துழைப்புடன் கைவினைக் கலைகளுக்கும், பருவநிலை நெருக்கடிகளுக்கும் இடையே உள்ள இணைப்பைக் கண்டறியவும், பருவநிலை மாற்றங்களுக்கு ஏற்ற ஆக்கப்பூர்வமான ஃபாஷன் மற்றும் ஜவுளித் தொழிலுக்கு ஊக்கம் தருவதற்காக கைவினைக் கலைகளுக்கு உள்ள சக்தியைக் கண்டறியவும் அடுத்தடுத்து தொடர்புடையவர்களுக்கு இடையே பல கலந்தாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.



**" பருவநிலை மாற்றத்தினால் பாரம்பரியக் கைவினைத் தொழில்களுக்கு நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவுக்கு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இந்தியாவில், அஸ்ஸாம், மேற்கு வங்கம், குஜராத், தமிழ்நாடு, கேரளா அல்லது பெரிதும் இயற்கை இன்னல்களால் பாதிக்கப்படக்கூடிய மற்ற இடங்களில் நெசவுத் தொழில் செழித்து வளர்ச்சி அடைந்தாலும், கடந்த பத்தாண்டு காலத்தில் வெள்ளப்பெருக்கு மற்றும் புயலினால் பெரிதும் கடும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. தாறுமாறான மழைப்பொழிவு, புயல் மற்றும் கொளுத்தும் கோடை வெப்பம் போன்ற இன்னல்களினால் நூல் இழை கிடைப்பதில் இருந்து தறியில் ஏற்றப்படுவதற்கு முந்தைய கட்டம் வரை பல்வேறு நெசவுப் பணிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் சரியான வகையில் குறுக்கிட்டு நடவடிக்கை எடுக்காவிட்டால், நெசவுத் தொழிலே அழிந்து போகும் அளவுக்கு பாதிப்பு மிக மோசமாக இருந்திருக்கிறது. "**

**- அல்ப்பி பொய்லா, இயக்குநர், ஸேவ் தி லூம்**



படம்: டெல்பைன் பாவ்லிக்

# உள்ளடக்கப் பட்டியல்


நன்றி! 08

முன்னுரை 09

**I. அறிமுகம் 12**

01. கைவினைக் கலைகளுக்கும், பருவநிலை மாற்ற நெருக்கடிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை புரிந்து கொள்ளுதல் 12
02. ஆராய்ச்சியின் நோக்கம் 13
03. பருவநிலை மாற்ற நெருக்கடிகள் ஏற்படும் காலகட்டத்தை ஆராயும் நமது பயணம் 14

**II. முக்கிய கண்டுபிடிப்புகள்: கைவினைக் கலைகள், பருவநிலை மாற்ற நெருக்கடிகள் மற்றும் நிலைத்திருக்கும் ஃபாஷன் 18**

04. கைவினை மற்றும் ஃபாஷன் தொழிலைப் பின்னிப் பிணைக்கும் இழைகள் 18
05. கைவினைத் தொழிலின் வேர்கள்: சுதேசி அறிவாற்றல் மற்றும் உள்ளுறை நிலைத்திருக்கும் ஆற்றல் 23
06. கைவினை இயற்கைச் சூழலிலும், சுதேசி சமூகங்களிலும் பருவநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதிப்பு 25
07. ஃபாஷன் தொழில் நிலைத்திருக்க தூண்டுதலாகத் திகழும் கைவினைக் கலை 27

**III. ஃபாஷன் தொழில் நிலைத்திருப்பதற்கான வழி : தடைகளைத் தாண்டி மாற்றத்தை விரைவுபடுத்துதல் 35**

08. தொழில்நுட்பமும் புத்தாக்கமும் 36
09. பாரம்பரியப் பொருட்களும் புத்தாக்கமும் 40
10. ஆராய்ச்சி 44
11. கைவினைக் கலைஞர்களுக்கும், கைவினை சார்ந்த தொழில்நிறுவனங்களுக்கும் இயற்கைச் சூழல் 46
12. ஆதரவான கொள்கை 49
13. மேம்பாட்டு நிதியங்கள் மற்றும் முதல௰டு 52

**IV. பரிந்துரைகள் 58**

14. தொடர்புடையவர்களின் ஆசைகள்: எதிர்காலத்தை ஒன்றுபட்டு உருவாக்குதல் 58
15. உருவாக்கப்படும் புரட்சி : மாற்றத்திற்கான வழி

**IV. நிறைவு 61**

**V. பின்னுரை**

16. தொடர்புடையவர்களும், பங்களித்தவர்களும் 62
17. சொற்பட்டியல் 66
18. குறிப்புகள் 67
19. வட்டமேசை விவாதங்கள் 69

# நன்றி!

பருவநிலை மாற்றப்  பிரச்சினைகள் உள்ள காலத்தில் கைவினைக் கலைகள்' என்னும் அறிக்கை உருவாகிக் கொண்டிருந்த போது நாங்கள் சற்றே சிந்தித்த வேளையில், நன்றிப் பெருக்கால் திக்குமுக்காடிப் போனோம். ஐந்து நகரங்களில் வட்டமேசை விவாதங்களை நடத்தி உருவாக்கப்பட்ட இந்த அறிக்கையின் நோக்கம், இந்தியாவில் ஃபாஷன் தொழில் நிலைத்திருக்கும் பின்னணியில், கைவினைத் தொழிலுக்கும், பருவநிலை மாற்ற சிக்கல்களுக்கும் இடையே உள்ள நுட்பமான தொடர்புகளை வெளிப்படுத்துவது ஆகும். பலருடைய மதிப்பிடற்கரிய பங்களிப்பினால், செறிவூட்டப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமையில் இந்த ஆராய்ச்சி ஆழ வேரூன்றியுள்ளது.

பிரிட்டிஷ் கவுன்சில் குழுவினருக்கு எங்களது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறோம்.  ஜோனத்தான் கென்னடி மற்றும் தேவிகா புரந்தரே-இவர்கள் எங்களுடைய கண்ணோட்டத்திலும், இந்த அறிக்கையைச் செயல்படுத்துவதில் எங்களுக்கு உள்ள திறமையிலும் நம்பிக்கை வைத்து ஊக்கமளித்தனர்: டெல்பைன் பாவ்லிக் மற்றும் ஆஞ்சல் சோதானி- இவர்களின் மதிப்புமிக்க ஆலோசனைகள் எங்களுக்கு இந்த மாபெரும் புராஜெக்டில் வழிகாட்டி உதவியது; ஆலிஸான் - இவருடைய ஒரே சீரான ஆதரவு எங்களுடைய புராஜெக்டின் வெற்றிக்கு மிக முக்கிய பங்களிப்பாக இருந்தது.

கலந்துரையாடல்களை நெறிப்படுத்தி உதவிய ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா குழுவின் மிகவும் ஈடுபாடுமிக்க புராஜெக்ட் உறுப்பினர்களுக்கும், இந்த புராஜெக்டை வெற்றிகரமாக ஆக்கிட எண்ணற்ற மணி நேரம் உழைத்த ஆராய்ச்சிக் குழுவினருக்கும் -ஆஸ்தா ஜெயின், அதிதி ஹொராலானி, அமல் அகமது, பாவ்யா கோயங்கா,டிமிக்ஸா பஞ்ச்சால், குஷி செகல், நிவேதிதா பத்மநாபன் - ஆகியோருக்கும்  நாங்கள் நன்றி கூற விரும்புகிறோம். இவர்களின் பங்களிப்பு இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு அடிப்படையாக இருந்தது. இந்த அறிக்கைக்கு மிகத்திறமையாக டிசைன் செய்த மக்ரந்த் ராணே மற்றும் பரேஷ் பாட்டில் மற்றும் கொஞ்சம் கூடத் தயக்கம் இல்லாமல் ஆதரவு கொடுத்த சுகி டுஸாஞ்ஜ் -இவர்களுக்கும் இதயங்கனிந்த நன்றிகள்.

இந்த புராஜெக்டிற்கு அடித்தளமாக இருந்து, தங்களது நிபுணத்துவ அறிவைத் தாராளமாகப் பகிர்ந்து கொண்டு, தங்களது ஸ்டூடியோக்களுக்கு களப்பணி வருகைக்கு ஏற்பாடு செய்து, இந்த அறிக்கையின் உள்ளடக்கம் சிறப்பாக அமைய பங்களித்த அனைத்து ஒத்துழைப்பாளர்களுக்கும் எமது உண்மையான நன்றியறிதல்களைத் தெரிவிக்கிறோம். டாக்டர் ரூலிக்கா குப்தா ( இந்தியன் கிராஃப்ட்ஸ் & டிசைன் இன்ஸ்டிடியூட்), ஹிமான்ஷு ஷானி (11.11), பவித்ரா முதய்யா ( விமோர் மியூஸியம் ஆஃப் லிவிங் டெக்ஸ்டைல்ஸ்), பிரிகெட்டா சிங், பத்மினி கோவிந்த் ( தரங்கிணி ஸ்டூடியோஸ்), மொகம்மது ஸாக்கிப் ( ரங்ரெஸ் கிரியேஷன்), ஷாரதா கௌதம் மற்றும் பர்வேஸ் ஆலம் ( டாடா டிரஸ்ட்ஸ்), அனுராதா சிங் ( நிலா ஹவுஸ்), அஜய் பரா, சித்ராபன் சர்மா, ஔஷாஜ்யா சைக்கியா, ஷிவானி கோஸ்வாமி, பூஜா தாஸ்( ஐசிசிஓ இந்தியா), பாகரா டிரெடிஷனல் டிரஸ் மேக்கிங் கிளஸ்ட்டர், ஹவ்லி செரிகல்ச்சர் பண்ணைக் குழு மற்றும் அனோக்கி மியூஸியத்தின் நெறியாளர்கள் அனைவருக்கும் எங்களது பாராட்டுதல்களைத் தெரிவிக்கிறோம். எங்களுக்காக தங்களது இல்லங்களையும், இதயங்களையும் திறந்து வைத்த அனைத்துக் கைவினைக் கலைஞர்களான- கபிதா அக்கா, ரேணுகா அக்கா, பிரதிபா அக்கா, டிபாமோனி மெதி, போர்னாலி டேக்கா, புரோபி போர்டோலாய், திபாலி சேனாபதி, மற்றும் செவாலி போர்டோலாய் - அனைவருக்கும் உங்களுடைய அன்புக்கும், உபசரிப்புக்கும் நன்றி.

எங்களுடைய வட்டமேசைக் கூட்டங்களிலும், நேர்காணல்களிலும் பங்கேற்ற தொடர்புடைய அனைவருக்கும், மாறுதல்களை உருவாக்குவோருக்கும், கனவுகளைக் காண்போருக்கும், புத்தாக்கம் புனைவோருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம். அவர்களின்  தெளிவான தெளிவான கருத்துக்களும், இந்தத் துறையை வலுப்படுத்துவதில் அவர்கள் கொண்டிருக்கும் ஈடுபாடும் எங்களுக்குத் தொடர்ந்து உணர்வூக்கம் அளித்து வந்தது. கிரியேட்டிவ் டிக்னிட்டி குழுவினரும், டாக்டர் ரோஸி ஹார்ன்பக்கிளும் ஆராய்ச்சியை மதிப்பிட்டு, மதிப்பிடற்கரிய ஆக்கப்பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தனர். அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரையாடல்கள் ஒரு செயலூக்கியாகத் திகழ்ந்து, அர்த்தமுள்ள கலந்துரையாடல்களைத் தூண்டிவிட்டு, பெரும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், அதற்கு ஆசைப்படுகிறோம். இந்தக் கூட்டு முயற்சிகள் ஆக்கப்பூர்வமான மாற்றத்திற்கு அடித்தளமிட்டுள்ளன. அதற்காக நாங்கள் உண்மையிலேயே நன்றி பாராட்டுகிறோம்.

**ஷ்ருதி சிங், கண்ட்ரி ஹெட்**
**ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா**



படம்: டெல்பைன் பாவ்லிக்

# முன்னுரை

## பிரிட்டிஷ் கவுன்சில் வழங்கியது

உலகளாவிய நிலையில் பருவநிலை மாற்றங்களினால் நெருக்கடி அதிகரித்து வரும் வேளையில், நாம் இப்போது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு திருப்பு முனையில் நின்று கொண்டிருக்கிறோம். பருவநிலை மாற்ற நெருக்கடிகள் உள்ள காலத்தில் கைவினைக் கலைகள்; இந்தியாவில் கைவினைக் கலை மூலமாக வானிலை நெருக்கடியில் இருந்து மீளுதல்" என்னும் இந்த அறிக்கை மூலம் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு இடையே ஒரு நம்பிக்கை ஒளியை பிரிட்டிஷ் கவுன்சிலும், எமது கூட்டாளி அமைப்பான ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா அமைப்பும் சேர்ந்து வீசியிருப்பது எங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு கௌரவமாகும்.பருவநிலை மாற்றங்களை கைவினைக் கலைகள் எதிர்கொள்ளும் பாரம்பரியம், கலாச்சாரம், பருவநிலையின் மீட்சி சந்திக்கும் ஒரு நிலை பற்றி இந்த அறிக்கை விரிவாக ஆராய்ந்துள்ளது. இந்தியாவின் வேறுபட்ட கைவினைக் கலை பாரம்பரியம் மிகவும் புகழ்பெற்றது. இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்தியாவை பொருத்தமற்ற முறையில் பாதிக்கும் பருவநிலை மாற்றங்களின் கொடூரமான யதார்த்த நிலையை இந்த அறிக்கை ஒப்புக் கொள்கிறது.

எனினும், இந்த அறிக்கை சவால்களின் தொகுப்பாக உள்ளது என்பதைவிட, மனிதகுலத்தின் மீட்சி ஆற்றலுக்கும், அறிவுத் தெளிவுக்கும் ஒரு சான்றாகவும் உள்ளது. இயற்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள வாழ்க்கையை வாழும் நமது கைவினைக் கலைஞர்களுக்கு பருவநிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் இது விவரிக்கிறது. ஆனாலும், இப்படிப்பட்ட பாதகமான நிலையிலும் வாய்ப்பு உருவெடுப்பது பற்றியும் இது குறிப்பிடுகிறது. ஒரு கைவினைக் கலை எவ்வாறு பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான தீர்வை வழங்க முடியும் என்பதை இந்த அறிக்கை புலப்படுத்துகிறது. சுற்றுச்சூழலுடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ள நமது கைவினைக் கலைஞர்கள் பல தலைமுறைகளாக சுழல் பொருளாதாரங்களையும், நிலைத்திருப்பதற்கான வழிகளையும், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு வழிகாட்டுவதையும் பின்பற்றி வந்துள்ளனர். அவர்கள் இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு நுட்பமான ஒரு கலைப்படைப்பாக மாற்றி விடுகின்றனர். தங்களது அறிவாற்றல் நுட்பங்கள் மூலம் கழிவுகளைக் குறைக்கின்றனர். புதுப்பிக்கவல்ல எரியாற்றல் வளங்களுக்காக வாதிடுகின்றனர். நீடித்த நிலையான கைவினை இயற்கைச் சூழலுக்குத் தேவையான குறுக்கீடுகள் தேவைப்படும் துறைகள் யாவை என்பதை இந்த அறிக்கை விவரிக்கிறது. மேலும், பல்வேறு தொடர்புடையவர்களுக்காக செயல்நோக்கு வழிகாட்டி ஒன்றையும் இந்த அறிக்கை வழங்குகிறது.

மேலும், கைவினைக் கலைகளை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்காக இந்தியக் கைவினைக் கலைஞர்களும், அமைப்புக்களும் ஏற்கனவே பின்பற்றிவரும் மிகச்சிறந்த நடைமுறைகளை இந்த அறிக்கை கொண்டாடுகிறது. நீடித்த நிலையான எதிர்காலம் என்பது ஒரு தொலைதூரக் கனவல்ல; அது ஏற்கனவே கைவினைக் கலைஞர்கள் மற்றும் படைப்பாளர்களின் கரங்களில் உருவெடுத்து வருகிறது என்பதற்கு இந்த யதார்த்தமான உதாரணங்கள் உள்ளன. நிறைவாக, இந்த அறிக்கை செயல்படும்படி தூண்டும் ஓர் அழைப்பாகவும் இருக்கிறது. நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கான பணிகளில், கைவினைக் கலைகளுக்கு உள்ள உள்ளுறை மதிப்பை உணரும்படி நம்மை இது வற்புறுத்துகிறது. நமது பூமியையும், சுதேசி சமூகங்களையும் மறந்துவிடாமல் கௌரவிக்கும் வேளையில், புத்தாக்கத்தையும், தொழில்நுட்பங்களையும் ஊக்கப்படுத்திட ஓர் இயக்கம் தேவை என்றும் இது அறைகூவல் விடுக்கிறது.

இந்த அறிக்கைக்குப் பங்களித்த அனைவருக்கும் நாங்கள் ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நிலையான ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதில் இவர்களின் அசைக்க முடியாத ஒரு ஈடுபாடு நம் அனைவருக்கும் உணர்வூக்கம் தரும்.

**அலிஸன் பாரெட், கண்ட்ரி டைரக்டர் இந்தியா மற்றும் டெல்பின் பால்லிக், கலைப்பிரிவு துணை டைரக்டர், இந்திய பிரிட்டிஷ் கவுன்சில்**

## ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா வழங்கியது

பருவநிலை மாறுதல்களின் நெருக்கடியால், நமது பூமிக்கு இதற்குமுன்பு ஏற்பட்டிராத வகையில் சவால்கள் எழுந்துள்ள நிலையில், இந்தியாவின் பாரம்பரியக் கைவினைக் கலைகளின் பங்களிப்புக்கு புதிய சிறப்பு கிடைத்துள்ளது. பல நூற்றாண்டுகளாக, இந்தியக் கைவினைக் கலைஞர்கள் கலாச்சாரம், மரபுச் செல்வம், கைவினைத் திறன் அடங்கிய ஒரு செழுமையான படுதாவை நெய்துள்ளனர். அவர்களின் படைப்பு ஓர் அழகுப் பெட்டகம் மட்டுமல்ல, தலைமுறை தலைமுறைகளைத் தாண்டிவரும் நீடித்த நிலையான பழக்கவழக்கங்கள் நிறைந்த ஒரு கருவூலமாகவும் திகழ்கிறது.

இன்றைக்கு, பருவநிலை மாற்றத்தின் தாக்கம் நம்மைப் பெரிய அளவில் சூழ்ந்திருக்கும் நிலையில், மிகவும் மோசமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். தாக்குப்பிடித்து வாழவேண்டிய ஒரு அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. பொறுப்புணர்ச்சியுடன் நமது நுகர்வு இருக்க வேண்டும் என்பது இப்போதுதான் முன்பை விட அதிக வெளிப்படையாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலையில், பாரம்பரியக் கைவினைகள்தான் ஒரே நம்பிக்கை என்று உலகம் பார்க்கத் தொடங்கியுள்ளது. உலகளாவிய இந்த இயக்கத்தில், வெவ்வேறு விதமான , துடிப்பான கைவினைப் பாரம்பரியங்களைக் கொண்ட இந்தியா முக்கியமான பங்கை ஆற்ற வேண்டியுள்ளது.

இந்த அறிக்கையில், கைவினைக் கலைகளுக்கும், பருவநிலைக்கும் இடையே உள்ள பிணைப்பை ஷ்ருதி சிங் ஆராய்கின்றபோது, காலம்காலமாக இருந்து வரும் நுட்பங்களை நவீன சவால்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் கைவினைக் கலைஞர்கள் எப்படி செயல்பட்டார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்வோம். மடிந்து கொண்டிருந்த கைவினைக் கலைகள் எவ்வாறு புத்துயிர் பெற்றன என்பதையும் நம்மால் காண முடியும். புதுப்பிக்க வல்ல எரியாற்றல்களை எவ்வாறு புதுவிதமாக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன என்பதையும் நாம் பார்க்க முடியும். பாரம்பரிய அறிவாற்றலும், இக்கால டிசைன்களும் கலப்பதும் நமக்குத் தெரிய வரும். இந்தியாவின் இதயமான கிராமங்களில் இருந்து, மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கும் நகரங்கள் வரை பரவியுள்ள இந்தக் கதைகள், கைவினைக் கலைஞர்களின் மீட்சியாற்றலையும், நிலையான ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன.

சுற்றுச்சூழல் சீர்கேட்டின் அச்சுறுத்தல் சூழ்ந்துள்ள இந்த உலகில், இந்தியாவின் கைவினைக் கலை பாரம்பரியத்தைப் பேணிக்காத்து, ஊக்கப்படுத்தினால், அது மாற்றத்தைக் காண்பதற்கான வலுவான ஒரு சக்தியாக இருக்கும். பாரம்பரியமும், புத்தாக்கமும் இணைகின்ற ஓர் உலகை ஆழ்ந்து அனுபவித்துப் படிக்குமாறு இந்த அறிக்கை உங்களைத் தூண்டுகிறது. மேலும், பருவநிலை மாறுதல்களின் நெருக்கடி நிறைந்த காலகட்டத்தில் காலத்தால் அழியாத இந்தியக் கைவினைக் கலைகள் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றாகத் திகழ்வதையும் நம்மால் உணர முடிகிறது. இந்த அறிக்கை உங்களுக்கு உணர்வூக்கம் அளிக்கும். நீங்கள் இதை வியந்து பார்ப்பீர்கள். இந்தியக் கைவினைக் கலைகளில் புதைந்துள்ள ஆழ்ந்த ஞானத்தையும், படைப்பாற்றலையும் நீங்கள் புதிதாகப் புரிந்து கொள்வீர்கள். நிலையான எதிர்காலத்தை உருவாக்கிட இந்திய அறிவாற்றலும், படைப்புத் திறனும் முன்பை விட இப்போதுதான் மிகவும் பொருத்தமாக உள்ளன. பயணம் தொடங்கட்டும்.

**சுகி டுஸாஞ்ஜ்-லென்ஸ், நிறுவனர்**
**ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா**



# I. அறிமுகம்

வரலாறு கண்டிராத ஒரு பருவநிலை மாற்றம் நிகழும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 2023 ஜூலையில்தான் இந்த பூமியில் மிகவும் வெப்பமான நாள் பதிவாகியிருக்கிறது. புவி வெப்பம் அதிகரித்துக் கொண்டே போகிறது; இதை உடனடியாகச் சரி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பதை இது நமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதைத்தான் ஐநா தலைமைச் செயலர் அண்ட்டோனியோ குட்ரெஸ் 'உலகளாவிய கொதிநிலை' என்று வர்ணித்தார். அதிகரித்துக் கொண்டே செல்லும் உலகளாவிய பருவநிலை மாற்ற நெருக்கடியின் யதார்த்த நிலை பற்றி நமக்கு பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கு இடையிலான குழுவின் அறிக்கை எச்சரிக்கிறது.

கடல்நீர் மட்டம் உயர்வது, திடீரென வெள்ளப் பெருக்கு ஏற்படுவது, வறட்சி, வெப்ப அலைகள் பரவுதல், காட்டுத்தீ போன்றவற்றில் இருந்து புவி வெப்பம் அதிகரிப்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். இவை யாவும் நமது வாழ்க்கையில், சமூகத்தில், இந்தப் பிரபஞ்சத்தில் படுபயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. துணிகள் மற்றும் மண்பாண்டங்களில் இருந்து உலோக மற்றும் மரவேலைப்பாடுகள் வரை கைவினைக் கலைகளின் பாரம்பரியம் செழித்தோங்கியுள்ளதாக அங்கீகரிக்கப்பட்ட நாடான இந்தியாவில் இந்த பாதிப்பு வெளிப்படையாகத் தெரிகிறது. 2100-ஆம் ஆண்டில் இந்தியாவின் வெப்ப நிலை 4.7 டிகிரி செல்சியஸாக அதிகரிக்கும் என்று கிளைமேட் ஆக்ஷன் டிராக்கர் 2023 2 அறிக்கையினால் முன்கணிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் பருவநிலை மாற்றங்களினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் ஒன்றாக இந்தியா இருக்கிறது.



படம்: டெல்பைன் பாவ்லிக்

## 01.கைவினைக் கலைகளுக்கும், பருவநிலை மாற்ற நெருக்கடிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை புரிந்து கொள்ளுதல்

உலகெங்கும் உள்ள கைவினைக் கலைஞர்கள் கைவினைப் பொருட்களை உருவாக்கிட உள்ளூரிலேயே கிடைக்கும் பொருட்களையும், அங்குள்ள நீர்நிலைகளையும், வயல்வெளிகளையும், காடுகளையும் சார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது கணிக்க முடியாத அளவுக்கு வானிலை, வாய்ப்பு வளங்களுக்குப் பற்றாக்குறை, அதிகரிக்கும் பொருட்செலவுகள் போன்ற நெருக்குதல்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களின் வாழ்வாதாரம் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. பருவநிலை மாற்றங்கள் அவர்களின் கைவினை வேலைகளிலும், பாரம்பரியத்திலும், உயிர்வாழ்வதிலும் நேரடியான ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கைவினைக் கலைஞர்களின் சமூகங்களினால் பருவநிலை மாற்ற நெருக்கடிகள் ஏற்படுவதில்லை என்றாலும், அவர்களும் பருவநிலை மாற்றத்தின் மிக மோசமான விளைவுகளினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். கைவினைக் கலைஞர்களின் பல சமூகங்கள் பருவநிலை மாற்றத்தின் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய வட்டாரங்களில் வசிக்கின்றனர். பருவநிலை மாற்றத்தினால் உண்டாகும் பேரிடர்களின் பாதிப்புக்கு அவர்கள் அதிக அளவில் உள்ளாகின்றனர். மேலும், சமூக, பொருளாதார, மற்றும் கலாச்சார ஏற்றத் தாழ்வுகளில் சிக்கியுள்ள பெண்களுக்குத்தான் பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு அதிகமாக உள்ளது.3.

**இந்தியாவில் ஏராளமாக உள்ள கைவினைக் கலைஞர்களின் எண்ணிக்கை சுமார் 200 மில்லியன் 4 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெண்கள் 56.13 சதவிகிதமாக 5 உள்ளனர். இந்தக் கைவினைக் கலைஞர்களுக்குப் பருவநிலை மாற்றங்களினால் நேரடியாக அல்லது மறைமுகமாக வெவ்வேறு அளவில் இடர் ஏற்படுகிறது.**

நீடித்த நிலையான மற்றும் மெதுவான ஃபாஷன் சிஸ்டம்களுக்காக தீர்வுகளை உருவாக்குவதில் கைவினைக் கலைஞர்கள் முன்னணியில் உள்ளனர். 2022-இல் உலக கிராஃப்ட் கவுன்சில் நடத்திய ஆய்வு 6 கைவினைக் கலைஞர்கள் தயாரிக்கும் பொருட்களினால் சுழல் பொருளாதாரம் உருவெடுப்பதாகத் தெரிவிக்கிறது. அவர்கள் ஒரு சமூகத்திற்கு உள்ளேயே பொருட்களைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் கழிவுகளையும், போக்குவரத்து மூலம் ஏற்படக்கூடிய கரும்புகை வெளியேற்றத்தையும் குறைக்கின்றனர். சுழல் பொருளாதாரத்தையும், தாக்குப்பிடித்து நிற்கக்கூடிய சுற்றுச்சூழலையும் வளர்க்கின்றனர். கைவினைக் கலைஞர்களுக்கு பழம்பெரும் பாரம்பரியங்களுடன் உள்ள ஆழ்ந்த தொடர்புகளும், வருங்காலத் தலைமுறையினருக்காக அவர்கள் விட்டுச் செல்லும் மரபுச் செல்வங்களும் அவர்களின் கைவினைக்குள்ளேயே இயற்கை சிஸ்டம்களை மறு உருவாக்கம் செய்து ஒருங்கிணைக்கும் சக்தியைத் தருகிறது என்று சுழல் பொருளாதாரம் பற்றிய இங்கிலாந்து கிராஃப்ட்ஸ் கவுன்சில் அறிக்கை 7 சுட்டிக்காட்டுகிறது.

இந்தியாவிலும், உலகெங்கிலும் உள்ள சுதேசி சமூகங்கள் தங்களது உள்ளூர் இயற்கைச் சூழலை ஆழப்புரிந்து கொண்டு, அங்கு கிடைக்கக்கூடிய பொருட்களை சரியான நியாயமான அளவில் பயன்படுத்துகின்றன. வெறுமனே பயன்படுத்துவது என்பதற்கு அப்பாற்பட்டு, மனிதர்களுக்கும், அவர்களின் கைவினைக் கலைகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையே பின்னிப் பிணைந்துள்ள உறவுகளை அவர்கள் அறிந்து வைத்துள்ளனர்.

பாரம்பரியக் கைவினைக் கலைகள் ஃபாஷன் மற்றும் துணித் தொழிலுடன் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன. இந்த ஃபாஷன் மற்றும் துணித்தொழில்தான் பருவநிலை மாற்றத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பைச் செய்கிறது. சுமார் 10 சதவிகித கரியமில வாயு வெளியேற்றம் ஏற்படுவதற்கு இதுதான் காரணமாக இருக்கிறது. ஃபாஷன் தொழில் நீர்வளத்தையும், ரசாயனப் பொருட்களையும் மிகவும் விரிவாகப் பயன்படுத்துகிறது. கழிவுகளை உருவாக்குகிறது. ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும் புதிய கலெக்ஷன்களை வெளியிடும் விரைவான ஃபாஷன் வளர்ச்சியினால் சுற்றுச்சூழல் பாதிப்பு பெரிய அளவில் நிகழ்கிறது. முன்பைவிட இப்போதுதான் நிலையான வாழ்க்கைக்கும், மிகவும் கவனமான பொருள் நுகர்வுக்கும் அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. ஃபாஷன்கள் நிலைத்திருக்க ஒரு வழியை பாரம்பரியக் கைவினைகளும், சுதேசி அறிவாற்றலும் வழங்குகின்றன.

இந்த சிஸ்டம்களும், செய்முறைகளும் தாக்குப்பிடித்து நிலைத்திருப்பதற்கும், சுழல் பொருளாதாரத்திற்கும் வழிகாட்டுகின்றன. கைத்தறித் துணிகளினால் கரியமில வாயு வெளியேற்றம் குறைவாக நிகழ்கிறது. விசைத்தறியில் தயாரிக்கப்படும் துணிகளுடன் ஒப்பிடுகையில், கைத்தறியினால் நெய்யப்படும் ஒவ்வொரு ஆடையினால், சுமார் 1.1 டன் கரியமில வாயுவை வெளியேற்றம் தவிர்க்கப்படுவதாக 9 மதிப்பிடப்பட்டுள்ளது. பாரம்பரியக் கைவினைக் கலைகள் உள்ளூரிலேயே கிடைக்கும் இயற்கையான பொருட்களைப் பயன்படுத்துகின்றன. அவற்றில் கையால் நெய்யப்படும் துணிகளில் செடிகொடிகளில் இருந்து கிடைக்கும் சாயங்கள் போடப்படுகின்றன. தவிரவும், இவை தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி வளரும் மூங்கில் போன்ற திரும்பத் திரும்ப முளைக்கும் பொருட்களைப் பயன்படுத்துகின்றன. கூடவே, கழிவு இல்லாத தயாரிப்பு நுட்பங்களையும், குறைவான கழிவுகளை உருவாக்குவதையும் கைவினைக் கலைகள் வலியுறுத்துகின்றன. மேற்கு வங்கத்தின் காந்தா எம்பிராய்டரியில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட துணிகளும், சேலைகளும் பயன்படுகின்றன. கிழிந்த துணிகளுக்கு மிகவும் நுட்பமான பூத்தையல் எம்பிராய்டரி மூலம் புத்துயிர் கொடுத்து, துணிக்கழிவுகள் குறைக்கப்படுகின்றன. மறுசுழற்சி மேம்படுத்தப்படுகிறது. இந்தியாவின் கலம்காரி கலைஞர்கள் துணிகளில் போடப்படும் மிகவும் நுட்பமான ஆர்ட்வொர்க்கிற்கு தாவர சாயத்தைப் பயன்படுத்துகின்றனர். குஜராத்தின் புஜ் பகுதியில் வசிக்கும் கத்ரி சமூகத்தினர் பாரம்பரிய பிளாக் பிரிண்ட் டெக்னிக் மூலம் தயாரிக்கப்படும் அஜ்ரக் பிரிண்ட் வேலைகளுக்கு பெயர் பெற்றவர்கள். அவர்கள் அவுரி, மஞ்சள், மடர் மற்றும் பல இயற்கையான பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் சாயங்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்களின் வேலைமுறைகள் வெறுமனே கலை வெளிப்பாடு மட்டுமல்ல, அவை பராமரிப்பு, பல்லுயிர்ப் பெருக்கம், மீட்சியாற்றல் என்பதை நமக்குக் கற்பிக்கின்றன. இதன் மூலம் தங்களது படைப்புகளில் புதைந்துள்ள நிலையான மதிப்பீடுகளை வெளிப்படுத்துகின்றனர். இந்த அறிக்கையில், நாம் விடை தேடும் ஒரு முக்கியமான கேள்வி என்னவெனில்:

**' ஃபாஷன் தொழிலில் தற்போது காணப்படும் சுற்றுச்சூழல் கேடுகளை ஒடுக்குவதில் நமது பழம்பெரும் கலைஞர்களுக்கு பங்குபணி உள்ளதா?''**

## 02 ஆராய்ச்சியின் நோக்கம்

இந்த அறிக்கை பின்வரும் முக்கியமான துறைகளை ஆராய்கிறது:

1. கைவினைக் கலைகள் மற்றும் கலைஞர்களுக்கு பருவநிலையால் ஏற்படும் பாதிப்பு: பருவநிலை மாற்றம் எவ்வாறு கைவினைத் தொழில்களையும், திறன்பெற்ற கலைஞர்கலின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுதல்.
2. கைவினைக் கலைகள் மற்றும் மெதுவாக உருவெடுக்கும் ஃபாஷன்: விரைந்து மாறிக் கொண்டே இருக்கும் ஃபாஷன் காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை எதிர்த்துப் போராடுவதில் கைவினைக் கலைகளும், சுழல் நடைமுறைகளும் எவ்வாறு முக்கிய பங்காற்றி நிலைமையை மாற்றுகின்றன என்பதை ஆராய்தல்.
3. பருவநிலைத் தீர்வுகளைக் கண்டறிதல்: கைவினைக் கலைகள் மூலமாகப் பருவநிலை மாற்றம் பிரச்சினையைச் சமாளிக்கக்கூடிய தற்போதுள்ள ஃபாஷன் மற்றும் ஜவுளி பிராண்டுகள், புத்தாக்கங்கள், முன்னெடுப்புக்கள் ஆகியவற்றைக் கண்டறிதல்.
4. நிலையான ஃபாஷன் எதிர்காலத்தை உருவாக்குதல்: ஐநா-வின் நிலையான வளர்ச்சி இலக்கை ( UN SDG 12) எட்டுவதில் கைவினைக் கலைகளுக்கு உள்ள பங்கையும், ஆற்றலையும் பற்றி மீண்டும் சிந்தித்தல். 'பொறுப்புவாய்ந்த நுகர்வு மற்றும் உற்பத்தி'. இது அறநெறி சார்ந்த, இயற்கைச் சூழலுக்கு நேயமான ஃபாஷன் பொருட்களின் உற்பத்தியினால் ஏற்படும் தேவைகளை நிறைவேற்றுலதில் முக்கிய பங்காற்ற முடியுமா?

இந்த அறிக்கை நிலையான ஃபாஷன் செயல்திட்டங்களை மறு உருவாக்கம் செய்வதில் கைவினைக் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையே இசைவான உறவு இருக்க வேண்டியதன் அவசரத் தேவையை வலியுறுத்தி, அதில் கவனத்தைப் புதுப்பிக்குமாறு எடுத்துரைக்கிறது. மேலும், பருவநிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பை அகற்றி, பொறுப்பு வாய்ந்த ஃபாஷன் மதிப்பீடுகளின் தொடரமைப்பை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றக் கூடிய வலுவான கைவினைக் கலைகளின் இயற்கைச் சூழலுக்கான நடவடிக்கையைத் தூண்டுவது இந்த அறிக்கையின் நோக்கமாகும்.



மும்பையில் தொடர்புடையவர்கள் பங்கேற்ற வட்டமேசை விவாதம்

படம்: ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

# 03.பருவநிலை மாற்றப் பிரச்சினைகள் உள்ள காலத்தில் கைவினைக் கலைகளைத் தேடிக்கண்டறியும் நமது பயணம்

கைவினைக் கலைகள், ஃபாஷன் மற்றும் நிலைத்திருத்தலுக்கு இடையிலான தொடர்பை உருவாக்குவதில் பிரிட்டிஷ் கவுன்சிலும், ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா அமைப்பும் பல ஆண்டுகளாக ஒத்துழைத்து வருகின்றன. எங்களுடைய முந்தைய கிராஃப்டிங் கனெக்ஷன்ஸ் புராஜெக்டுகளும், இயற்கைச் சூழல் பற்றிய கலந்துரையாடல்களும் கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்திற்குப் பிறகு கைவினைக் கலைகள் துறையை உருவாக்குவதில் எங்களுக்கு ஆழ்ந்த புரிதலை அளித்துள்ளன. ஒன்றன் பின் ஒன்றாக சவால்களைச் சமாளித்ததில், பருவநிலை மாற்றம்தான் நமக்கு மிக முக்கியமான சவாலாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டோம். இந்தச் சவாலைச் சமாளிப்பதற்கான செயல்திட்டங்களை உருவாக்கிட ஆழ்ந்த புரிதல் தேவை என்பதையும் கண்டுகொண்டோம். தாக்குப் பிடித்து வளரும் ஃபாஷன் தொழில் மற்றும் கைவினைக் கலைகளின் மீட்சி ஆற்றலில் கவனம் செலுத்தி, கைவினைக் கலைகளுக்கும், பருவநிலைக்கும் இடையே உள்ள இணைப்புக்களை ஆராய்வதில் ஆர்வம் கொண்டோம்.

## ஆராய்ச்சி முறை

2022 அக்டோபர் முதல் 2023 ஜூலை வரை இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. கைவினைச் சூழலுக்கு உள்ளே தரவுகளைச் சேகரிப்பதிலும், நிபுணர்களின் கருத்துக்களைப் பெறுவதிலும் பலவிதமான அணுகுமுறைகள் கலந்து பயன்படுத்தப்பட்டன. இந்த அணுகுமுறைகளில் தொடர்புடைய தொழில்துறையினரிடையே வட்டமேசை விவாதங்களை நடத்துதல், களப்பணிக்காகச் செல்லுதல், நேருக்கு நேர் சந்தித்து நேர்காணல்களை நடத்துதல் ஆகியன அடங்கும்.

**தொடர்புடைய தொழில்துறையினரின் வட்டமேசை விவாதங்கள்:**

ஐந்து தொடர்புடைய தொழில்துறையினரின் வட்டமேசை விவாதங்கள் நடத்தப்பட்டன. அவற்றில் நிபுணர்களும், தொடர்புடைய தொழில் பிரதிநிதிகளும், கல்வியாளர்களும், கைவினைக் கலைகள் மற்றும் ஃபாஷன் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் பங்கேற்றனர். இந்த வட்டமேசை விவாதங்கள் இந்தியாவில் புதுதில்லி, ஜெய்ப்பூர், பெங்களூரு, குவஹாத்தி, மும்பை ஆகிய நகரங்களில் நடைபெற்றன.

பயிலரங்குகளாகவும், விவாதங்களாகவும் இந்த வட்டமேசை விவாதங்கள் வடிவமைக்கப்பட்டன. இவற்றில் கைவினைத் துறையில் பாதிப்புக்கு உள்ளாகும் தன்மைகள், ஆண்-பெண் பாலின முக்கியத்துவம், பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப மாறிக் கொள்ளும் தன்மை, பாரம்பரியக் கைவினைக் கலைகளுடன் மெதுவான ஃபாஷன் வளர்ச்சி என்பதை பொருத்துதல், முதலீட்டு இடைவெளிகளை நிரப்புவதற்கான உத்திகள், கல்வி மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துதல், சவால்கள் மற்றும் வாய்ப்புக்களைக் கண்டறிதல் ஆகியனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த விவாதங்களின்போது வழக்கமான பேச்சுக்களுடன் கூடவே, டிஜிட்டல் முறையில் கலந்துரையாடல் தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டன. கேள்விகளுக்கு பங்கேற்றவர்கள் உடனுக்குடன் பதிலளிப்பதைக் காண முடிந்தது. இதனால் தரவுகளை திறம்பட ஒன்று சேர்த்து, முக்கியமான கேள்விகளை மதிப்பிட முடிந்தது. அறிவுப் பரிமாற்றத்திற்கும், கருத்துக்களை உருவாக்கவும் இது உதவியது. பொதுவான கருத்துக்களையும், பேட்டர்ன்களையும் அடையாளம் காண முடிந்தது.



படம்: ஃபாஷன் இந்தியா ரெவல்யூஷன்



படம்: ஃபாஷன் இந்தியா ரெவல்யூஷன்

**பங்கேற்ற குழுக்கள்**

இந்த ஆய்வில் கைவினைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், தொழில்முயற்சியாளர்கள், ஃபாஷன் மற்றுல் லைஃப்ஸ்டைல் தொழில்களில் உள்ள தொழில்முறையாளர்கள், கைவினைத் தொழிலிலும், பருவநிலை தொடர்பான துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற கல்வியாளர்கள், பொருத்தமான அரசு சாரா அமைப்புக்களின் பிரதிநிதிகள், குறு,சிறு & நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் அமைச்சகத்தின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், கைவினைத் தொழில் சூழலுக்கு உதவுகிறவர்கள், பருவநிலை மாற்றம் தொடர்பான நிபுணர்கள் என்று பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். பங்குபெற்ற தொடர்புடையவர்களின் பட்டியல் அறிக்கையின் முடிவில் தரப்பட்டுள்ளது.

**களப்பணிகளுக்காகச் செல்லுதல்**

ஆராய்ச்சியின்போது, பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியாவின் குழுக்கள் கைவினைத் தொழில் செய்பவர்களுடனும், கைவினைத் தொழில் முயற்சியாளர்களுடனும், புதிதுபுதிதாகப் பொருட்களை உருவாக்குகிறவர்களுடனும், மெதுவான ஃபாஷன் பிஸினஸில் இருப்பவர்களுடனும் கலந்துரையாடும் களப்பணிகளுக்காக அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்றன. தற்போது பருவநிலை மாற்றங்களினால் கைவினைத் தொழிலில் எந்த அளவுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதை நேரடியாகக் கண்டு ஆழ்ந்து புரிந்து கொண்டு, மிகச்சிறந்த நடைமுறைகளைக் கண்டறிந்து அறிக்கையில் சேர்ப்பது இதன் நோக்கம்.

11.11, பிரிகிட் சிங், ரங்ரெஸ் கிரியேஷன், தரங்கிணி ஸ்டூடியோ, விமோர் ஹேண்ட்லூம் ஃபவுண்டேஷன், அனோக்கி மியூஸியம் ஆஃப் ஹேண்ட் பிரிண்ட்டிங், பகாரா பாரம்பரிய உடைகளைத் தயாரிக்கும் இடங்கள், அசாமில் ஹஸ்லி செரிகல்ச்சர் பண்ணை ஆகிய இடங்களுக்கு நாங்கள் சென்றோம்.





**நேருக்கு நேர் நேர்காணல்கள்:**

எங்களுடைய ஆராய்ச்சியின் அடித்தளமாக நாடு தழுவிய கலந்தாய்வுகள் இருந்தன என்றாலும், ஆய்வின் குறிப்பான அம்சங்கள் குறித்து ஆழமாக தகவல்களையும், கருத்துக்களையும் பெறுவதற்காக தொடர்புடையவர்களுடன் ஒவ்வொருவராக தனித்தனி நேர்காணல்களும் நடத்தப்பட்டன.

## கட்டுப்பாடுகள் & கற்ற பாடங்கள்

எங்களுடைய ஆய்வின் வாய்ப்பு மற்றும் அது பயன்படும் தன்மையைப் பாதிக்கக்கூடிய சில கட்டுப்பாடுகளை நாங்கள் எதிர்கொண்டோம்.

1. ஐந்து நகரங்களிலும், தொடர்புடைய 160 பேர்கள் மீதும் நாங்கள் கவனம் செலுத்தியது விரிவானதாக இருந்த போதிலும், இந்தியக் கைவினைச் சூழலின் பரந்து விரிந்த பலதரப்பட்ட பகுதிகளை முழுவதுமாக உள்ளடக்கியதாக இல்லை.
2. பருவநிலை மாற்றங்களினால் கைவினைக் கலைஞர்களின் சமூகங்களில் ஏற்படக்கூடிய நேரடிப் பாதிப்பை ஆராய்வதற்காக விரிவான தரவுகள் கிடைக்காததால், எந்த அளவுக்கு இதன் பாதிப்பு இருக்கிறது என்பதை எங்களால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.
3. கைவினை என்பதில் பல்வேறு உட்குழுக்களும், பொருட்களும் அடங்கியிருக்கும் போது, எங்களுடைய முழுமுதல் கவனமும் ஃபாஷன், லைஃப் ஸ்டைல், மற்றும் டெக்ஸ்டைல் தொடர்பான கைவினைகளிலேயே இருந்தது.
4. எங்களுடைய ஆராய்ச்சித் திட்டத்துக்கு காலவரையறைக் கட்டுப்பாடும் இருந்தது. இதனால், பருவநிலை மாற்றத்தினால் எந்த அளவுக்கு கைவினைத் தொழிலில் தாக்கம் ஏற்படுகிறது என்பதை எங்களால் முழுமையாகச் சேகரிக்க முடியவில்லை. அதேபோல, இந்தியாவின் கைவினைத் தொழில் துடிப்பு மிக்கதாக உள்ள நிலையில், அதன் அகலவீச்சுக்கு ஏற்ப சவால்களைக் கண்டறிந்து, தீர்வுகளைக் காண இயலவில்லை.
5. இந்தியாவில் உள்ள முறையான மற்றும் முறைசாராத பொருளாதாரங்களுக்கு இடையே வேறுபடுத்திப் பார்ப்பதிலும் எங்களுடைய ஆராய்ச்சிக்கு கட்டுப்பாடுகள் இருந்தன. இந்தியக் கைவினைத் தொழிலில் தனித்தனியாக வீடுகளில் வேலை செய்யும் கைவினைக் கலைஞர்கள் முதற்கொண்டு பெரிய தயாரிப்புத் தொழிற்சாலைகள் வரை வேறுபட்ட பல உற்பத்தி முறைகள் உள்ளன. முறைசாராத் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைப் பார்க்கும்போது, மேலும் அதிக அளவில் டேட்டா அடிப்படையிலான ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

பருவநிலை மாற்ற நெருக்கடிகளுக்கு உட்பட்டு, தொடர்ந்து தாக்குப்பிடித்து வளர்ந்து வரும் கைவினைத் தொழில் பற்றி நாங்கள் ஆராய்ந்தபோது, இந்த அறிக்கைதான் ஒரு ஆரம்பமாக உள்ளது என்பது எங்களுக்குத் தெரிய வந்தது. கைவினைத் தொழிலுக்கும், அது தாக்குப்பிடித்து நிலைத்திருப்பதற்கும், பருவநிலை நெருக்கடிகளுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை தொடர்புடையவர்களின் கண்ணோட்டத்தில் இந்த அறிக்கை எடுத்துக் காட்டும் வேளையில், இந்தக் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில், இந்த சிக்கல் நிறைந்த துறை பற்றி மேலும் அதிக செழுமையாகவும், விரிவாகவும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.



# II. முக்கிய கண்டுபிடிப்புகள்: கைவினைத் தொழில், பருவநிலை மாற்ற நெருக்கடிகள், மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் ஃபாஷன்

இந்த அத்தியாயத்தில் கைவினைத் தொழிலுக்கும், ஃபாஷன் தொழிலுக்கும், நீடித்த நிலையான வளர்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பு ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. இது கைவினைத் தொழிலின் அடிப்படை சாரம், அது தோற்றுவிக்கப்பட்ட சித்தாந்தக் கருத்துக்கள், தற்காலத்தில் அது எந்த அளவுக்குப் பொருத்தமாக உள்ளது என்பதை இது ஆராய்கிறது.

மேலும், கைவினைத் தொழிலில் அதற்குள்ளேயே பொதிந்திருக்கும் தாக்குப்பிடிக்கும் திறனை இது கண்டறிந்து, பருவநிலையை சாதகமாக்கிக் கொண்டு, தொடர்ந்து வளரும் மெதுவான ஃபாஷன் இயக்கத்திற்கு பங்களிக்கும் ஆற்றலையும் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

படம்: பிரிட்டிஷ் கவுன்சில்


GADDI WOOL
CHOKLA WOOL

# 04.. கைவினைத் தொழிலையும், ஃபாஷன் தொழிலையும் பின்னிப்பிணைக்கும் இழைகள்

மொத்தம் சுமார் 200 மில்லியன் 10 கைவினைக் கலைஞர்கள் இருப்பதாகவும், அவர்களில் 56 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் 11 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பலதரப்பட்ட கைவினைத் தொழில்கள் உள்ளன. அவை வீட்டு உபயோகப் பொருட்கள், துணிகள், ஃபாஷன், நகைகள், லைஃப்ஸ்டைல் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் என்று பல்வேறு விதமாக படைப்புப் பொருளாதாரத்திற்குக் கணிசமாகப் பங்களிக்கின்றன.

இந்தியக் கைவினைத் தொழிலின் பொருளாதார முக்கியத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. இந்தியாவின் மொத்த உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கைவினைத் தொழிலின் பங்களிப்பு சுமார் 2 சதவிகிதமாக இருப்பதாக தேசிய சாம்பிள் சர்வே அலுவலகம் (NSSO)12 தெரிவிக்கிறது. இது பில்லியன் டாலர்கள் கணக்கில் இருக்கும். இது இந்தியாவின் ஏற்றுமதித் தொழிலிலும் முக்கிய பங்காற்றுகிறது. 2021 ஏப்ரல் முதல் 2022 பிப்ரவரி வரை ரூ. 1693 கோடி (யுஎஸ் $229 மில்லியன்) மதிப்புக்கு கைத்தறித் துணி தயாரிப்புக்களை இந்தியா ஏற்றுமதி செய்திருப்பதாக கைவினைப் பொருட்களின் ஏற்றுமதிப் பெருக்க கவுன்சில் (EPCH) தெரிவிக்கிறது 13. இந்தியக் கைவினைப் பொருட்களின் மார்க்கெட் 2022-இல் யுஎஸ் $ 6.2 பில்லியனாக உயர்ந்தது. இது 2028-இல் பிரம்மாண்டமாக வளர்ந்து யுஎஸ் $ 6.2 பில்லியனாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.14 இதில் இருந்து இந்தியக் கைவினைப் பொருட்களுக்கு உலகில் கிராக்கி அதிகரித்துவ் வருவதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஃபாஷன் மற்றும் ஜவுளித் தொழிலுடன் கைவினைப் பொருட்கள் தயாரிப்புத் தொழில், குறிப்பாக கைத்தறித் துணிகள் மற்றும் ஆடைகள் தயாரிப்பு எவ்வாறு பொருந்துகிறது என்பதில் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. நாட்டில் வேலைவாய்ப்புத் தருவதில் ஜவுளித் தொழிலுக்கு இரண்டாவது இடம் என்றும், அது நேரடியாக 45 மில்லியன் மக்களுக்கு வேலைகளை வழங்குவதாகவும், மேலும் 100 மில்லியன் மக்களுக்கு ஜவுளித் தொழிலைச் சார்ந்திருக்கும் துறைகளில் வேலைகள் கிடைப்பதாகவும் இன்வெஸ்ட் இந்தியா தனது அறிக்கையில் தெரிவிக்கிறது. உலகளாவிய நிலையில் இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடைகள் வாணிபம் கணிசமான பங்களிப்பை அளிக்கிறது. இந்த வகையில், உலகிலேயே ஆறாவது மிகப்பெரிய ஜவுளி ஏற்றுமதி நாடாக இந்தியா திகழ்கிறது. இது யுஎஸ் $100 பில்லியனாக இருப்பதாகவும், 2025-26-இல் யுஎஸ் $190 பில்லியனாக உயர்ந்துவிடும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக ஜவுளித் துறையில் இந்தியா தனிச்சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பதற்கு அதனுடைய ஈடிணையற்ற பாரம்பரிய கைவினைத் திறன் ஒரு காரணம் ஆகும். உலகில் கைநெசவு துணிகள் தயாரிப்பில் இந்தியாவின் பங்களிப்பு 95 சதவிகிதமாக பிரம்மிப்பூட்டும் வகையில் உள்ளது 17. இதில் பருத்தி, சணல், பட்டுத் துணிகள் அடங்கும். கைவினைத் திறன் எப்போதுமே ஃபாஷன் தொழிலின் மையமாகத் திகழ்கிறது. தத்தமது கைவினைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் தயாரிக்கும் துணிகள் செயல்நோக்கத்தை நிறைவேற்றுவதோடு, கலாச்சாரத்தைப் பிரதிபலித்து, படைப்பாற்றலை எடுத்துக் காட்டி பல கதைகளைக் கூறுவதாக உள்ளன. கைகளால் நெய்யப்படும் துணிகளில் இருந்து மிகவும் நுட்பமான எம்பிராய்டரி வரை ஃபாஷன் காட்சிகளை உருவாக்குவதில் கைவினைப் பாரம்பரியம் முக்கிய பங்காற்றியுள்ளது.



படம்: டெல்பைன் பாவ்லிக்

# கைவினைத் தொழிலையும், ஃபாஷன் தொழிலையும் பின்னிப்பிணைக்கும் இழைகள்

**மூலப்பொருட்கள் உற்பத்தி :** ஃபாஷன் பொருட்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை பெரும்பாலும் கைவினைக் கலைஞர்களே உற்பத்தி செய்கின்றனர். உதாரணமாக, அறநெறி சார்ந்த ஃபாஷன் பிராண்டுகளைத் தயாரிப்பதற்காக வாங்கப்படும் காதி காட்டன் போன்ற துணிகளை இந்தியாவின் கிராமங்களில் வசிக்கும் நூற்பாளர்களும், நெசவாளர்களும் கைகளினால் நூற்று, கைத்தறிகளில் நெய்து உறபத்தி செய்கின்றனர்.

**துணி உற்பத்தி:** இது மூலப்பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் துணியாகும். இதைத் தயாரிப்பதற்கு கைவினைத் திறன் தேவைப்படுகிறது. சில உதாரணங்கள்:

1. நூற்பு: கச்சா நார்களை நூல்களாகவும், இழைகளாகவும் கைவினைக் கலைஞர்கள் உருமாற்றம் செய்கின்றனர். எடுத்துக் காட்டாக, இந்தியாவில் காதி நூல் கையால் நூற்கப்படுகிறது.
2. நெசவு: நூல்களைப் பின்னிப்பின்னி துணியாக மாற்றிட கைவினைக் கலைஞர்கள் கைத்தறிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்தியா உள்பட பல நாடுகளில் கைத்தறி நெசவு காணப்படுகிறது. இங்கு மஸ்லின் , இக்கத் போன்ற பாரம்பரிய ஆடைகளைத் தயாரிப்பதற்கு கைத்தறிகள் பயன்படுத்தப்படுகின்றன.
3. பின்னல்/குரோஷெட்டிங்: சில கைவினைக் கலைஞர்கள் இந்த நுட்பங்களைப் பயன்படுத்தி துணிகளை உற்பத்தி செய்கின்றனர். உதாரணமாக, அயர்லாந்தில் கைகளால் பின்னப்படும் உல்லன் ஆடைகளும், தென்னமெரிக்காவில் கைகளால் செய்யப்படும் குரோஷே வேலைப்பாடு உள்ள ஆடைகளும் மிகவும் பிரபலமானவை.

**மேல்பரப்பு டிசைன்:** இது துணியின் மேற்பரப்பில் அலங்காரமாக போடப்படும் டிசைன் ஆகும். இது ஆடைகளின் அழகை அதிகரிக்கச் செய்கிறது. இது துணியைத் தயாரித்த பிறகு போடப்படுகிறது. துணியின் மேல்பரப்பின் மீது டிசைன்கள் போடுவதற்கு பல டெக்னிக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் சில:

1. பிளாக் பிரின்ட்டிங்: செதுக்கப்பட்ட மரக்கட்டைகளை கைவினைக் கலைஞர்கள் பயன்படுத்தி, அவற்றை சாயத்தில் தோய்த்து துணிகளின் மீது அச்சுப் பதிக்கின்றனர். இந்தியாவில் அஜ்ரக் மற்றும் டாபு, இந்தோனேசியாவில் பத்திக், ஆகியன உலகப்புகழ் பெற்ற பிளாக் பிரிண்ட் டிசைன்களாகும்.
2. எம்பிராய்டரி: துணிகளின் மீது கைவினைக் கலைஞர்கள் பேட்டர்ன்களை தைக்கின்றனர். இதில் இந்தியாவின் மிகவும் நுட்பமான ஜர்டோஸி பூத்தையல் முதல் மெக்சிகோவின் கலர்கலரான ஒட்டோமி எம்பிராய்டரி வரை மிகவும் பிரபலமானவை.
3. சாயம் தோய்த்தல்: கைவினைக் கலைஞர்கள் வெவ்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி துணிகளின் மீது சாயம் தோய்க்கின்றனர். சாயத்தைத் தோய்ப்பதன் மூலம் துணிகளில் பேட்டர்ன்களை உருவாக்குகின்றனர். இதற்கு உதாரணமாக, ஜப்பானின் ஷிபோரி மற்றும் இந்தியாவின் பந்தினி ஆகியவற்றைக் கூறலாம்.
4. பெயின்ட்டிங்: சில கைவினைக் கலைஞர்கள் துணிகளின் மீது கையால் படம் வரைகின்றனர். இந்தியாவில் கலம்காரி, அல்லது சீனாவிலும், வியத்நாமிலும் சில்க் பெயிண்ட்டர்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**ஆடை உற்பத்தி:** ஆடம்பரமான, ஹை குவாலிட்டி மார்க்கெட்டுகளில் கைவேலைப்பாடுடன் கூடிய ஆடைகள் மிகவும் பிரபலமடைகின்றன. கையால் போடப்படும் பூத்தையல் எம்பிராய்டரி, லேஸ் வேலைப்பாடுகள், பீடிங் என்னும் மணிகளை ஆடையின் விளிம்பில் கோர்ப்பது மற்றும் இவை போன்ற இதர கைவேலை டெக்னிக்குகளால் ஆடைகளின் மதிப்பு கூடுகிறது. பிரான்ஸில் உள்ள ஆடை அலங்கார நிறுவனங்கள் பெரும்பாலும் கைவினைக் கலைஞர்களை வேலைக்கு அமர்த்தி நவநாகரிக கலெக்ஷன்களில் மிகவும் நுட்பமாகவும், விரிவாகவும் கைத்தையல் போடுவதற்கு ஏற்பாடு செய்கின்றன.

**தயாரிப்பின் இறுதியில் செய்யப்படும் நகாக வேலைகள்:** கைப்பைகள், ஷூக்கள், மற்றும் ஆடைகள் ஆகியன உள்ளிட்ட பல ஃபாஷன் பொருட்கள் கலைநுட்பம் வாய்ந்த கைவேலைப்பாடுகளால் அழகுபடுத்தப்படுகின்றன. உதாரணமாக, மொரோக்கோ நாட்டின் கைவினைக் கலைஞர்கள் உலகெங்கும் விற்பனையாகும் ஹை - ஃபாஷன் பொருட்களில் எம்பிராய்டரி மற்றும் பீடிங் வேலைப்பாடுகளை கைகளால் செய்கின்றனர்.

**அக்ஸெஸரி கிராஃப்டிங்:** அக்ஸெஸரி எனப்படும் அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் கைவினைக் கலைஞர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். கானா நாட்டின் கைகளால் பின்னப்படும் கூடைகள் ஆகட்டும், கீன்யா நாட்டின் கைகளால் மணிகளைக் கோர்த்து செய்யப்படும் நகைகள் ஆகட்டும், அல்லது இத்தாலியின் லெதர் பொருட்கள் ஆகட்டும், ஃபாஷன் அக்ஸெஸரி மார்க்கெட்டின் அடிப்படையாகத் திகழ்கின்றன.

**கழிவுகளைப் பயன்படுத்துதல் மற்றும் மறு சுழற்சி:** கைவினைக் கலைஞர்கள் சுழல் முறையில் ஃபாஷன் பொருட்களைத் தயாரிப்பதில் முக்கிய பங்காற்ற முடியும். அவர்கள் ஃபாஷன் கழிவுகளைப் பயன்படுத்தி புதிய ஃபாஷன் பொருட்களை உற்பத்தி செய்ய முடியும், மேலும், சுழற்சி முறையில் பழைய ஃபாஷன் பொருட்களில் இருந்து புதிய ஃபாஷன்களை உருவாக்க முடியும். உதாரணமாக, ஒட்டுத் துணிகளைக் கொண்டு, பேட்ச் ஒர்க் ஐட்டம்களை உருவாக்க முடியும் அல்லது பயன்படுத்திய உடைகளைக் கொண்டு புதிய ஃபாஷன் பொருட்களை தயாரிக்க முடியும்.

**விரைவில் இருந்து மெதுவான உற்பத்தியை நோக்கி மாறுவது**

உலகின் மிக அதிக அளவில் ஃபாஷன் உற்பத்தியாளர்களையும், நுகர்வோரையும் கொண்டிருக்கிற இந்தியாவுக்கு, பொறுப்புணர்ச்சியோடு ஐநா-வின் நிலையான வளர்ச்சி இலக்கை ( UN SDG 12) எட்டுவதற்காக நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதில் முக்கிய பங்குள்ளது. ேசமீபத்திய பத்தாண்டுகளில் உணவு மற்றும் எலக்ட்ரானிக்ஸ் தொழில்களைப் போலவே, ஃபாஷன் தொழிலும் வேகவேகமாக அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்னும் பேராசைக்கு இரையாகி விட்டது. ' அதிகம், வேகம், மலிவு' என்பதை மூலமந்திரமாகக் கொண்டுள்ள இன்றைய காலகட்டத்தில், நீடித்து உழைப்பது என்பதை விட அப்புறப்படுத்துவது என்னும் பண்பு வளர்ந்து விட்டது.

ஓராண்டில் நான்கு ஃபாஷன் சீசன்கள் மட்டுமே இருந்த நிலை மாறி, இப்போது 52 சீசன்கள் என்னும் நிலைக்கு ஃபாஷன் தொழில் மாறிவிட்டது. இப்போது அல்ட்ரா ஃபாஸ்ட் ஃபாஷன் உருவெடுத்து, ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக புதிய ஆடைகள் மார்க்கெட்டில் குவிக்கப்படுவதால், இதற்கு முன்பு ஒருபோதும் இருந்திராத அளவுக்கு உபயோகிப்பு அதிகரித்து விட்டது. எனினும், இந்த மாதிரியான வளர்ச்சியில் உள்ளுக்குள்ளேயே கோளாறுகள் உள்ளன. மூலப்பொருட்கள் இடைவிடாமல் பயன்படுத்தப்படுவதாலும், அளவுக்கு அதிகமாக எரிசக்தி பயன்பாடு அதிகரித்து விட்டதாலும், கழிவுகள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. இதனால், வளங்கள் குறைந்து, சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்பட்டுவிட்டது. குறைவாக தயாரிப்பது என்பதே காலம் காலமாக கைவினைத் தொழிலின் கோட்பாடாக இருந்து வந்தது. இது இன்றைய ஃபாஸ்ட் ஃபாஷன் கொள்கைக்கு முரணாக இருக்கிறது. இந்த மாற்றத்தினால் சமூகங்களின் கலாச்சார அடையாளம் பறிக்கப்பட்டதோடு, இயற்கைச் சூழல் சீர்கெட்டு, பருவநிலை மாற்ற நெருக்கடியைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் நிலையான செய்முறைகள் மறைந்து விட்டன.

**' நாம் அல்ட்ரா ஃபாஸ்ட் ஃபாஷன் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது நீடித்து உழைப்பது என்பதை விட அப்புறப்படுத்துவது என்னும் பண்புக்கு மதிப்பளிக்கிற காலமாக உள்ளது. இதில் "அவுட்ஃபிட் ஆஃப் தி டே (OOTD) " என்னும் கருத்துக்கு முன்னுரிமை தரப்பட்டு, காலவரம்பற்ற ஸ்டைல் என்பது அல்லது பேணிக்காப்பது என்னும் பண்பு வேகவேகமாக மறைந்து விட்டது. '**

**-ஷ்ருதி சிங், கண்ட்ரி தலைவர்,**

**' பெருமெடுப்பில் மாற்றம் நிகழும் நிலையில் நாம் இருக்கிறோம். இதை கைவினைத் தொழில்கள் துரிதப்படுத்த முடியும்.'**

**-ஆண்ட்ரூ மோர்லெட், சி இ ஓ, எல்லென் மக் ஆர்தர் ஃபவுண்டேஷன், இங்கிலாந்து**

இன்றைக்கு உலகளாவிய நிலையில் 10 சதவிகித கரியமில வாயு வெளியேற்றம் ஃபாஷன் தொழிலினால் நிகழ்கிறது 18. ஃபாஸ்ட் ஃபாஷன் காரணமாக புதுப்பிக்க முடியாத வளங்கள் குறைந்து, வெப்பவாயு வெளியேற்றம் அதிகரித்து, அளவுக்கு அதிகமாக தண்ணீரும், எரியாற்றலும் பயன்படுத்தப்படுவதால், சுற்றுச்சூழல் கெடுக்கப்படுகிறது. ஜவுளித் தயாரிப்புத் தொழில் மூலம் வெளியேறும் வெப்பவாயு 2030-ஆம் ஆண்டுக்குள் 60 சதவிகிதமாக அதிகரிக்கும் என்று ஐநா பருவநிலை மாற்றம் கட்டமைப்புக் கோட்பாடு மதிப்பிட்டுள்ளது 19.

பருவநிலை மாற்றத்தின் நடைமுறை உண்மை நிலையையும், வளங்கள் குறைந்து வருவதையும் நாம் புரிந்து கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், இந்த மாதிரியான ஃபாஷன் மாடல் நிலைத்திருக்க முடியாது என்றும், இதுபற்றிய அடிப்படை மறுசிந்தனை உருவாக வேண்டும் என்றும் உலகெங்கும் உணரப்பட்டு வருகிறது. பொறுப்போடு உபயோகம், அர்த்தத்துடன் வளங்களைப் பயன்படுத்துவது, ஃபாஸ்ட் ஃபாஷன் பண்பை நிராகரிப்பது என்ற அடிப்படையில் நிலையான ஃபாஷன் தேவை என்று அறைகூவல் விடுக்கப்படுகிறத். மக்களையும், சுற்றுச்சூழலையும் மதிக்கிற ஒரு தயாரிப்பு முறை தேவை என்று வாதிடப்படுகிறது. நுகர்வு அடிப்படையில் இயங்கும் நமது சமூகத்தினால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவது பற்றிய விழிப்புணர்வு அதிகரித்துள்ளதால் உபயோக முறையில் ஏற்பட்டுள்ள உலகளாவிய மாற்றம் குறிப்பாக ஜவுளித் தொழிலிலும், கைவினத் தொழில்களிலும் பிரதிபலிக்கிறது. உபயோகிப்பாளர்கள் 'ஃபாஸ்ட்' என்பதில் இருந்து 'மெதுவாக' என்னும் நிலைக்கு மாறி வருகின்றனர்.

இப்படி நிலைமை மாறிக் கொண்டிருக்கும் நிலையில், நீடித்து நிலைத்திருந்து பொறுப்போடு ஃபாஷன் சப்ளை தொடரமைப்பை உலகம் நாடுகிறது. பிரத்யேகமான, அறநெறிகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்படும், நீடித்த நிலையான ஃபாஷனை உலகெங்கும் உள்ள நுகர்வோர் அதிக அளவில் தேடி வருகின்றனர். இப்படிப்பட்ட நிலையில், ஃபாஷன் சப்ளை தொடரமைப்புக்குள் கைவினைக் கலைகள் மற்றும் கலைஞர்களின் பங்களிப்பு வளர்ச்சி அடையப்போகிறது. பொறுப்பு உணர்வோடு பொருளைப் பயன்படுத்தும் ஒரு நிலைக்கு மாறுவதால், உள்ளூர் கைவினைக் கலை மரபுகளை ஆதரித்து, நிலையான வாழ்வாதாரங்களை வளர்த்து, சுற்றுச்சூழல் கேடுகளைப் போக்குவதற்காக ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை அசோக் சாட்டர்ஜியின் கூற்று மிகச்சரியாக எதிரொலிக்கிறது: ' கைவினைத் தயாரிப்புக்கள் வெறுமனே பொருட்கள் மட்டுமல்ல; அவை அறிவு, கலாச்சாரம், நிலைத்திருத்தல் ஆகியவற்றின் கருவூலங்களாக உள்ளன. அதிக நல்லிணக்கமுள்ள, நிலையான உலகை உருவாக்கிட இவற்றைப் பேணிக்காத்து வளர்ப்பது நம்முடைய பொறுப்பாகும்.'

## மெதுவான பேஷன் புரட்சியின் பின்னணியில் உந்து சக்திகள்

1. **இயற்கைச் சூழல் பற்றிய விழிப்புணர்வு இயக்கத்தில் செல்வாக்கு செலுத்தும் தலைமுறை Z:** 1995-க்கும் 2912-க்கும் இடையே பிறந்த தலைமுறை Z மக்கள் உலக மக்கள் தொகையில் 26 சதவிகிதமாக உள்ளனர். டிஜிட்டல் யுகம், சுற்றுச்சூழல் நெருக்கடிகள், பொருளாதாரக் கொந்தளிப்புகள் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுப் பரவலின் பாதிப்புக்கள் இந்தத் தலைமுறை மக்களின் கருத்துக்களை உருவாக்கியிருப்பதால், இவர்கள் நிலைத்திருக்கும் விஷயங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். 'பொறுப்புணர்வோடு கூடிய நுகர்வு' என்பதை நோக்கி இவர்கள் சிந்திப்பதால், 26 சதவிகித மக்கள் நீடித்து நிலைத்திருக்கும் பிராண்டுகளைத்தான் விரும்புகின்றனர் என்று மெக்கின்ஸி ஆய்வு புலப்படுத்துகிறது. இதற்காக ஒரு விலை கொடுக்கவும் அவர்கள் தயங்குவதில்லை என்று அதன் அறிக்கை கூறுகிறது. எனினும், இது போன்ற நெறிகளுக்கும், பொருள் வாங்கும் உண்மையான பழக்கத்திற்கும் இடையே இடைவெளி இருப்பதால், அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றதாக கைவினைத் தொழிலை வளர்க்க வேண்டியுள்ளது. இது கடந்து சென்று மங்கிப் போகும் ஒரு துடிப்பாக இல்லாமல் இயக்கு சக்தியாக இதை மாற்ற வேண்டியுள்ளது.
2. **D2C எழுச்சியும், அதனுடன் கைவினைக் கலைகளுக்கு இருக்கும் தொடர்பும்:** குறு சிறு நடுத்தரத் தொழில்முயற்சியாளர்கள் நேரடியாக நுகர்வோருக்கு என்னும் D2C இயக்கத்தை நோக்கி வழிநடத்துகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமான நோக்கங்கள் உள்ள போதிலும், தங்களது பிராண்டின் கைவினைக் கதைகளை விவரிப்பதில் ஒன்றுபட்டுள்ளனர். டிஜிட்டல் முன்னேற்றங்களினால் வேகம் பெற்று இயங்கும் D2C இயக்கம், நுகர்வோரை நேரடியாக கைவினைத் தொழில் பிஸினஸில் நேரடியாக ஈடுபடுத்தப்படுவதை அனுமதிக்கிறது. பொருளின் தரத்திலும், சப்ளை தொடரமைப்பிலும், நுகர்வோருக்கு ஈடிணையற்ற கட்டுப்பாட்டை வழங்கி, நுகர்வோருடன் நெருக்கமான உறவை வளர்க்கிறது. இந்த மாதிரியான அணுகுமுறையில் மதிப்புமிக்க கருத்துக்கள் நுகர்வோரிடம் இருந்து கிடைப்பதோடு, வழக்கமான சில்லறை விற்பனை முறையில் கிடைப்பதைக் காட்டிலும் அதிக லாபம் அடிக்கடி கிடைக்கிறது.
3. **நிலைத்திருக்கும் உற்பத்தியை ஆதரிக்கும் சட்டங்கள்:** உற்பத்தி முறைகளால் சுற்றுச்சூழலுக்கு கேடு ஏற்படுவதைக் கட்டுப்படுத்திட கண்டிப்பான ஒழுங்குமுறை விதிகளை உலகெங்கும் அரசுகள் செயல்படுத்துகின்றன. இந்த ஒழுங்குமுறை விதிகள் புதுப்பிக்கவல்ல எரிசக்தியைப் பயன்படுத்துவதையும், கழிவுகளைக் குறைப்பதையும், சுழல் பொருளாதார மாடலைப் பின்பற்றுவதையும் ஆதரிக்கின்றன. பெரிய நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களின் ஆயுள் சுழற்சிக்கு அவற்றையே இந்த நடவடிக்கை பொறுப்பாக்குவதால், நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு என்னும் (EPR) திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் கழிவுகளைக் குறைத்து, வளங்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவதற்கு அதிக முதலீடு செய்யப்படுகிறது.



படம்: டெல்பைன் பாவ்லிக்

## வட்டமேசை விவாதங்களின் கலந்துரையாடல்கள்

"பருவநிலை மாற்றம் என்னும்போது, நீடித்த நிலையான தன்மை என்பதை விட்டுக் கொடுக்காமல், பாரம்பரிய அறிவையும், விஞ்ஞான அறிவையும் ஒருங்கிணைப்பது ஒரு சவாலாக இருக்கிறது. தண்ணீர் பயன்பாடு ஆகட்டும், வளவளங்களைப் பேணிக் காப்பது ஆகட்டும், அபாயகரமான கெமிக்கல்களைத் தவிர்ப்பது ஆகட்டும், அல்லது தூய்மையான எரிசக்தியை பயன்படுத்தும் திட்டமாகட்டும் இந்த நடைமுறைகளை நாங்கள் பணியாற்றும் சமூகங்களிடையே பரப்பிட நாங்கள் முயன்று வருகிறோம்.'

**சௌமார் சர்மா, நிறுவனர், இந்தியன் வீவர்ஸ் அலயன்ஸ் இன்க்**

"பருவநிலை மாற்றம் மற்றும் ஃபாஷன் என்று வரும்போது, நாம் ஏராளமாக உற்பத்தி செய்வதிலும், ஏராளமாக பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறோம். ஆனால் கைவினையைப் பொறுத்தமட்டில், சிறியதுதான் அழகானது என நம்புகிறோம். குறைவாக உற்பத்தி செய்தாலும் நல்ல தரமானதாக இருக்க வேண்டுமென விரும்புகிறோம்; அதைத்தான் நாம் மேம்படுத்த வேண்டியிருக்கிறது."

**டாக்டர் டூலிக்கா குப்தா, டைரக்டர், ஐஐசிடி**

படம்: ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

" இன்றைக்கு, எந்த ஒரு ஃபாஷனாக இருந்தாலும் மிக அதிக அளவில் பயன்படுத்தும் கஸ்டமர்கள் GenZ என்னும் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எதையும் விரைவாக நுகர்வோராக உள்ளனர். இப்போது இதை எப்படி மாற்றுவது? ஒரே வழி, அவர்களுடைய மொழியிலேயே பேசி, அவர்கள் விரும்பியபடி டிசைன் செய்து, அவர்களுக்குத் தேவையான தகவல்களை அவர்களுடைய மொழியிலேயே கொடுப்பதன் மூலமே மாற்ற முடியும்."

**நிமிஷா சாரா பிலிப், இம்பேக்ட் இன்வெஸ்ட்மென்ட் முக்குரைஞர்**

" இளைஞர்களுக்கு ஆசையைத் தூண்ட வேண்டும். ஸாரா ஆசைப்படுவதைப் போல. கிராமங்களுக்குப் போய், நல்லதைப் பற்றிப் பேச வேண்டும். அப்போது 20 ரூபாய் வைத்திருக்கும் ஒரு சிறுவன் ஓடிப்போய் ஒரு பாக்கெட் சிப்ஸ் வாங்க விரும்புகிறான் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள், ஏனென்றால் சிப்ஸ் பற்றி நல்ல விளம்பரங்கள் வருகின்றன. அவர்கள் மிகவும் ஆரோக்கியமான வாழைப்பழத்தை வாங்குவதில்லை. எனவே, அவர்களுக்கு வாழைப்பழம் மீதான ஆசையைத் தூண்ட வேண்டும். அப்படித்தான் மாற்ற முடியும்."

**டாக்டர் டூலிக்கா குப்தா, டைரக்டர் ஐஐசிடி**

" GenZ என்னும் புதிய தலைமுறையினர் பருவநிலை பற்றி மிகவும் அக்கறை கொள்கின்றனர். ஆனாலும், OOTD போன்ற சமூக ஊடகங்களினால் தூண்டப்படும் அல்ட்ரா -ஃபாஷன் எழுச்சி பெறுவதை நாம் காண்கிறோம். தங்களது தனித்தன்மையையும், படைப்பாற்றலையும் பிரதிபலிக்கக்கூடிய ஃபாஷனை அவர்கள் விரும்புகின்றனர். இதனால்தான் சேமிப்புப் பழக்கம் அதிகரிக்கிறது. இங்கு கைவினைகள் முக்கிய பங்காற்ற முடியும். இது இருவேறு உலகங்களைப் பற்றியது- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் தனித்தன்மைக்கான விருப்பம்- இந்த ஆசைகளைக் கைவினைக் கலைகளினால் நிறைவேற்ற முடியும்."

**ஷ்ருதி சிங், கண்ட்ரி ஹெட், ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா**



படம்: ஃபேஷன் புரட்சி இந்தியா

## 05. கைவினைக் கலைகளின் வேர்: சுதேசி அறிவாற்றல் மற்றும் உள்ளூறை நிலைத்தன்மை

உலகெங்கும் உள்ள சுதேசி சமூகங்கள் தங்களுடைய சொந்த இயற்கைச் சூழல் பற்றிய ஆழ்ந்த புரிதலை வெளிப்படுத்தி, கிடைக்கக்கூடிய வளங்களை சரியான முறையில் நீண்டகாலமாகப் பயன்படுத்தி வந்துள்ளன. சாதாரணமான பயன்பாடு அல்லது அழகியல் உணர்வு என்பதற்கு அப்பால் மனிதர்களுக்கு இடையிலான நுட்பமான உறவுகள், அவர்களின் கைவினைக் கலைகள், மற்றும் சூழல் என்று விரிவடைகின்றன.

பல சுதேசி சமூகங்களிடையே உயிர்வாழத் தேவைப்படுவதில் தொடங்கிய கைவினைக் கலை செய்முறைகள், காலப்போக்கில் அழகின் சின்னமாகவும், கைவினைத் திறனாகவும், பாரம்பரிய அறிவாற்றலாகவும் மாறிவிட்டன. கைவினைக் கலையை புரிந்து கொள்ள முடியாத ஒரு கலாச்சாரப் பாரம்பரியம் என்று யுனெஸ்கோ கூறுகிறது 20. 'கைவினை' என்னும் சொல்லை ஓர் உற்பத்தி முறை என்பதற்கு அப்பால் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. கைவினை தொடர்பான நீடித்த நிலைத்தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அதன் நெறிகளையும், வளர்ச்சியையும் ஆராய வேண்டியிருக்கிறது.

**' சஸ்ட்டெயினபிலிட்டி என்னும் சொல்லுக்கு பெரும்பாலான சுதேசி மொழிகளில் நேரடி மொழிபெயர்ப்பு இல்லை என்று படித்திருப்பதாக எனக்கு நினைவு உக. ῾சஸ்ட்டெயினபிலிட்டி என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருப்பது என்பதால், அதற்கென தனியாக ஒரு சொல் தேவை இல்லை. அது ஒன்றுபட்டு, சேர்ந்து சகவாழ்வு வாழும் ஒரு முறையாகும்.'**

**-ஷ்ருதி சிங், கண்ட்ரி ஹெட், ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா**

### பூமியுடன் இசைவான ஒரு உறவு

சுதேசி சமூகங்கள் இயற்கையுடன் இயைந்த ஒரு உறவைக் கொண்டுள்ளன. அவை இயற்கை வளங்களை ஆழ்ந்து புரிந்து கொண்டு, சுற்றுச்சூழலை மதித்து வாழ்கின்றன. இந்த நம்பிக்கையான சிஸ்டம்தான் நீடித்த நிலைத்தன்மையை, சுற்றுச்சூழலின் தலைமையை, தூண்டுகிறது. மக்களை இயற்கையின் ஒரு அம்சமாகப் புரிந்து கொள்ள வைக்கிறது. இந்த ஒன்றுபட்ட தன்மையினால் உருவான சமூகம்தான், பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளும் பண்புதான் உலகம் முழுவதுமே ஒரே குடும்பம் என்னும் பொருள்படும் ' வசுதைவ குடும்பகம்' என்ற சித்தாந்தத்தில் பிரதிபலிக்கிறது. இதுவே, இந்தியாவின் தலைமையில் ஜி 20 இயங்குவதற்கான -'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்னும் கருத்தாக உள்ளது. இயற்கையுடன் இணைந்து வாழும் தன்மைதான் வளங்களைப் பயன்படுத்தி, திரும்பவும் பயன்படுத்தி, கடைசியில் பூமிக்கே திரும்பக் கொடுக்கும் உள்ளூறை சுழற்சி முறையாகிறது.

மும்பை வட்டமேசை விவாதத்தின்போது, பங்கேற்ற ஒருவர் தென் அமெரிக்காவில் உள்ள் ஆண்டெஸ் சுதேசி சமூகத்தினரின் அயினி என்னும் கோட்பாட்டை எடுத்துக் காட்டினார் 23. '' தண்ணீரைக் குடித்து ஆவியாக மேகம் உருமாறுவது போல் நாமும் பூமியிடம் அதையே பின்பற்ற வேண்டும். நீங்கள் பூமியிடம் இருந்து பெறும் எதுவும் திரும்பவும் பூமிக்கே போய்ச் சேரவேண்டும். அது மிகவும் அழகான, மிகவும் இயற்கையான முறையில் நிகழ வேண்டும்,' என்று அவர் கூறினார்.

பெரும்பாலான கைவினைத் தொழில்கள் சுற்றுப்புறத் தேவைகளைப் புரிந்து கொண்டு உருவாக்கப்பட்டவை. கட்ச் வட்டாரத்தின் தொலைதூரப் பகுதிகளில் மின்சாரம் போதுமான அளவுக்குக் கிடைப்பதில்லை என்பதால் அங்கு காணப்படும் பங்காஸ் எனப்படும் மண் வீடுகளில் வெளிச்சத்திற்காக கண்ணாடிகள் பதித்து கட்டப்பட்டுள்ளன. வங்காளத்தின் கிராமங்களில் வசிப்பவர்கள் பழைய துணிகளையும், கழிவுத் துணிகளையும் ஒட்டுப்போட்டு குடும்பங்களுக்கு வேண்டிய மெத்தைகளைத் தைத்துக் கொள்கின்றனர். இதில் இருந்துதான் கந்தா என்னும் கைவினைக் கலை உருவானது. இவ்வாறாக அவர்கள் பழைய துணிகளைப் பயன்படுத்தி குளிர்காலத்தில் வெதுவெதுப்பாக்கிக் கொண்டனர். இதனால் அவர்களுடைய துணிகளின் ஆயுள் நீடிக்கிறது. காலப்போக்கில், கைவினைக் கலைகள் உருமாறியிருக்கலாம், ஆனால் இயற்கையுடன் மக்கள் இசைந்து வாழும் தன்மை மட்டும் மாறாமல் இருக்கிறது.

இயற்கையுடன் கைவினைக் கலைஞர்களுக்கு ஆழ்ந்த தொடர்பு இருப்பதற்கு எடுத்துக் காட்டாக, 'எரி ' பட்டு உற்பத்தியைக் கூறலாம். வழக்கமான பட்டு உற்பத்தியில், பட்டு நூலை எடுப்பதற்காக கூட்டுப் புழுக்கள் உயிருடன் கொதிக்க வைக்கப்படுகின்றன. ஆனால், எரி பட்டு உற்பத்தி செய்யும் கலைஞர்கள், அகிம்சை முறைப்படி மிகவும் கருணையோடு கூடிய ஒரு அணுகுமுறையைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் கூட்டுப் புழுக்களை கொன்று நூல் எடுப்பதில்லை. மாறாக, பட்டுப்புழுக்களை இயற்கையாகவே கூடுகளை விட்டு வெளியே வரும் வரை காத்திருந்து பட்டு நூல் எடுக்கின்றனர். இந்த மென்மையான, உயிரைக் கொல்லாத நுட்பம் காரணமாக, எரி பட்டு ஓர் அறம் சார்ந்த, சுற்றுச்சூழலுக்கு நேயமான ஒரு துணியாகிறது.

அஸ்ஸாமில் நாங்கள் ஆராய்ச்சி செய்த போது, ஹவுலி பட்டுப்புழுப் பண்ணைக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு முகா மற்றும் எரி பட்டு நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன. அங்கு உள்ளூர் விவசாயி ஒருவரின் வீட்டில், எரி சில்க் நூல் அகிம்சை கோட்பாட்டின்படி எடுக்கப்படும் முறையை நாங்கள் நேரில் பார்த்தோம். எரி பட்டை ஏன் ' அமைதிப் பட்டு' என அழைக்கிறார்கள் என்பதை விவசாயிகள் பெருமையோடு விளக்கினார்கள்.

எரி பட்டு நெசவில் இயற்கையோடு இயைந்த ஓர் உணர்வு உள்ளூறையாக இருக்கிறது என்பதற்கு அப்பாலும், இது சுதேசி இழைகள் மற்றும் பொருட்களின் பயன்பாட்டுக்கு ஒரு சான்றாகத் திகழ்கிறது. எரி பட்டு நீடித்து உழைக்கும் வலிமையான துணி என்று புகழ் பெற்றிருக்கும் நிலையில், அது பிரத்யேகமான வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் தன்மையையும் பெற்றுள்ளது. இந்தப் பட்டு அணிந்திருக்கும் நபரை கோடையில் குளுமையாகவும், குளிர்காலத்தில் வெதுவெதுப்பாகவும் வைத்திருக்கிறது. இதனால் இந்தப் பட்டு ஆண்டு முழுவதும் பயன்படக்கூடியதாக உள்ளது.

உள்ளூர் இயற்கைச் சூழலையும், பருவநிலையையும் புரிந்து கொள்ளுதல்

மூலப்பொருட்களை எப்போது அறுவடை செய்தால் அது திரும்பவும் வளரும், ஒரு பொருளின் ஒவ்வொரு பகுதியையும் எவ்வாறு பயன்படுத்தி, கழிவுகளைக் குறைப்பது, சுற்றுச்சூழலைப் பராமரித்து, நீடித்த நிலைத்தன்மையை மேம்படுத்திட இயற்கைப் பொருட்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கைவினைக் கலைஞர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

பாரம்பரியக் கைவினைக் கலைகள் குறிப்பிட்ட சீசன்களுடன் மிகவும் நுட்பமாகத் தொடர்பு கொண்டுள்ளன. இதனால் கைவினைக் கலைஞர்களுக்கு பொருட்கள் நிறையக் கிடைக்கும்போது அவற்றைப் பயன்படுத்துகின்றனர்; பற்றாக்குறையாக உள்ளபோது தேவையைக் குறைத்துக் கொள்கின்றனர். உதாரணமாக, உகாண்டாவில் பாரம்பரிய மரப்பட்டைத் துணிகளை நெய்கிறவர்கள், முட்டுபா மரங்களின் ( ஃபிகச் நேட்டலென்ஸிஸ்) பட்டைகளை மழைக்காலங்களில் மட்டுமே எடுத்துப் பயன்படுத்துகின்றனர். ஏனென்றால், மழைக்காலத்தில்தான் மரங்களின் பட்டைகள் உரிக்கப்பட்ட இடங்களில் பட்டைகள் விரைவாக வளர்கின்றன. இமாலய வட்டாரத்தில், ஒரு ஆண்டின் குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே செம்மறி ஆடுகளின் ரோமங்கள் உரிக்கப்பட்டு, அதைக் கொண்டு துணிகளில் இருந்து கம்பளி வரை பல்வேறு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.26 . பாரம்பரிய மண்பாண்டங்களைச் செய்யும் குயவர்கள் பலத்த மழை பெய்த பிறகு, தரை இயற்கையாகவே மிருதுவாக இருக்கும்போது மட்டுமே களிமண்ணை எடுக்கின்றனர், இதனால் தரையைத் தோண்ட வேண்டிய தேவை இல்லாமல் போகிறது.

உடம்பில் பட்டால் எரிந்து சொறியச் செய்து அந்த இடத்தில் சிவந்து தடிப்புக்களை உண்டாக்கும் செந்தட்டிச் செடியின் நாரைக் கொண்டு துணி நெய்வதைப் பற்றி ராதி பரேக் கூறிய கருத்து, அதில் ஈடுபட்டுள்ள சமூகத்தின் அறிவாற்றலைப் புலப்படுத்துகிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள சமூகத்தினர் ஒரு ஆண்டில் ஒரு தடவை மட்டுமே செந்தட்டி நார்களை செடியில் இருந்து எடுக்கின்றனர். செயற்கையான ரசாயனப் பொருட்களோ, ரசாயன உரமோ சேர்க்காமல் செந்தட்டிச் செடியை வளர்க்கின்றனர். செந்தட்டி நாரை அளவுக்கு மீறி எடுத்து விடுவதில்லை. அளவோடு எடுத்து நெய்து மென்மையான துணியாக மாற்றுகின்றனர். தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படும் இந்த நுட்பம், அவர்கள் எந்த அளவுக்கு உள்ளூர் இயற்கைச் சூழலைப் புரிந்து வைத்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது. இதனால் அவர்கள் இயற்கையோடு நீடித்த உறவை ஏற்படுத்த முடிகிறது.

**செந்தட்டி நார்த் துணிகள் மற்றும் சுதேசி நீடித்த நிலைத்தன்மை பற்றிய கதை**

ராதி பரேக் கூறியது:

' சில ஆண்டுகளுக்கு முன்பு கைவினையிலும், பருவநிலை மாற்றத்திலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஒரு சமூகத்தைச் சந்தித்து உரையாடினேன். நான் குறிப்பிடுவது செந்தட்டி நார் பற்றி. செந்தட்டிச் செடி ஒரு மானாவாரிப் பயிர். இந்தச் செடியை வளர்ப்பதற்கு ரசாயன உரம் தேவையில்லை. இந்தச் செடி மிகவும் மென்மையான நார்க்களைத் தருகிறது.

சுதேசி சமூகங்கள் இதை வளர்ப்பதையும், அவர்களுடைய அறிவாற்றலையும் பார்க்கும்போது நமக்கு என்ன தெரிகிறது? அவர்களுடைய வாழ்க்கை முறையும், அவர்கள் பின்பற்றும் விவசாய முறையும், அவர்களின் கைவினை ஆற்றலும் பல்லாண்டுகளாக அவர்கள் பருவநிலையை மதித்து வாழ்கின்றனர் என்பதைக் காட்டுகிறது.

கோவிட்-19 முழுக்கதவடைப்புக் காலம் இவர்களின் திறனுக்கு ஒரு சோதனையாக அமைந்தது. நாகாலாந்தில் உள்ள தங்களது சின்னஞ்சிறு கிராமத்தை பெருந்தொற்றில் இருந்து பாதுகாப்பதற்காக, ஊரையே அவர்கள் மூன்று மாதங்களுக்கு அடைத்து விட்டனர். அவர்களுடன் தொடர்பு கொண்டு ஏதாவது தேவையா என்று நான் விசாரித்தேன். அவர்களின் வாழ்க்கை தன்னிறைவாக இருந்ததால், அவர்கள் அருகில் இருந்த மார்க்கெட்டிற்குக் கூட போகாமல் இருந்தனர். அவர்களுக்குத் தேவையான எல்லாமே அவர்களிடம் இருந்தது. இந்தச் சமூகத்திடம் இருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள முடியும்? இந்த படிப்பினையை மற்ற விஷயங்களுக்கும் நீட்டிக்க முடியுமா?

இந்தத் தனித்துவத்தை எவ்வாறு வலுப்படுத்துவது? இது போன்ற அறிவாற்றல் உடையவர்களை எவ்வாறு பாதுகாப்பது? அவர்களின் அறிவாற்றலைக் கெடுத்து விடாமல், புத்தாக்கமாக என்ன செய்யலாம்? அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து ஒரு எட்டு முன்னே எடுத்து வைக்க எவ்வாறு உதவலாம்?

**' பெண்கள் இயல்பாகவே இயற்கையின் ஏற்றத்தாழ்வுகளைப் புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் வாழ்க்கையின் இயற்கையான ஏற்றத்தாழ்வுகளை எதிரொலிக்கும் வகையில், கொள்கைகளையும், பொருள் கொள்முதல் சுழற்சிகளையும் உருவாக்கும் மாபெரும் சக்தி பெண்களிடம் உள்ளது. அது பெண்களின் தலைமைப் பண்புடன் தொடர்புடையதாக உள்ளது,'**

**-ஸ்டீபனி ஓவன்ஸ், பிளைமவுத் கலைப் பல்கலைக் கழகத்தின் கலை, டிசைன், மற்றும் ஊடகத்துறை டீன்.**

பருவநிலை மாற்றத்தினால் உள்ளூர் இயற்கைச் சூழல் மாறுகிறது. எனவே பாரம்பரியக் கைவினைக் கலைஞர்கள் இந்த மாறும் சூழலுக்கு ஏற்ப வழிகளைக் கண்டறிந்து பயன்படுத்துகின்றனர். ஆக்ஸிஜனை அழிக்கும் செடியான ஆகாயத் தாமரை போன்ற தாவரங்கள் படையெடுத்து வரும்போது, கிழக்கு இந்தியாவில் உள்ளூர் இயற்கைச் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆனால் கைவினைக் கலைஞர்கள் இந்த ஆகாயத் தாமரை செடிகளைக் கொண்டு பைகள், கூடைகள், யோகா பாய்கள் எனப் பலவிதமான பொருட்களைத் தயாரிக்கத் தொடங்கி விட்டனர் 26. இந்த நீடித்த நிலையான அணுகுமுறை வடகிழக்கு இந்தியா வட்டாரத்தில் வசிக்கும் 3,500-க்கும் அதிகமான கைவினைக் கலைஞர்களுக்கு மிகவும் தேவையாக இருக்கும் வருவாயைத் தருகிறது 27.

**கைவினைத் தொழிலுக்கும், ஆன்மீகத்துக்கும் இடையே உள்ள தொடர்பு**

கைவினைத் தொழிலுக்கும், ஆன்மீகத்துக்கும் இடையே உள்ள தொடர்புகைவினைத் தொழிலுக்கும், ஆன்மீகத்துக்கும் இடையே உள்ள தொடர்பு

பல சுதேசி சமூகங்கள் கைவினைத் தொழிலை ஒரு அழகுணர்ச்சியுடன் கூடிய செயலாகக் கருதாமல், ஆழ்ந்த ஆன்மீக ஈடுபாட்டுடன் கூடிய ஒரு செயலாகக் கருதுகின்றன. ஒரு பொருளை உருவாக்குதல் என்பது தியானமாக, பிரார்த்தனையாக, அல்லது பக்தியின் வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில் கைவினைத் தொழிலை புரட்சிகரமாக மாற்றியவர் திருமதி கமலா தேவி சட்டோபாத்யாய. இவர், ' இந்தியக் கைவினைப் பாரம்பரியங்கள் ' என்னும் தமது நூலில், நமது சமுதாயத்தில் கைவினைத் தொழில்கள் ஆற்றக்கூடிய பலவிதமான பங்குபணிகள் பற்றி விவரிக்கிறார். " நமது நாட்டில் பாரம்பரியக் கைவினைத் தொழில் என்பது பொருட்களை திறமையுடன் கையாள்வது என்பது மட்டுமல்ல, அது கருவிகளை கைகளால் மிகவும் நளினமாகவும், நுட்பமாகவும் இயக்கக்கூடியது. இதில் உணர்வுகள், மனம், உடம்பு, மற்றும் இவற்றின் ஒருங்கிணைப்பால் உருவாகக்கூடிய செயல்துடிப்புக்கள் ஆகியவற்றின் வெளிப்பாடாக இருக்கின்றன,"28 என்று கூறுகிறார்.

குலா மாநாடு 2023-இல் முக்கிய உரையாற்றிய திரு அசோக் சாட்டர்ஜி ஒரு கைவினைக் கலைஞரின் கதையை விவரித்தார். ஓம்கார்நாத் ஜி என்ற பெயர் கொண்ட அந்தக் கைவினைக் கலைஞர் பற்றிய கதை கைவினை என்பது அதைச் செய்யும் நபர்களுக்கு என்ன உணர்வைத் தருகிறது என்பதற்கு மனதை நெகிழச் செய்யும் ஓர் உதாரணமாகும். ஒரு கலைஞனுக்கும், அவன் செய்யும் கைவினைத் தொழிலுக்கும் இடையே உள்ள புனிதமான உறவை அது எடுத்துக் காட்டுகிறது. தாம் பல பத்தாண்டுகளாக சேர்ந்து பணியாற்றிய ஓம்கார்நாத் ஜி என்னும் கைவினைக் கலைஞர் பற்றி திரு அசோக் சாட்டர்ஜி பேசினார். அந்தச் சமயத்தில்தான் ஓம்கார்நாத் ஜி தமது மகனை ஒரு ரயில் விபத்தில் பறிகொடுத்திருந்தார். அசோக் சாட்டர்ஜி அவரிடம் சென்று அவரது நலன் விசாரித்தபோது, தமது ஆழ்ந்த துயரத்தை ஓம்கார்நாத் ஜி வெளிப்படுத்தினார். இப்போது குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு பேரக்குழந்தைகளை வளர்த்து, மருமகளுக்கும் ஆதரவாக இருக்க வேண்டிய கூடுதல் பொறுப்பு வந்துவிட்டதாக அவர் சொன்னார். அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு, இது பற்றி தமது தறியிடம் கேட்கப் போவதாகவும், ஏனென்றால் கேள்விக்கு விடை தறியிடம்தான் கிடைக்கும் என்றும் ஓம்கார்நாத் ஜி கூறினார்.

பலருக்கு கைவினை என்பது வாழ்வாதாரம் என்பதை விட மேலானது என்பதை இந்த நம்பிக்கை வலுப்படுத்துவதாக உள்ளது. கைவினை என்பது கலாச்சார பாரம்பரியத்தையும், அடையாளத்தையும் எடுத்துச் செல்லும் ஒரு பாலை போன்றது. சமூக-பொருளாதார அதிகாரம் பெறுவதற்கான ஒரு கருவி அது. பாதகமான நிலைமைகளிலும் நம்பிக்கையூட்டும் மீட்சித் திறனுக்கு அது ஒரு கலங்கரை விளக்கம்.

## 06. கைவினைச் சூழலிலும், சுதேசி சமூகங்களிலும் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்பு

2018-ஆம் ஆண்டில், பேரழிவை ஏற்படுத்திய கேரள வெள்ளத்தினால், சேந்தமங்கலம் நெசவாளர்களுக்கு மோசமான பாதிப்பு ஏற்பட்டது. அவர்களுக்கு ரூ.15 கோடி மதிப்புக்கு அல்லது 1.4 மில்லியன் பவுண்ட் மதிப்புக்கு இழப்பு ஏற்பட்டது. இதில் 273 தறிகள் சேதமடைந்ததும், நூல்களுக்கு கணிசமாக ஏற்பட்ட இழப்பும் அடங்கும். கர்நாடகாவின் சென்னபட்டணா மரப்பொருட்களின் அரக்கு வேலைகளுக்கு 200 ஆண்டுகள் பழம்பெரும் சிறப்புமிக்க வரலாறு உள்ளது. உள்ளூரில் கிடைக்கும் ஆலமரத்தின் (ரைட்டியா டிங்க்ட்டோரியல்) பிசின் எடுத்து மரவேலைக் கலைஞர்கள் மரக்கட்டைகளைக் கொண்டு பொம்மைகளைத் தயாரிக்கின்றனர்.ஆனால் மழைப்பொழிவு முறை மாறி, வெப்ப நிலை அதிகரித்து விட்டதால் உள்ளூரில் முளைக்கும் தாவரங்கள் அனைத்தும் வாடிவதங்கி விட்டன. இப்போது இந்தப் பிசின் கிடைப்பது குறைந்து விட்டதால், மரவேலைக் கலைஞர்கள் திண்டாடுகின்றனர். வாராணசியிலும், மத்தியப் பிரதேசத்திலும் உள்ள கைத்தறி நெசவாளர்களும், மழைப்பொழிவு தாறுமாறாக இருப்பதால் பருத்தி விளைச்சல் பாதிக்கப்பட்டு, மூலப்பொருள் தட்டுப்பாட்டினால் செலவு அதிகரித்து தவிக்கின்றனர்29. ராஜஸ்தான் மாநிலத்தின் குயவர்களுக்கும் இதே நிலைதான். மண்பாண்டங்களை வனைவதற்குத் தேவையான களிமண்ணை உள்ளூரின் ஆற்றுப்படுகையில் இருந்து அவர்கள் எடுத்து வருகின்றனர். இப்போது முறைதவறிப் பருவமழை பெய்வதால், வரட்சி நீடித்து களிமண் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெப்ப நிலை அதிகரிப்பதால், அஸ்ஸாமின் ' முகா ' சில்க் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. முகா பட்டுப்புழுக்களைக் கொண்டு ( அந்த்தெரியா அஸ்ஸாமெனிஸிஸ்) நூல் எடுத்து இந்தப் பட்டு நெய்யப்படுகிறது. இந்த முகா பட்டுப்புழுக்கள் வெப்பத்தையும், புழுக்கத்தையும் தாங்க முடியாதவை 30. வானிலை மாற்றம் ஏற்படுவதால் பட்டு உற்பத்தியும் எப்படி இருக்கும் என்று கணிக்க முடியவில்லை. இதனால் பட்டு நெசவாளர்களின் வாழ்வாதாரம் நேரடி பாதிப்புக்கு உள்ளாகிறது.

முன்கணிப்பு செய்யமுடியாத அளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, துணி உற்பத்தி சுழற்சியைப் பாதிக்கிறது. இதனால் வாழ்க்கை தடைப்படுகிறது. உடல் ஆரோக்கியத்திற்கும், தண்ணீருக்கும் நெருக்கடி ஏற்படுகிறது. தட்பவெப்ப நிலை மாறுவதால் பாரம்பரிய உற்பத்தி சுழற்சி தாமதமடைகிறது. வெப்பம் அதிகரிப்பதால், கைவினைக் கலைஞர்கள் குடிபெயர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நதிக்கரை நெடுகிலும் மண்சரிவு ஏற்பட்டு, கைவினைக் கலைஞர்கள் இடர்களுக்கு உள்ளாகின்றனர். தண்ணீர் தேங்குவதாலும், நீர்நிலைகளில் மாசு படுவதாலும் வேலைக்குப் போய்வருவதில் இடைஞ்சல் ஏற்படுவதோடு, கைவினைக் கலைஞர்களின் வீடுகளும் பாதிக்கப்படுகின்றன; மூலப் பொருட்கள் கிடைப்பதும் தடைப்படுகிறது.

**'முகா பட்டு உற்பத்திக்கு இப்போது விதையின் தரத்தில் இருந்து, பட்டுப்புழுக்களை வளர்க்கும் நடைமுறை வரை எண்ணற்ற சவால்கள் எழுந்துள்ளன. சரியான தரமுள்ள விதைகள் கிடைக்காமல் பயிர் விளைச்சல் வெற்றி பெறாமல் போகிறது. மேலும், வெப்பநிலை தாறுமாறாக ஏறி இறங்குவதும் இடர்களை ஏற்படுத்துகிறது. முகா புழுக்கள் வளர்வதற்கு உஎ முதல் உகூ டிகிரி செண்டிகிரேடு வரை வெப்பம் தேவை. ஆனால் வெளிப்புற வெப்பம் ௬௦ டிகிரிக்கும் மேல் அதிகரிப்பதால், இத்தகைய மிதமிஞ்சிய வெப்பத்தில் முகா புழுக்களினால் உயிர்வாழ முடியாமல் போகிறது. முகா புழுக்கள் உயிர்வாழ்வதற்காக பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப மாறிக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைக் கண்டறிய வேண்டியிருக்கிறது.'**

**-அஜித் பாட்டக், செரிகல்ச்சர் இயக்ககம், அஸ்ஸாம் அரசு**

**' கடந்த சில ஆண்டுகளாக எங்களுடைய உழைப்பில் இருந்து, பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான கருத்துக்களைக் கற்றுக் கொண்டோம். நம்முடைய பாரம்பரிய நடைமுறைகளுக்கு பிராண்ட் அந்தஸ்து தரவேண்டியிருக்கிறது. இது ஒன்றுதான் நமக்கு முன்னே உள்ள வழி. நமது கிராமங்களில் கூ௦௦௦ ஆண்டுகால பழமையான சுழல் பொருளாதார முறை இருந்து வருகிறது. அதுதான் இப்போது நமக்குத் தேவை. பெண்கள் இயற்கையோடு தொடர்பு கொண்டிருப்பதால், அவர்களுக்கு இயற்கை வளங்கள் முழுவதுமாகக் கிடைப்பதோடு, தீர்வுகளும் அவர்களுக்கு கிடைக்கின்றன. இதைத்தான் நாங்கள் பல ஆண்டுகளாகச் செய்து கொண்டிருக்கிறோம். உங்களுக்குத் தெரியுமா, பாரம்பரிய அறிவாற்றலையும், சமூகங்களையும் நாம் திரும்பிப் பார்க்க வேண்டியது முக்கியமாகும்.'**

**-ரித்துராஜ், நிறுவனர், எ வீவ்ஸ்**

# கைவினை சுற்றுச்சூழல் அமைப்பில் காலநிலை மாற்றத்தின் தாக்கம்

### உற்பத்தித் தடங்கல்கள்:

1. **உற்பத்திச் சுழற்சி தடைப்படுவது:** சிலவகை கைவினைகள் குறிப்பான சீசன்களை நம்பியிருக்கின்றன. உதாரணமாக, பருத்தி அல்லது பட்டு போன்ற மூலப்பொருட்களைப் பயிரிடுவதற்கும், குறிப்பான வானிலை அமைப்புக்களுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருக்கிறது. பருவநிலை மாற்றத்தினால் வானிலையை முன்கணிப்பு செய்ய முடியாமல் போகும்போது இந்த வானிலை சுழற்சி சீர்குலைந்து, உற்பத்தியில் தாமதமோ, இழப்போ ஏற்படுகிறது.
2. **உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பு:** வெப்ப நிலை அதிகரிப்பதால், கைகளால் அல்லது தறிகளில் வேலை செய்வது மிகவும் கடினமானதாகிறது. இதனால் கைவினைக் கலைஞர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. நகரங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படலாம். பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் உடம்பில் நீர்ச்சத்து குறைந்து, களைப்பு அதிகரித்து, கைவினைக் கலைஞர்களின் உற்பத்தித் திறன் தடைப்படுகிறது. காலப்போக்கில், வறட்சியினாலும், மிதமிஞ்சிய வெப்பத்தினாலும் சிறுநீரக நோய்கள் உட்பட, தீராத நோய்கள் உண்டாகின்றன என்று மெக் கவர்ன் அறிக்கை கூறுகிறது 31.
3. **சிந்த்தெட்டிக் பொருட்களுக்கு மாறுதல்:** இயற்கை வளங்கள் அரிதாகிறது. அல்லது அவை கிடைப்பது சந்தேகத்திற்குரியதாவதால் குறைவான செலவில் பொருட்களைத் தயாரிக்க வேண்டிய நெருக்கடி உண்டாகிறது. இதனால், வானிலை மற்றும் பருவநிலைகளைக் குறைவாகச் சார்ந்திருக்கிற சிந்த்தெடிக் அல்லது பாலிமெர் அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனினும், இவ்வாறு உற்பத்தியாகும் சிந்த்தெடிக் பொருட்களுக்கு தனித்துவமும், தரமும் இல்லாமல் போகிறது. மேலும், இந்த சிந்த்தெடிக் அல்லது பாலிமெர் பொருட்கள் மக்காதவை என்பதால், இவற்றினால் சுற்றுச்சூழல் மாசு உண்டாகிறது. இந்தப் பொருட்கள் உள்ளூரில் உற்பத்தி ஆவதில்லை என்னும்போது, கரியமில வாயு வெளியேற்றத்தை உண்டாக்குகிறது. இவற்றின் உற்பத்தி உலகளாவிய சக்திகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு, அதனால் அவற்றின் விலைகள் உலகளாவிய நிலையில் கட்டுப்படுத்தப்படுகிறது.

### மூலப்பொருட்கள் கிடைப்பது:

1. மூலப்பொருட்கள் கிடைக்கும் வாய்ப்பு குறைகிறது: பருவநிலை மாற்றத்தினால் கைவினைக் கலைஞர்களுக்கு மூலப்பொருட்களைப் பெறுவது அதிகக் கடினமாகிறது. பல்லுயிர்ப் பெருக்கம் குறைவதாலும், செடிகளின் வளர்ச்சி முறை மாறுவதாலும், தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிப்பதாலும் இந்த நிலை ஏற்படுகிறது. வெவ்வேறு வகையான மர வகைகள், செடிகளில் இருந்து எடுக்கப்படும் சாயம், கால்நடைகளில் இருந்து கிடைக்கும் பொருட்கள் போன்றவற்றை பெரும்பாலான கைவினைக் கலைஞர்கள் நம்பியிருக்கின்றனர். பல்லுயிர்ப் பெருக்கம் குறைவதால், இந்த இயற்கை வளங்கள் கிடைப்பது குறைந்து விடுகிறது.
2. மூலப்பொருட்களின் தரம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; பருவநிலை மாற்றங்களினால் மூலப்பொருட்களின் தரம் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக, வறட்சியினால் பாதிக்கப்படும் செம்மறி ஆடுகளில் இருந்து கிடைக்கும் ரோமங்களின் தரம் குறைந்து, இவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் கம்பளி ஆடைகளின் தரம் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு இருப்பதில்லை.
3. பொருட்களின் விலை அதிகரிக்கிறது: பருவநிலை மாற்றங்களினால் மூலப்பொருட்கள் குறைவாகக் கிடைப்பதால், உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. பெரும்பாலும் கைவினைக் கலைஞர்கள் சிறிதளவு லாபத்திலேயே இயங்குவதால், உற்பத்திச் செலவு அதிகரிக்கும்போது அவர்கள் வியாபாரம் செய்யமுடியாமல் போய் மூட வேண்டிய நிலை உண்டாகிறது.

### கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தல்:

4. விவசாய வருமானம் தடைப்படுதல்: பருவநிலை மாற்றம் விவசாயத்தின் மீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக, மானாவாரி சாகுபடி நடைபெறும் இடங்களில் விவசாயம் நடைபெறுவது குறைகிறது. பெரும்பாலான கைவினைக் கலைஞர்களுக்கு விவசாயம்தான் முக்கியமான வருமான மூலமாக இருக்கிறது. அல்லது விவசாயக் குடும்பங்கள் தங்களுக்கு வேண்டிய உணவை விளைவித்து உண்கின்றன. தண்ணீரும், மேய்ச்சல் நிலங்களும் குறைவதால் கால்நடைகளும் திண்டாடுகின்றன. இதனால் ஆடுமாடு வளர்ப்பு குறைந்து, அவற்றின் உற்பத்தித் திறனும் குறைகிறது.32
5. பருவநிலை மாற்றத்தினால் குடிப்பெயர்வு: பருவநிலை மாற்றங்களினால் தாறுமாறான வானிலை அமைப்புக்களும், கடல்நீர் மட்டம் உயர்வதும் ஏற்படுவதால் மக்கள் விருப்பமின்றி குடிபெயர்ந்து வேறிடங்களை நோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவ்வாறு குடிபெயரும் சமூகங்கள் தங்களுக்கு வழக்கமாகக் கிடைக்கும் பொருட்களில் இருந்து தூரவிலகிப் போகின்றன. பாரம்பரியச் சந்தை வசதிகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் காலம்காலமாக அவர்கள் தொடர்ந்து பின்பற்றி வந்த கைவினைக் கலைகளுக்கு ஆபத்து உண்டாகிறது.

**' மெஷினில் உற்பத்தியாகும் பாலியெஸ்ட்டர் துணிகளின் நெசவு சமமாகவும், கச்சிதமாகவும் இருப்பதால் அவற்றை மக்கள் விரும்புகின்றனர். கைகளால் நூற்கப்படும் நூல்கள் தறிகளில் அடிக்கடி அறுந்து போகின்றன. இதனால் தறிக்காரர்கள் மார்க்கெட் தேவையை நிறைவு செய்திட இறக்குமதி செய்யப்படும் நூலை பயன்படுத்துகின்றனர்.'**

**-சஞ்சய் கர்க், நிறுவனர் & டிசைனர், ரா மேங்கோ**

# 07. நீடித்து நிலைத்திருக்கும் ஃபாஷனுக்கு ஒரு தூண்டுதலாக கைவினைகள்

கைவினைத் தொழில்கள் ஃபாஷன் நீடித்திருக்க சக்திவாய்ந்த தூண்டுதலாக செயல்படுகின்றன. தரம், நீடித்த உழைப்பு, அறநெறி சார்ந்த உற்பத்தி முறைகள் ஆகியவற்றை வலியுறுத்தி தொழில்துறைக்கு புதுவிளக்கம் தருகின்றன. சுழல் பொருளாதாரக் கோட்பாடுகளை இவை வலியுறுத்துகின்றன. ஏனென்றால், கைவினைப் பொருட்கள் நீடித்து நிலைத்து நின்று, பல தலைமுறைகளாகப் போற்றப்படுகின்றன.

**கைவினைத் தொழில்களினால் சுற்றுச்சூழலுக்கு நன்மை**

எல்லென் மெக் ஆர்தர் ஃபவுண்டேஷன் வழங்கிய சுழல் பொருளாதார மாடல் 33 , பாரம்பரியக் கைவினைத் தொழில்களுக்கு உள்ள பசுமைச் சக்தியைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. சுழல் பொருளாதாரம் என்பது கழிவுகளையும், மாசுகளையும் போக்குவது, புராடக்டுகளையும், பொருட்களையும் சுழல்முறையில் பயன்படுத்துவது, இயற்கைக்குப் புத்துயிர் ஊட்டுவது என்னும் மூன்று மையக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆழ வேரூன்றியுள்ள ஒரு கருத்தாகும். கைவினைத் தொழில்கள் எவ்வாறு நீடித்துநிலைத்திருக்கும் உற்பத்தி மற்றும் நுகர்வு, சுழல் பொருளாதாரத்தின் கோட்பாடுகள் ஆகியவற்றுடன் பொருந்துகின்றன என்பதைக் காணலாம்.

1. கழிவுகளையும், மாசுகளையும் போக்குதல்: நமது பூமியின் வளங்கள் ஒரு வரையறைக்கு உட்பட்டவை என்பதால் இந்த சுழற்சி நீடித்திருப்பதில்லை. ஏனென்றால், தற்போதுள்ள பொருளாதார முறையில் நாம் பொருள் உற்பத்திக்காக பூமியில் இருந்து மூலப்பொருட்களை எடுக்கிறோம், அவற்றைப் பயன்படுத்திய பிறகு அவை கழிவாகத் தூக்கி எறியப்படுகின்றன. எனினும், ஒரு சுழல் பொருளாதாரத்தில், கழிவை உருவாக்குவது ஆரம்பத்திலேயே தடுக்கப்படுகிறது.

   அ. **டிசைனிலேயே நீடித்து நிலைத்திருத்தல்:** தயாரிக்கப்படும் பொருட்கள் பெரும்பாலும் நீண்டகாலம் நீடித்திருப்பதற்காக வடிவமைக்கப்படுகின்றன. இதனால் நுகர்வோர் அவற்றை எவ்வளவு காலத்திற்கு நீட்டித்து பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு காலத்திற்கு பயன்படுத்துகின்றனர். இது ஃபாஸ்ட் ஃபாஷன் என்பதற்கு முரணாகிறது. ஃபாஸ்ட் ஃபாஷனில் தரம் குறைவான, குறுகிய காலத்திற்கே இருக்கக் கூடிய டிரெண்டியான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால் அவை அடிக்கடி மாற்றப்படுகின்றன. இதனால் புதிய ஆடைகளின் உற்பத்தியில் இருந்து கரியமில  வாயு வெளியேற்றம் அதிகரிக்கிறது.

   ஆ. **ஃபாஸ்ட் உற்பத்தியை விட மேலோங்கும் கைவினைகள்:** ஃபாஸ்ட் உற்பத்திகள் பெரும்பாலும் சிந்தெட்டிக் பொருட்களைச் சார்ந்திருக்கின்றன. ஆனால் கைவினைத் தொழில்களோ புதுப்பிக்க வல்ல மூலங்களைச் சார்ந்திருக்கின்றன. விட்டெறியும் கலாச்சாரத்தை கைவினைத் தொழில்கள் ஊக்கப்படுத்துவதில்லை என்பதோடு, அவை மக்கும் ஆர்கானிக் பொருட்களைப் பயன்படுத்துவதால், கரியமில வாயு வெளியேற்றம் குறைந்து, சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் ஆபத்தும் குறைகிறது.

2. 2. புராடக்டுகளையும், பொருட்களையும் மறுசுழற்சி செய்தல்: சுழல் பொருளாதாரத்தின் இரண்டாவது அம்சம் புராடக்டுகளையும், பொருட்களையும் தொடர்ச்சியாக மறுசுழற்சி செய்வதாகும். இதன் மூலம் அவற்றின் மதிப்பை அதிகபட்சம் பயன்படுத்துவது ஆகும். பொருட்களின் ஆயுளை நீட்டிப்பதும் இதன் முக்கிய அம்சம். இதற்கு அவற்றுக்கு மறுநோக்கம் கொடுத்து அல்லது அவற்றை ஒரு பொருளின் பாகங்களாக அல்லது அடிப்படை மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு செய்வதன் மூலம் கழிவு குறைகிறது. இந்த புராடக்டுகள் மற்றும் பொருட்களின் உள்ளுறை மதிப்பும் பேணிக்காக்கப் படுகிறது.

   அ. ஒரு வட்டாரத்துக்குள் உற்பத்தி செய்தல்: பாரம்பரியக் கைவினைக் கலைகள் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்துக்குள் நிகழ்கின்றன. இதனால் நெடுந்தொலைக்குக் கொண்டு செல்லப்படுவதன் மூலம் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்படுகிறது. மேலும், மீட்சியாற்றல் பெற்ற, நீடித்து நிலைத்திருக்கும் சமூகங்களுக்கும் இது ஆதரவாக இருக்கிறது. உலகளாவிய சப்ளை தொடரமைப்பைக் கொண்டுள்ள ஃபாஸ்ட் ஃபாஷன் கணிசமாக கரியமில வாயுவை வெளியேற்றும்போது ஒப்பு நோக்குகையில் இந்த முரண்பாடு தெளிவாகத் தெரிகிறது.

   ஆ. **கழிவைக் குறைப்பதும், சுழற்சியை அதிகரிப்பதும்:** பொதுவாக கைவினைத் தொழில்கள் பொருட்களைத் திரும்பப் பயன்படுத்துவதிலும், சுழல்முறையில் பயன்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன. இதனால் கழிவு என ஒதுக்கப்படும் பொருட்கள் புதிய, அழகான பொருட்களாக உருமாற்றம் அடைகின்றன. இதனால் குப்பைக்கிடங்கிற்குச் செல்ல வேண்டிய கழிவின் அளவு குறைவதோடு, புதிய மூலப்பொருட்களுக்கான தேவையும், அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் பாதிப்புக்களும் குறைகின்றன. ராஜஸ்தான் மாநிலத்தின் லெஹரியா மற்றும் முடிச்சுப் போட்டு முக்கி எடுத்து சாயம் தோய்க்கும் நுட்பங்கள் அந்தந்த சீசன்களின் பாரம்பரியத்தில் ஆழவேரூன்றியுள்ளன. இவை பல்வேறு பண்டிகைகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தப் பாரம்பரியக் கைவினைத் தொழிலில் பெண்கள் தங்களது ஆடைகளுக்கு மறுசாயம் தோய்த்து திரும்பப் பயன்படுத்துகின்றனர். இயற்கைச் சாயங்கள் காலப்போக்கில் மெல்லமெல்ல மங்கிவிடும் என்பதால், இந்த மறுசாயம் தோய்பது ஒரு அத்தியாவசியத் தேவையாகிறது. அதோடு, இந்தக் கைவினைத் தொழில்களுக்குள் புதைந்திருக்கும் கலாச்சாரத்தையும், நீடித்த நிலைத்த தன்மையையும் பிரதிபலிக்கிறது.

1. **மறு உற்பத்தி செய்யும் தன்மை:** நேர்கோட்டுப் பொருளாதாரத்தில் இருந்து சுழல் பொருளாதாரத்திற்கு மாறும்போது, மூலவளங்கள் குறைகிறதே என்பதை விட்டு, மூலப்பொருட்களைக் கொண்டு மறு உற்பத்தி செய்வதை நோக்கி நமது அணுகுமுறை மாறுகிறது. மறு உற்பத்தி அணுகுமுறையை நாம் பின்பற்றும்போது, இயற்கையில் எதுவுமே வீணாவதில்லை என்ற இயற்கை சிஸ்டத்தின் திறனை நாம் பார்க்கிறோம்.

   அ. **நீர்வளச் சேமிப்பு:** பல கைவினைத் தொழில்கள் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் உற்பத்தி முறையை வலியுறுத்துகின்றன. ஃபாஸ்ட் ஃபாஷனில் காணப்படும் ஃபேப்ரிக் டையிங் போன்ற தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்தும் உற்பத்தி முறைக்குப் பதிலாக, தாவரங்களின் இலைகள், வேர்கள் மற்றும் பூக்களைக் கொண்டு தயாரிக்கப்படும் சாயங்களைக் கைவினைத் தொழில்கள் பயன்படுத்துகின்றன. இதனால், ரசாயனச் சாயங்கள் அகற்றப்பட்டு, நீர்மாசு குறைக்கப்படுகிறது, மூலப்பொருட்களின் வளங்கள் சேமிக்கப்படுகின்றன.

   ஆ. **நீடித்து நிலைத்திருக்கும் பொருட்கள்:** பாரம்பரியக் கைவினைத் தொழில்கள் பெரும்பாலும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய, இயற்கைச் சூழலைக் கெடுக்காத, ஆர்கானிக் இழைகள், இயற்கைச் சாயங்கள், மறுசுழற்சி செய்யப்படும் பொருட்கள் போன்றவற்றை பயன்படுத்துகின்றன. நீடித்து நிலைத்திருக்கும் பொருட்களில் கவனம் செலுத்தும் இந்த அணுகுமுறையால், மூலப்பொருட்களை அகழ்ந்தெடுப்பது மற்றும் உற்பத்தி செய்வது ஆகியவற்றுடன் இணைந்துள்ள சுற்றுச்சூழலைப் பாதிக்கும் தன்மை குறைகிறது. மூங்கில், சணல், ஆர்கானிக் பருத்தி போன்ற இயற்கையான பொருட்களும், தாவரங்களில் இருந்து எடுக்கப்படும் பொருட்களும் பயன்பாட்டுக்கு வந்து, பாலியெஸ்டர் அல்லது அக்ரிலிக் போன்ற சிந்தெட்டிக் மற்றும் மூலப்பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தும் பொருட்களின் பயன்பாடு குறைகிறது.

   இ. **குறைவான எரிசக்தி பயன்பாடு & குறைவான கரியமில வாயு வெளியேற்றம்:** பெருமளவில் மெஷின்களினால் உற்பத்தி செய்யப்படும்போது எரிசக்தி உபயோகம் அதிகரிக்கிறது. அதுவே கைகளால் பொருட்கள் செய்யப்படும் போது எரிசக்தி பயன்பாடு குறைந்து கரியமில வாயு வெளியேற்றத்தை  அது குறைக்கிறது. மேலும், சிலவகை கைவினைப் பொருட்கள், குறிப்பாக மரம் போன்ற இயற்கையான பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும்போது கரியமில வாயு வெளியேற்றம் இல்லாமல், அவை கரியமில வாயுவை சேமிக்கின்றன.

# நீடித்து நிலைத்திருக்கும் ஆதாயம்

**புதுப்பிக்கவல்ல பொருட்களைப் பயன்படுத்துவது**
- உள்ளூரில் கிடைக்கும் இயற்கைப் பொருட்கள்

**கழிவு உற்பத்தி**
- மூலப்பொருட்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- குறைவாக விரயமாகிறது அளவுக்கு அதிகமான உற்பத்தி, உற்பத்தியாகும் பொருளின் ஆயுள் குறைவு

**மாசு ஏற்படுத்தல்**
- ரசாயனப் பொருட்களைக் குறைவாகப் பயன்படுத்தும் உற்பத்தி முறை
- ரசாயனச் சாயங்கள், மைக்ரோபிளாஸ்டிக் மாசு

# குறைவான கரியமில வாயு

**எரிசக்தி உபயோகம்**
- கைகளால் தயாரிக்கப்படும் முறை
- தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் முறை

**கரியமில வாயு வெளியேற்றம்**
- உள்ளூரிலேயே பொருட்கள் கிடைக்கின்றன, குறைவான போக்குவரத்து
- உலகளாவிய சப்ளை தொடரமைப்பு, போக்குவரத்தினால் அதிக அளவுக்கு புகை வெளியேற்றம்

# குறைவான எரிசக்தி

**எரிபொருள் சிக்கனம்**
- மின்சாரத்தால் இயங்கும் மெஷின்களைக் குறைவாகச் சார்ந்திருக்கிறது
- அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுவதால், எரிபொருளினால் இயங்கும் மெஷின்களைச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.

**புதுப்பிக்க வல்ல எரிபொருளின் பயன்பாடு**
- அடிக்கடி இயற்கை எரியாற்றல் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- புதுப்பிக்க முடியாத எரிபொருள் வளங்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

கைவினைத் தொழில் உற்பத்தி

ஃபாஸ்ட் உற்பத்தி

**கைவினைத் தொழிலுக்கு நீடித்திருக்கும் ஃபாஷன் தரும் நெருக்கடி**

வேகமும், அளவும் முக்கியத்துவம் பெறும் ஃபாஸ்ட் ஃபாஷன் ஆதிக்கம் செலுத்தும் இன்றைய உலகில், கைவினைத் தொழில்களுக்கு அடுத்தடுத்து பல நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன. பாரம்பரியக் கைவினைப் பொருட்களின் உற்பத்தியில் இருந்து உபயோகம் வரை அவை இயற்கைச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஆழமாக உணர்த்துவதற்காக கொண்டாடப்படுகின்றன. ஆனால் இன்றைக்கு அவை பொருளாதார அடிப்படையில் சமரசம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது; இயற்கைச் சூழலுக்காகவும் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

' நாகாலாந்தில், நெசவாளர்கள் அதிகமாக அக்ரிலிக் நூலை பயன்படுத்தும் போக்கு அண்மைக் காலமாகக் காணப்படுகிறது. காரணம், அக்ரிலிக் நூல் பரவலாகக் கிடைக்கிறது; மேலும் அதன் விலை தாங்கக்கூடிய அளவில் இருக்கிறது. இதனால் இயற்கை நூலைப் பயன்படுத்துவது குறைந்து விட்டது. இயற்கை நூலை நூற்பதற்கு நிறைய நேரம் ஆவதாகவும், அதற்காக அதிகம் கஷ்டப்பட்டு உடல் உழைப்பு தர வேண்டியிருப்பதாகவும் பல நெசவாளர்கள் கவலையுடன் கூறுகின்றனர். இடுப்பில் தறி நாடாவைக் கட்டிக்கொண்டு கஷ்டப்பட்டு உழைப்பதற்கு போதிய அளவுக்கு ஆதாயம் கிடைப்பதில்லை என்றும், இவ்வளவு கஷ்டப்பட்டு நெய்யப்படும் ஆடைகளின் கலாச்சாரச் சிறப்புக்கு அங்கீகாரம் கிடைப்பதில்லை என்றும் அவர்கள் கவலைப்படுகின்றனர்.'

' மேலும், எல்லாக் கைத்தறிகளும் இயற்கைச் சூழலுக்கு நேயமாக இருப்பதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். நாம் நிச்சயம் விசைத்தறிகளுடன் போட்டி போட வேண்டியிருக்கிறது ; அதே வேளையில், நமது கைத்தறி வேலைகள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு பொறுப்பாக இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது. கைத்தறி என்பதற்காக, அது தானாகவே இயற்கைச் சூழலுக்கு நேயமாக இருக்கும் என்று நினைத்துவிடக் கூடாது. எதிர்காலத் தலைமுறைகளையும், சுற்றுச் சூழலையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. கழிவுகளையும், மண்ணுக்கு சீர்கேட்டையும் உண்டாக்கும் அக்ரிலிக் நூலை நாம் பயன்படுத்த வேண்டுமா? விசைத்தறிகளுக்கும் கைத்தறிகளுக்கும் இடையே நாம் ஒன்றை தெரிவு செய்வதற்குப் பதிலாக இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கிறது.'

இந்தியக் கைவினைத் தொழில்கள் உள்ளூரை மையமாகக் கொண்டு செயல்படுவதால் அவை தாக்குப் பிடித்து நிற்கின்றன. கைவினைத் தொழிலாளர்கள் தங்களுடைய சுற்றுவட்டாரங்களில் இருந்து பொருட்களைப் பெற்றுப் பயன்படுத்துகின்றனர். இந்த மாதிரியான வட்டாரத்தை மையமாகக் கொண்டு செயல்படுவதால், அவை உண்மையாகவே நீடித்து நிலைத்திருக்கின்றன. எனினும், எல்லாக் கைவினைத் தொழில்களாலும் தங்களது பழைய வழிமுறைகளைப் பேணிக்காக்க முடிவதில்லை. தொழில்மயமாக்கம், பருவநிலைப் பாதிப்பு, மற்றும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, சில கைவினைத் தொழில்களினால் சுழல் பொருளாதார முறைகளைப் பின்பற்ற முடிவதில்லை. அவற்றினால் நீண்டகாலத்திற்கு தாக்குப்பிடித்து நிலைத்திருக்க முடிவதில்லை. நிறையநிறைய பொருட்களுக்கான தேவை இடைவிடாமல் அதிகரிப்பதாலும், வேகவேகமாக டெலிவரி செய்ய வேண்டியிருப்பதாலும், குறைவான விலை வைக்க வேண்டியிருப்பதாலும், பல உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் கைவேலைப்பாடு போன்ற ஒரு தோற்றத்தில் பொருட்களைத் தயாரித்து விற்கின்றனர். சில நேரங்களில், கைவினைக் கலைஞர்களே கூட, பாரம்பரிய அச்சுப் பதிக்கும் நுட்பத்திற்குப் பதிலாக ஸ்க்ரீன் பிரிண்ட்டிங் அல்லது கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத் தறிகள் என்பன போன்ற விரைவான நுட்பங்களைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர். இந்த செயல் 'கிராஃப்ட் வாஷிங்' எனப்படுகிறது 34.

'கைவினையின் உண்மையான மதிப்பை பலராலும் புரிந்து கொள்ள முடியவில்லை எனத் தோன்றுகிறது. கைவினைத் தொழில்கள் மெதுவாக நடைபெறக் கூடியவை. மிகவும் விரிவான நடைமுறைகளை அவை கொண்டிருக்கின்றன. பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் போல இதற்கு தேவையை பெருக்க முடியாது. ஆனால், இந்த மெதுவான நடைமுறைக்குள்ளேயே மிகச்சிறப்பான வலிமையும், உணர்வு பூர்வமான தொடர்புகளும் இருக்கின்றன. கைவினைத் தொழில் தலைமுறை தலைமுறைகளாகத் தொடர்ந்து கைமாறி வருபவை என்பதால் தனிச்சிறப்பும் மதிப்பும் பெற்றுவிடுகிறது. குஜராத் மற்றும் ராஜஸ்தானில் தயாரிக்கப்படும் மிகவும் நேர்த்தியான பிரிண்ட்களைப் பார்க்கலாம். அவை மிகவும் கவனமாக கைகளால் நெய்யப்பட்டு பிரிண்ட் போடப்படுகின்றன. அவற்றை டிஜிட்டல் முறையில் போடப்படும் பிரிண்ட் வேலைகளுடன் ஒப்பிடும்போது வேலைப்பாட்டின் மதிப்பு டிஜிட்டல் பிரிண்ட்களில் காணாமல் போகிறது.'

இந்த சிக்கல்களை எல்லாம் கடப்பதற்காக, கைவினைத் தொழில்களின் தற்போதைய நிலை என்ன என்பதை மதிப்பிட்டு, அவற்றை நீடித்து நிலைத்திருப்பதற்கான கோட்பாடுகளுடன் பொருந்தும்படி செய்ய உறுதியான ஒரு சிஸ்டம் உடனடியாகத் தேவைப்படுகிறது. இந்தியாவின் செழுமையான கைவினைக் கலை பாரம்பரியத்தின் தலைமையில் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய ஃபாஷன் தொழிலை வளர்ப்பதற்கு இத்தகைய சிஸ்டம் தேவை.

**' கைவினைத் தொழிலின் உள்ளூறை தன்மை காரணமாகவே அதை வழக்கமான பிஸினஸ் மாடல்களைப் பயன்படுத்தி மேம்படுத்த முடியாது. எனவே, பாரம்பரிய வர்த்தகத் தந்திரங்களைப் பயன்படுத்தி அது விரிவடைய வேண்டும் என எதிர்பார்ப்பது சரியான தீர்வாக ஆகாது '**

**-தேவிகா புரந்தரே**
**தலைவர், வட்டாரக் கலைகள் திட்டம், தெற்காசியா, பிரிட்டிஷ் கவுன்சில்**

**' வளர்ச்சி மனப்பான்மையையும், வெற்றிக்கு நாம் வகுக்கும் இலக்கணத்தையும் நாம் எவ்வாறு கேள்வி கேட்க முடியும்? வெற்றி என்றால் என்ன என்று வரையறுப்பது மிகவும் முக்கியமானது. நமக்கு உண்மையிலேயே தேவைப்படுவது எவ்வளவு? இதுதான் அனைத்துக்கும் ஆதாரம்.'**

**- கீதாஞ்சலி கஸ்லிவால், நிறுவனர் மற்றும் மேலாண் இயக்குநர்- அனந்த்தயா ரீட்டெய்ல்ஸ் பிரைவேட் லிமிட்டெட்**

வெற்றியின் அளவுகோலை கலாச்சார அடிப்படையில் எப்படி வரையறுக்க முடியும் என்பது முக்கியமானது. அது நமது பாதையை வகுத்துத் தருகிறது. முன்னேற்றங்களுக்கு இலக்குகளை நிர்ணயிக்கிறது. வாய்ப்பு வளங்களை திரட்டுகிறது. இயற்கைச் சூழலுக்கான இலக்குகளை குறிப்பிடுகிறது. இவற்றுடன் கூடவே, கைவினைத் தொழிலுக்கு வேறுபல நெருக்கடிகளும் ஏற்படுகின்றன. எடுத்துக் காட்டாக, நியாயமான ஊதியம், வேலை நிலைமை, கலாச்சார ஒழுங்கு, பாரம்பரியத் திறன்கள் சீரழிவது ஆகியவற்றைக் கூறலாம்.

இந்த நெருக்கடிகள் இருந்தாலும் கூட, இந்த ஆராய்ச்சியின்போது, இந்த சவால்களை தனிநபர்களும், நிறுவனங்களும் எவ்வாறு கடந்து, மிகச்சிறந்த நடைமுறைகளை அடையாளம் கண்டனர் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். கைவேலைத் திறன் மற்றும் சுதேசி அறிவாற்றல் , இயற்கைச் சூழலுக்கு நேயமான சுதேசி நுட்பங்களை புதுப்பித்தல் மற்றும் சுழல் பொருளாதாரக் கோட்பாடுகளை கைவினைத் தொழில் உற்பத்தியுடன் இணைத்தல் ஆகிய நெறிகள் மூலமாக, மெதுவான ஃபாஷனுக்குத் தேவை பெருகிவருவதை நிலைத்திருக்கும் ஃபாஷன் நிறுவனங்களும், தொழில்முயற்சியாளர்களும், குறுசிறு நடுத்தர தொழில் நிறுவனங்களும், நன்கு வேரூன்றிய கம்பெனிகளும் புரிந்து கொண்டுள்ளனர்.

# ஐ நா நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் கைவினைகளின் பங்கு

ஐ நா-வின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் ( UN SDGs) பலவற்றை எட்டுவதில் கைவினைத் தொழில் மற்றும் கலைகள் சிறப்பான பங்காற்றுகின்றன.

**நிலத்தில் வாழ்க்கை (SDG 15)**

பல கைவினைத் தொழில்களில் இயற்கை வளங்கள் தொடர்ந்து நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுச்சூழலுக்கும், பல்லுயிர்ப்பெருக்கத்திற்கு காட்டப்படும் இந்த மரியாதையால், இயற்கைச் சூழல் பாதுகாக்கப்பட்டு , மீட்கப்பட்டு, அதை தொடர்ந்து பயன்படுத்துவது ஊக்குவிக்கப்படும். இந்தியாவின் வடகிழக்கு வட்டாரத்தில், குறிப்பாக அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா போன்ற மாநிலங்களில் நிலவும் மூங்கில் வேலைப்பாடுகளினால், மூங்கில் காடுகளின் இயற்கைச் சூழல் பாதிக்கப்படாமல் மூங்கில் மரங்கள் ஏராளமாகப் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறாக, மண்ணில் கிடைக்கும் வளங்கள் நீடித்து நிலையாகப் பயன்படுகின்றன.

**பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (SDG 12)**

பாரம்பரியக் கைவினைத் தொழில்கள் பெரும்பாலும் உள்ளூரிலேயே தொடர்ந்து கிடைக்கும், சுற்றுச்சூழலுக்கு நேயமான பொருட்களையே பயன்படுத்துகின்றன. எனவே, பொறுப்பு வாய்ந்த நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை ஊக்கப்படுத்துவதில் கைவினைத் தொழில் பெரும்பங்காற்ற முடியும்.

**குறையும் ஏற்றத்தாழ்வுகள் ( SDG 10)**

பல சமூதாயங்களில், கைவினைத் தொழில் திறன்களை ஒதுக்கப்பட்ட குழுவினர் பேணிக்காத்து வருகின்றனர். இவர்களில் சுதேசி சமூகங்களும், பெண்களும், ஊனமடைந்த நபர்களும் அடங்குவர். கைவினைத் துறையில் அனைத்துப் பிரிவினரையும் சேர்த்துக் கொள்வதை ஊக்கப்படுத்துவதன் மூலம், சமூக - பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உதவியாக இருக்கும். சேவா( சுயவேலை செய்யும் பெண்கள் சங்கம்) போன்ற இந்தியாவின் கைவினைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெண் கைவினைக் கலைஞர்கள் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு விற்கின்றனர். இதனால் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வும், பொருளாதார வித்தியாசங்களும் குறைகின்றன.

**வறுமையை வெளியேற்றுதல் ( SDG 1)**

கைவினைத் தொழில்களில் பெரும்பாலும் திறன்களை மையமாகக் கொண்ட வேலைகள் இருப்பதால் அவை உலகெங்கும் கோடிக்கணக்கான கைவினைக் கலைஞர்களுக்கு வாழ்வாதாரத்தை தருகின்றன. கைவினைப் பொருட்களுக்கு சந்தை வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலமும், தரமான கைவேலைப்பாடுகள் உள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் திறமையை வலுப்படுத்துவதன் மூலமும், வறுமையைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

**ஆண் -பெண் சமத்துவம் ( SDG 5 )**


முக்கியமாக பெண்களை வேலைக்கு அமர்த்தும் கைவினைத் தொழில்கள் ஆண் -பெண் சமத்துவத்தை ( SDG 5 ) அடைவதில் முக்கிய பங்காற்றுகின்றன. அவை பெண்களுக்கு குறிப்பாக , பருவநிலை மாறுதல் ஏற்படுக் காலகட்டங்களில், மீண்டெழும் வகையில் வருமானம் தரக்கூடிய வழிகளைக் காட்டுகின்றன. எனினும், சுற்றுச்சூழல் சீர்கேடுகளினால் ஆண்-பெண் ஏற்றத்தாழ்வு தீவிரமடைந்து, பெண் கலைஞர்களே பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க, கைவினைத் தொழிலின் பருவநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகள் பெண்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும். கைவினைத் தொழில் சார்ந்த பருவநிலை மாற்றச் செயல்பாடுகளில் பெண்களை ஈடுபடுத்தி, அவர்களின் தேவைகளை நிறைவேற்றி, SDG 5 இலக்குகளுக்கு ஏற்ப நீடித்த நிலையான வளர்ச்சி காண்பதை ஊக்கப்படுத்த வேண்டும்.

**கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி ( SDG 8 )**

கைவினைத் தொழில்களினால் வருமானமும், வேலை வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டு, பொருளாதாரத்திற்கு அவை பக்கபலமாக இருக்கின்றன. கைவினைத் தொழில்களை வளர்ப்பதால், குறிப்பாக கிராமப் புறங்களிலும், வசதிக் குறைவான இடங்களிலும் கண்ணியமான வேலை வாய்ப்புக்கள் உருவாகின்றன. சுற்றுலாவை தொடர்ந்து ஊக்குவிப்பதால், அந்தந்தப் பகுதிகளில் உள்ள கைவினைத் தொழில்களினால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. கதர் மற்றும் காதி, கையால் நெய்யப்படும் துணிகள், இந்தியாவின் கிராமங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்றன. காதியை தொடர்ந்து நீடித்த நிலையில் கவர்ச்சிகரமான தொழிலாக மேம்படுத்திட, காதி மற்றும் கிராமத் தொழில்கள் கமிஷன் பாடுபட்டு வருகிறது.

**தொழில், புத்தாக்கம் மற்றும் கட்டமைப்பு வசதிகள் (SDG 9)**

பல நூற்றாண்டுகால பழமையான அறிவாற்றலுக்கும், புத்தாக்கத்திற்கும் ஒரு சின்னமாக கைவினைத் தொழில் இருக்கிறது, கைவினைத் தொழில்களுக்கு ஆதரவு தருவதன் மூலம், நாடுகளின் சமூகங்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, பாரம்பரியப் புத்தாக்கத் திறனை மேம்படுத்த முடியும்,



# III.நீடித்த நிலையான ஃபாஷனை அடைவதற்கான வழிகள்

தடைகளைத் தாண்டி, மாற்றத்தை விரைவுபடுத்துதல்

இந்த அத்தியாயத்தில் இந்தியாவின் கைவினைத் தொழில் மீண்டெழுந்து, சூழ்நிலைக்குத் தக்க தன்னை மாற்றிக் கொண்ட கதை விவரிக்கப்படுகிறது. நெருக்கடி தரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு ஏற்ப இந்தத் தொழில் எப்படி தன்னை மாற்றிக் கொண்டது என்பதும், நீடித்த நிலையான செய்முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசரத் தேவையும் இங்கு விளக்கப்படுகிறது. கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் சுற்றுச்சூழலுக்கு நேயமான சுதேசி நுட்பங்களைப் புதுப்பிப்பதில் இருந்து சுழல் பொருளாதாரக் கோட்பாடுகளுடன் அதை இணைப்பது வரையும், முற்போக்கான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் இருந்து பொருட்களை புத்தாக்கம் செய்வது வரையும் இதில் கவனம் செலுத்தப்படுகிறது. மேலும், கொள்கை மற்றும் ஆதரவின் சிறப்பும் வலியுறுத்தப்படுகிறது.

இந்த ஆராய்ச்சியில், கைவினைக் கலைஞர்களும் அவர்களின் அமைப்புக்களும் தங்களது வரம்புகளை மறுவரையறை செய்வதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளை நாம் நேரில் காணப் போகிறோம். அவர்களின் அணுகுமுறை புதுப்பிக்க வல்ல, உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவது, எரிசக்தியை சேமிக்கும் நுட்பங்களைப் பயன்படுத்துவது, கழிவுகளைக் குறைக்கும் நோக்குடன் டிசைன் செய்வது, தயாரிக்கப்படும் பொருட்கள் நீடித்து உழைப்பதை மேம்படுத்துவது ஆகியனவற்றை மையமாகக் கொண்டுள்ளது. இங்கு விவாதிக்கப்படும் செய்முறைகள் வெறும் கருத்துக்கள் மட்டுமல்ல, அவை யதார்த்தமான உலகில் வித்தியாசத்தை ஏற்படுத்திய நடவடிக்கைகளும் ஆகும்.

படம்: பிரிட்டிஷ் கவுன்சில்



'கைவினைக் கலைஞர்கள் ஒவ்வொருவரும் பருவநிலை ஆர்வலர்கள்தான். அவர்கள் வெளியிடும் கருத்துக்களினால் அல்லது அவர்கள் பங்கேற்கும் பேரணிகளினால் இதைச் சொல்லவில்லை. அவர்களின் வாழ்க்கை முறை, அவர்கள் உற்பத்தி செய்யும் முறை, அவர்கள் எவ்வாறு பிசினஸ் செய்கிறார்கள் என்பதை வைத்து இதைச் சொல்கிறோம்.

அவர்களின் கைவினைக் கலைகளில் சுழல் பொருளாதாரத்தின் நடைமுறைகள், மறுசுழற்சி செய்வது, செப்பனிட்டுப் பயன்படுத்துதல், குறைவாக எரிசக்தியைப் பயன்படுத்துவது, குறைவான கழிவு, நிலைமையைப் புரிந்து கொண்டு உற்பத்தி செய்வது ஆகிய கோட்பாடுகள் உள்ளுறையாக, வெளியே புலப்படுத்தப்படாமல், பேசப்படாமல், ஆழ வேரூன்றியுள்ளன. இயற்கை மீதான விழிப்புணர்வும், அதற்கேற்ப மாறிக் கொண்டு அக்கறை காட்டுவதும் கைவினைக் கலைஞர்களின் நீடித்த நிலையான உலகை நோக்கிய அன்றாட பங்களிப்பாக இருக்கின்றன.

எதிர்காலம் கைவினையைப் பொறுத்ததாக உள்ளது. இதை நாம் அங்கீகரித்து, புரிந்து கொண்டு செயல்படுத்த வேண்டும்.'

-டாக்டர் ரிட்டு சேட்டி

தலைவர் கிராஃப்ட் ரிவைவல் டிரஸ்ட்



படம்: [illegible] பாவ்லிக்

# த்ரெட் கட்டமைப்பு

குறுக்கிட வேண்டிய முக்கிய துறைகளைக் கண்டறிந்து, நீடித்த நிலையான ஃபாஷனுக்காக வழிகாட்டக்கூடிய தற்போதுள்ள மிகச்சிறந்த செயல்முறைகளை எடுத்துரைப்பதற்காக த்ரெட் கட்டமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது.

## குறுக்கிட வேண்டிய முக்கிய துறைகள்

| | |
|---|---|
| டி | **தொழில்நுட்பம் மற்றும் புதுமை**<br>Technology and innovation |
| எச் | **பாரம்பரிய பொருட்கள் மற்றும் புதுமை**<br>Heritage materials and innovation |
| ஆர். | **ஆராய்ச்சி**<br>Research |
| இ | **கைவினைஞர்களின் இயற்கை சூழல் மற்றும் கைவினை சார்ந்த தொழில்கள்**<br>Ecosystem for craftspeople and craft led-enterprises |
| ஒரு | **ஆதரவு மற்றும் கொள்கை**<br>Advocacy and policy |
| டி | **அபிவிருத்தி நிதி மற்றும் மூலதனம்**<br>Development funds and investment |

## 08. டெக்னாலஜி மற்றும் புத்தாக்கம்

டெக்னாலஜியும் புத்தாக்கமும் எண்ணற்ற தொழில்களுக்கு மறுவடிவம் கொடுக்கின்றன. இதற்கு கைவினைத் தொழிலும் விலக்கல்ல. டெக்னாலஜியினால் பாரம்பரியக் கைவினைத் தொழிலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து அடிக்கடி கவலைகள் எழுந்தாலும், டெக்னாலஜியைக் கவனமாகப் பயன்படுத்தினால் அது நீடித்த நிலையான ஃபாஷனை நோக்கிய புதிய வாய்ப்புக்களை வழங்கும் சக்திவாய்ந்த கருவியாகப் பயன்படும். சமீபத்திய ஆண்டுகளில், இந்தியக் கைவினைக் கலைஞர்களுக்கு உற்ற தோழனாக டெக்னாலஜி உருவெடுத்து, அவர்களின் கைவினைத் திறனையும், சந்தைப்படுத்துவதையும், வெளிப்படையான தன்மையையும், நீடித்து நிலைத்திருத்தலையும் அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது.

1. **நேரடி மார்க்கெட் வசதி:** டெக்னாலஜி புவி எல்லைகளைத் தாண்டி கைவினைக் கலைஞர்கள் உலகளாவிய மார்க்கெட்டுகளை அடைவதற்கு உதவி வருகிறது. ஆன்லைன் சந்தைகளும், இ-வர்த்தகமும் பாலங்களைப் போல் செயல்பட்டு, உலகெங்கும் உள்ள நுகர்வோருடன் கைவினைக் கலைஞர்களை நேரடியாக இணைக்கின்றன
2. **தேடிக்கண்டறிவதும், வெளிப்படையான தன்மையும்:** கைவினைப் பொருட்களை சப்ளை செய்வதில் தேடிக்கண்டறிவதற்கும், வெளிப்படையான தன்மைக்கும் உதவியாக பிளாக்செயின் மற்றும் இதர டிஜிட்டல் கருவிகள் இருக்கின்றன. இதனால் நுகர்வோர் விவரம் அறிந்து தேர்ந்தெடுக்க முடிகிறது; நீடித்த நிலையான மற்றும் அறநெறி சார்ந்த முறையில் தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு தேவை அதிகரிக்கிறது. ஆடைகளின் பட்டன்களில் ரேடியோ ஃப்ரிகொன்ஸி ஐடெண்ட்டிஃபிகேஷன் டெக்னாலஜி மூலம் 11.1 போன்ற முன்னெடுப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், ஆடைகள் எங்கிருக்கின்றன என்பதைத் தேடிக் கண்டறிய நுகர்வோருக்கு உதவுகிறது. மேலும், இது நுகர்வோர் புராடக்டுகளின் வரலாற்றையும், அவற்றை தயாரித்தவர்களையும், அவற்றின் சுற்றுச்சூழல் தன்மையையும் தெரிந்து கொள்ள முடிகிறது.
3. **இயற்கை அடிப்படையிலான தீர்வுகள்:** கைவினைத் துறைக்குள் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டறிந்து செயல்படுத்திட டெக்னாலஜி உதவுகிறது. இதில் இயற்கைச் சூழலுக்கு நேயமான உற்பத்தி நடைமுறைகளும், மூலப்பொருட்களை நீடித்த அடிப்படையில் பெறுவதும் அடங்கும். உதாரணமாக, பிரிகிட்டெ சிங்கின் 'நீர்வளச் சேமிப்புக்கான முன்னெடுப்பு' போன்ற முன்னெடுப்புக்களினால் இயற்கைச் சூழலுக்கு நேயமான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, சாயத்தினால் மாசு உண்டாகும் பிரச்சினை தீர்க்கப்பட்டு, நீர்வளத்தை திறம்பட நிர்வகிப்பதற்கு வழி பிறந்துள்ளது.
4. **சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்தல்:** கைவினைக் கலைஞர்களும், கைவினைத் தொழில் நிறுவனங்களும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிய டெக்னாலஜியைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, ஆடைகளைப் பேக்கிங் செய்வதற்கான ரீடுலேஜ் மற்றும் லைஃப்சைக்கிள் முறையின் தானாக அழிக்கும் டெக்னாலஜி ஒரு தடவை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பேக்கேஜிங் முறையினால்  சுற்றுச்சூழல் பாதிப்புக்கள்  திறம்பட சமாளிக்கப்படுகின்றன. கஷா பிராண்டு தனது வாடிக்கையாளர்களுக்கு மறுவிற்பனை செய்யவும், செப்பனிடவும் வசதி செய்து கொடுத்து புராடக்டின் பயன்பாட்டை நீட்டிக்க வழி காட்டுகிறது. இந்த அணுகுமுறையால், நீடித்த உழைப்பும், நிலைத்தன்மையும் மேம்படுத்தப்படுவதோடு, ஃபாஷன் பொருட்களைப் பயன்படுத்துவதால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறைகிறது.
5. **செய்முறை மேம்பாடு:** கைவினைத் தொழிலின் தயாரிப்புக்கள் மட்டுமல்ல, தயாரிப்பு முறையும் படிப்படியாக உருவெடுத்து வருகின்றன. உதாரணமாக, தரங்கிணி ஸ்டூடியோவின் பிளாக் பிரிண்ட்டிங் யூனிட் இயற்கைச் சாயங்களையும், குளோபல் ஆர்கானிக் டெக்ஸ்டைல் ஸ்டாண்டர்ட் (GOTS) சான்றிதழ் பெற்ற சாயங்களையும் பயன்படுத்தி, அதன் நுட்பங்களைப் புரிந்து கொண்டு தயாரிக்கிறது. இதனால் அது சுற்றுச்சூழல் பாதிப்பை வெற்றிகரமாகக் குறைத்து, நிகர ஜீரோ இலக்குகளை அடைந்திருக்கிறது.
6. **கைவினைக் கலைஞர்களின் நலனையும், கைவேலைத் திறனையும் மேம்படுத்துதல்:** கைவினைக் கலைஞர்களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்தவும், அவர்களின் உடல்நலனைப் பாதுகாக்கவும் கருவிகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, டாடா அந்த்தரன் புராஜெக்ட் கைவினைக் கலைஞர்களுக்கு நிலைத்திருக்கும் மரத்தறிகளை வழங்கியுள்ளது. இதனால் நெசவுப் பணியின் நிலைத்தன்மை கணிசமாக மேம்பட்டுள்ளது. இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டதால், நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளின் தரம் தாறுமாறாக இருப்பது குறைகிறது. அவர்களின் கைவேலைத் திறனும் மேம்படுகிறது. நாகாலாந்தில், நெசவுத் தறியுடன் முதுகைச் சேர்த்து கட்டிக்கொண்டு அமர்வதற்கான ஒரு எர்கோனாமிக் ஸ்டூலை வடிவமைத்துள்ளனர். இதனால் நெசவாளர்களுக்கு உடல் சிரமம் இல்லாமல் போய், அவர்களின் முதுகு வலியும் குறைகிறது. இந்தப் புத்தாக்கங்களினால், கலைஞர்களின் சௌகரியம் அதிகரிப்பதோடு அவர்களின் உடல்நிலையும் நன்றாக இருக்கிறது.

# பிரிகிட்டெ சிங்

## கைவினைத் தொழிலும் இயற்கை அடிப்படையிலான நீடித்த நீர்வள நிர்வாகமும்

ஜெய்ப்பூரைச் சேர்ந்த பிரபல பிளாக் பிரிண்ட் கலைஞரான பிரிகிட் சிங் அண்டை அயலில் உள்ள நீர்நிலைகளை சாய மாசில் இருந்து பாதுகாப்பதற்காக கல்வாழைச் செடிகளால் தண்ணீரை வடிகட்டும் முறை ஒன்றை செயல்படுத்தினார். மேலும், அவர் நீடித்து நிலையான நீர்வள மேலாண்மை முறை ஒன்றையும் ஊக்கப்படுத்தினார். கல்வாழை என்பது இயற்கையான முறையில் தண்ணீரை சுத்தம் செய்யும் ஒரு தாவரம். இது நீர்நிலைகளில் உள்ள தண்ணீரில் இருந்து மாசுகளை உறிஞ்சிக் கொள்கிறது. வெப்பமண்டல நிலைமைகளில் கழிவு நீரில் இருந்து கரியமிலம், நைட்ரஜன், பாஸ்பரஸ் ஆகியவற்றை அகற்றும் திறன் இந்தக் கல்வாழைக்கு உண்டு என்பதை ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன 35. இதன் கெட்டியான வேர்கள் ஒரு வடிப்பானைப் போலச் செயல்படுகின்றன. மேலும், இந்த வேர்களில் பயனளிக்கும் உயிரிகள் வாழ்கின்றன. நச்சுக்களை எதிர்த்து நிற்கும் கல்வாழை, தண்ணீரைச் சுத்தப்படுத்துவதற்கு மிகச்சிறந்தது ஆகும்.

புணேயில் உள்ள தண்ணீரைச் சுத்தப்படுத்தி, சேமிக்கும் துறையில் வல்லுநரான ஒரு இஞ்சினியருடன் ஒத்துழைத்து, இயற்கையான மணல் மற்றும் மாட்டுச் சாணம் போன்ற மக்கும் பொருட்களைச் சேர்த்து புதுமையான வடிப்பான்களை இருவரும் உருவாக்கினார்கள். இந்த வடிப்பான்கள் மாசுகளை ஜீரணிக்கும் சக்தி வாய்ந்த வேர்கள் வளர்வதற்கு உதவுகின்றன. இதன் விளைவாக, கிடைக்கும் தண்ணீர் நகராட்சி வழங்கும் தண்ணீரைக் காட்டிலும் சிறந்ததாக, கிட்டத்தட்ட குடிக்கத் தக்கதாக இருக்கிறது. பிரிகிட்டெ சிங்கின் பணியிடத்திற்கு நாங்கள் கள ஆய்வு மேற்கொள்ளச் சென்றிருந்த போது இந்த வடிப்பு முறை செயல்படுவதை நேரில் கண்டோம். அந்தத் தண்ணீர் மறு உபயோகத்திற்கு ஏற்றதாக இருந்தது.

இந்த வடிப்பான்கள் சுழல் அடிப்படையில் ஒரு வாரத்திற்கு ஒரு வடிப்பானும், அடுத்த வாரத்திற்கு இன்னொரு வடிப்பானும என்று மாறிமாறி பயன்படுத்தப்படுகின்றன. இந்த முறையினால், ஒவ்வொரு வடிப்பானுக்கும் மாசுகளை ஜீரணிப்பதற்கும், நீர் அடைபடாமல் தடுப்பதற்கும், போதிய நேரம் கிடைத்து, இந்த நீர்வடிப்பு முறை நீண்டகாலத்திற்கு திறமையுடன் செயல்பட முடிகிறது. இந்த வடிப்பான்கள் 17 ஆண்டுகளாக மாற்றப்படாமலே பயன்படுத்தப்படுகின்றன.



படம்: ஷ்ருதி சிங்

# 11.11

## வெளிப்படையான கைவினை சப்ளைத் தொடரமைப்பு மேலாண்மைக்கு RFID மற்றும் நியர் ஃபீல்டு கம்யூனிகேஷன்

11.11 என்பது ஒரு மெதுவான ஃபாஷன் பிராண்டு ஆகும். நீடித்து நிலைத்த செயல்முறையில் இது காட்டும் ஈடுபாடு மிகவும் பிரபலமானது. இந்த நிறுவனம் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்காக, தான் தயாரிக்கும் ஆடைகளுக்கு சாயம் தோய்ப்பதற்காக செடிகளில் இருந்து எடுக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்துகிறது. இந்த பிராண்டு நிறுவனம் தனது ஆடைத் தயாரிப்பில் RFID மற்றும் நியர் ஃபீல்டு கம்யூனிகேஷன் ( NFC) டெக்னாலஜிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த டெக்னாலஜிகள் ஆடைகளின் பட்டன்களில் புத்திசாலித்தனமாக பொருத்தப்பட்டுள்ளன. நுகர்வோர் தங்களது ஸ்மார்ட் போன்களைக் கொண்டு, இந்த பட்டன்களை ஸ்கேன் செய்யும்போது அவர்கள் ஏராளமான தகவல்களைப் பெற முடிகிறது. இந்த ஆடை உருவாக்கப்பட்டதில் இருந்து அவர்களின் கைகளுக்கு வந்து சேர்ந்தது வரை அதன் பயணம் முழுவதையும் அவர்கள் தேடிக் கண்டுபிடிக்க முடிகிறது. இப்படிக் கிடைக்கும் தகவல்களில் ஆடை உற்பத்தியின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களும் அடங்கும்.

RFID மற்றும் நியர் ஃபீல்டு கம்யூனிகேஷன் ( NFC) டெக்னாலஜிகளை செயல்படுத்தியதன் மூலம் ஃபாஷன் தொழிலில் பொறுப்புணர்வையும், வெளிப்படையான தன்மையையும் வளர்க்கும் தனது நோக்கத்தை 11.11 வெளிப்படுத்தியுள்ளது. நுகர்வோர் தங்களுடைய ஆடைகள் எங்கு தோன்றின என்பதையும், அவற்றை தேர்ந்தெடுத்து வாங்குவதால் ஏற்படும் பாதிப்பையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்று இந்த நிறுவனம் விரும்புகிறது. இது நுகர்வோருக்கும், கைவினைக் கலைஞர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையிலான ஒரு தொடர்பு ஆகும்.



படம்: டெல்பைன் பாங்லிக்

**' பாரம்பரியக் கலாச்சார அறிவும், அதன் வெளிப்பாடும் இயற்கையுடன் இணைந்தவையாக உள்ளன. தலைமுறை தலைமுறையாக அதைப் பின்பற்றும் கைவினைக் கலைஞர்கள் ஒரே மாதிரியாக இந்த பூமியுடன் இணைந்தவர்களாக உள்ளனர். எதிர்காலத்தில் நீடித்த நிலைத்த தன்மையை அடைவதற்கு இந்தச் செயல்முறைகள் மிகவும் முக்கியம் என நான் கருதுகிறேன்.'**

**-ஷ்ரவணி தேஷ்முக், கல்ச்சுரல் இண்ட்டெலக்சுவல் புராப்பர்ட்டி ரைட்ஸ் இனிஷியேட்டிவ்**



படம்: டெல்பைன் பால்லிக்



# டூட்லேஜ்

## புதுவிதமான பேக்கேஜிங் மூலம் பிளாஸ்டிக் மாசைக் கட்டுப்படுத்துதல்

டூட்லேஜ் என்னும் ஃபாஷன் பிராண்டு காலாவதியான பழைய துணிகளை மறுசுழற்சி செய்து அழகிய ஆடைகளாக மாற்றுகிறது. அண்மையில், இது ஆடைகளை பேக் செய்வதில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துவதற்காக லைஃப்சைக்கிள் என்னும் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்தது. இந்த ஒத்துழைப்பு டூட்லேஜின் பேக்கிங் முறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இதற்காக, லைஃப்சைக்கிளின் தானாக அழியும் டெக்னாலஜி மூலம் ஆடைகளை வைக்கும் பைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதன் நோக்கம், ஃபாஷன் தொழிலில் , குறிப்பாக பிளாஸ்டிக் மாசையும், கடலில் மைக்ரோபிளாஸ்டிக்குகளையும் முறியடிப்பதற்காக சுழல் முறையில் பொருட்களைப் பயன்படுத்துவது ஆகும்.

வழக்கமான ஆடைகள் வைக்கப்படும் பைகளுக்கு மாற்றாக ஒரு புதுவிதமான பைகளை லைஃப்சைக்கிளின் டெக்னாலஜி தருகிறது. இது ஒரு பையின் உபயோக ஆயுள்காலத்திற்குள் அதை ரீசைக்கிளிங் செய்ய அனுமதிக்கிறது. வழக்கமான ரீசைக்கிளிங் சிஸ்டம்களில் இருந்து தப்பிக்கும் பிளாஸ்டிக்குகளை பயோடிரான்ஸ்ஃபர்மேஷன் மூலம் மக்கக்கூடிய மெழுகாக மாற்றுகிறது. இந்த மெழுகு பூஞ்சைகளையும், பாக்டீரியாக்களையும் ஈர்த்து, அதை உணவாக்கி, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளில் நச்சுகளையோ, அல்லது மைக்ரோபிளாஸ்டிக்குகளையோ வெளியிடாமல் இயற்கைக்குத் திரும்பத் தருகிறது.

டூட்லேஜ் பிராண்டு இந்த லைஃப்சைக்கிளின் டெக்னாலஜியை தனது பேக்கேஜிங் முறையில் இணைத்துக் கொண்டதன் நோக்கம் ஃபாஷன் துறையில் ஒளிவுமறைவற்ற, நீடித்த நிலைத்தன்மையை கொண்டு வருவது ஆகும். பேக்கேஜிங்கினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து பற்றிய விழிப்புணர்வை உருவாக்கி, கடலுக்குக் கேடு விளைவிக்காத சிறந்த மாற்றுமுறை ஒன்றை இது வழங்குகிறது.

## 09. மரபுசார்ந்த பொருட்களும் புத்தாக்கமும்

மரபு சார்ந்த பொருட்களும், இயற்கை இழைகளும், தாவர அடிப்படையிலான செயல்முறைகளும் ஃபாஸ்ட் ஃபாஷன் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்கு மாற்றாக அசலான, இயற்கைச் சூழலுக்கு நேயமான பொருட்களைத் தருகின்றன. பருவநிலை தொடர்பான நடவடிக்கைகளில் இவற்றின் சிறப்புக்களைப் பேணிக்காத்து, இந்த நுட்பங்களுக்கு புத்துயிர் கொடுப்பதிலும், ஃபாஷன் இயற்கைச் சூழலுக்கு இவற்றைக் கிடைக்கச் செய்வதிலும், இவற்றினால் உண்டாகும் சுற்றுச்சூழல் பயன்களைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதிலும் உள்ள சவால்களைப் புரிந்து கொள்வது சவால்மிக்கதாகும்.

1. **சுதேசி அறிவாற்றலைப் பேணிக்காத்தல்:** பெரும்பாலும் சுதேசிப் பொருட்களுக்கு பிரத்யேகமான தன்மைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை இப்போதுதான் நவீன விஞ்ஞானம் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது. உதாரணமாக, மூங்கில் மக்கும் திறனையும், அசாதாரணமான மீட்சி வலிமையையும் கொண்டிருக்கிறது. ஆனாலும், மலிவாக உடனுக்குடன் கிடைக்கு சிந்தெட்டிக் பொருட்கள் இந்த நீடித்து நிலைத்திருக்கும் மூலப் பொருளான மூங்கிலுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இந்த மாற்றத்தினால், இயற்கைச் சூழலுக்கு கேடு விளைவிக்காத சுதேசிப் பொருட்களைப் பயன்படுத்துவது குறைந்து வருகிறது.
2. **இயற்கை இழைகளும், அவற்றைப் புதுப்பிக்கும் முயற்சிகளும்:** மாட்டி போன்ற அமைப்புக்கள் சுதேசி மூலப்பொருட்கள் கிடைப்பதை மேம்படுத்திட, புதுவிதமான விதை வங்கிகள் மற்றும் நூல் வங்கிகள் போன்ற முன்னெடுப்புக்களின் மூலமாக முயற்சிகளை மேற்கொள்கின்றன. பாலியஸ்டர் இழைகளினால் நெய்யப்படும் துணிகள் மற்றும் ஃபாஸ்ட் ஃபாஷனால் மறையத் தொடங்கிவிட்ட இயற்கைச் சூழலைக் கெடுக்காத பொருட்களுக்கும், நுட்பங்களுக்கும் புத்துயிர் கொடுப்பது இவற்றின் நோக்கமாகும். இதற்கு ஒரு நிரூபணமாக காலா காட்டன் மற்றும் தேசி வுல் புத்துயிர் பெற்றுள்ளது. மேலும் நீண்டகாலத்திற்கு நீடித்திருக்கக் கூடிய உற்பத்தி முறைகளுக்காக சுதேசி மூலப்பொருட்களைப் புதுப்பிப்பதற்கு இவை சாட்சியமாகத் திகழ்கின்றன.
3. **நீடித்து நிலைத்திருக்கும் பொருட்களில் புத்தாக்கம்:** மெதுவான ஃபாஷன் டிசைனர்கள் பாரம்பரிய அறிவாற்றலில் ஆழ வேரூன்றியுள்ள, மறு உருவாக்கம் பெறுகிற, மக்கிப் போகின்ற பொருட்களையும், நெசவு நுட்பங்களையும் பயன்படுத்தி தங்களுக்கு தேவையான மூலப்பொருட்களின் எல்லைகளை விரிவுபடுத்துகின்றனர். கழித்துக் கட்டப்பட்ட பொருட்களை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல், பூக்களின் கழிவுகளில் இருந்து வேகன் லெதரை உருவாக்குதல், துணிகளை வீணாக்காத முறையில் கட்டிங் செய்தல் போன்ற புதுவிதமான அணுகுமுறைகள் பாரம்பரியத்துக்கும், நீடித்த நிலைத்தன்மைக்கும் இடையே உள்ள ஒத்திசைவை எடுத்துக் காட்டுகின்றன.

கோல்டன் ஃபீதர்ஸ் என்பது குப்பையில் கொட்டப்படுகிற கோழி இறகுகளைக் கொண்டு , ஸ்கார்ஃப்கள் மற்றும் ஸ்டோல்கள் போன்ற நேர்த்தியான துணிகளாக உருமாற்றம் செய்யும் டிசைனர்களின் முன்னெடுப்பாகும். ஃபீதரின் இன்னொரு முன்னெடுப்புக்கு உதாரணமாக, வேகன் லெதரைக் குறிப்பிடலாம். இதில் கோயில்களில் இருந்து கொட்டப்படும் பூக்களின் கழிவுகள் சேகரிக்கப்பட்டு வேகன் லெதராக மாற்றப்படுகின்றன. இந்த நீடித்து நிலைத்திருக்கும் பொருட்கள் மிருகங்களின் லெதருக்கு மாற்றாக உள்ளன. அது மட்டுமல்ல, பூக்களின் குப்பைகள் கங்கை நதியில் கொட்டப்படும் பிரச்சினைக்கும் இது தீர்வு காண்கிறது. ஜீரோ வேஸ்ட் அணுகுமுறையை ஜீரோ ஜீரோ பிராண்டு பின்பற்றுகிறது. இதற்காக பழங்கால இந்தியக் கட்டிங் பேட்டர்னை இது பயன்படுத்துகிறது. துணிகளின் துண்டுக் கழிவுகள் மிகவும் கவனமாக சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்டு, ஒன்றுடன் ஒன்றாக பின்னப்பட்டு, அழகான துணிகளாக மாற்றப்படுகின்றன. இவ்வாறாக கழிவுகளில் இருந்து புதுக்கற்பனையில் அவை புதுவடிவம் பெறுகின்றன.

**" பொருட்களுக்கு தானாகவே ஒருங்கிணையும் தன்மை இருப்பதாகவும், அவற்றுக்குள்ளே டிசைன் புதைந்திருப்பதாகவும் நாடுகளும், நிறுவனங்களும் அங்கீகரித்திருப்பது அதிகரித்து வருகிறது. கண்ணோட்டத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தினால், என்ன வடிவத்தை எடுக்க வேண்டும் என்பதை பொருட்களே தீர்மானிக்க அனுமதிப்பதற்கு அதிகம் வலியுறுத்தப்படுகிறது. இப்போது எல்லாம் மக்கள் இந்தப் பொருள் எங்கு தோன்றியது என்பதை அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இந்தக் களிமண் எங்கிருந்து எடுக்கப்பட்டது, எந்த மாதிரியான இழைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று கேட்கின்றனர். இதனால் இறுதி டிசைனில் இயற்கை தானாகவே வெளிப்படுகிறது. இயற்கையின் ஓட்டத்தை மிகவும் நுணுக்கமாக புரிந்து கொள்கிறவர்களின் அறிவாற்றலை டிசைனர்களும், கைவினைக் கலைஞர்களும் மதித்து, அவர்களுக்கு வழிகாட்டியாகச் செயல்படுகின்றனர்.**

**பொருள் பற்றிய அறிவும், டிசைனும் இவ்வாறு இணைவதால், தங்களது பொருட்களுடன் ஆழமான தொடர்பு கொண்டுள்ள கைவினைக் கலைஞர்களுக்கு அதிகாரம் கிடைக்கிறது. எப்போது அறுவடை செய்ய வேண்டும், எப்போது அது திரும்ப வளரும், சீசனுக்கு ஏற்ற சரியான கலர் என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்கின்றனர். சீசனுக்கு ஏற்ப டிசைனை மாற்றுவது மிகவும் அற்புதமாக பிரதிபலிக்கப்படுகிறது. இது சீசனுக்கும், டிசைனுக்கும் இடையிலான அழகான ஒரு ஒத்திசைவாகும்.**

**குறிப்பாக கலைகளில், பெண்களுக்குள்ள அறிவாற்றல் நீண்டகாலமாக அங்கீகரிக்கப்படாமலே இருந்தது. இந்த உரையாடலில் ஈடுபட்டுள்ள நாம் இணைப்புக்களை ஏற்படுத்தி, பெண்களுக்கென தனியாக மேடை அமைத்துக் கொடுத்து அவர்களின் குரலும், அவர்கள் கொண்டிருக்கும் மதிப்பீடுகளும் ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். '**

**ஸ்டீபனி அவன்ஸ், டீன், டிசைன் மற்றும் மீடியா, கலைப் பல்கலைக் கழகம், பிளைமவுத்**

# கமிர்

## சுதேசி காலா காட்டன் மற்றும் தேசி உல்லை ( சுதேசி உல்லன் நூல் ) புதுப்பிப்பது

கமிர் என்பது புஜ் வட்டாரத்தில் உள்ள ஒரு கலாச்சார நிறுவனம். இது கலாச்சாரம், இயற்கைச் சூழல், மரபுச் செல்வம், கைவினைக் கலைகள் ஆகியவற்றின் குரலை ஒலிக்கும் மேடையாகத் திகழ்கிறது. சுதேசி இழைகளுக்கு புத்துயிர் அளிப்பதிலும், கைவினைக் கலைஞர்களின் சமூகங்களுக்கு ஆதரவு அளிப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது.

காலா பருத்தி ;  கட்ச் வட்டாரத்தின் வறட்சியான, ஓரளவு பாலை நிலம் போன்ற பருவநிலை நிலவுகிறது. இதன் பருவநிலை மாற்றத்தினால் தாறுமாறான மழைப்பொழிவு, அதிகரிக்கும் வெப்பநிலை, மிகவும் மோசமான வானிலைப் பிரச்சினைகளுக்கு அதிகம் இலக்காவது என்பன போன்ற சவால்கள் எழுகின்றன. கட்ச் வட்டாரத்தின் சில பகுதிகளில் வகத் பருத்தி எனப்படும் சுதேசி பருத்தி ரகம் நீண்டகாலமாக விளைவிக்கப்படுகிறது. இது மானாவாரிப் பயிர் என்பதால், இயற்கையாகவே பூச்சிகளையும், நோய்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது. இதற்கு குறைவான பராமரிப்பே போதும்.

வகத் பருத்தியின் பிரபலம் சரியத் தொடங்கியது. அமெரிக்கன் காட்டன் மற்றும் அதன் பிறகு பிளைட் காட்டன் எனப்படும் பாஸிலியஸ் துரிஞ்ஜியனிஸிஸ் பருத்தி ரகம் அதிகரிக்கத் தொடங்கியதே இதற்குக் காரணம் 36. வழக்கமான பருத்தி சாகுபடிக்கு ஏராளமான தண்ணீரும்,ரசாயன உரங்களும் தேவைப்படுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் சீர்கேடு அதிகரித்து, பருவநிலை மாற்றம் உண்டாகிறது. இப்படிப்பட்ட நிலையில், பருவநிலை மாற்றத்தை எதிர்த்து நிற்கக்கூடிய, வழக்கமான பருத்திக்கு மாற்றான ஒரு பருத்தி ரகம் தேவை என உணரப்பட்டதால், காலா பருத்தி அல்லது வகத் பருத்திக்கு புத்துயிர் அளிக்கப்படுகிறது. இப்போது இந்த வட்டாரத்தில் தண்ணீர் உபயோகத்தைக் குறைத்து, ரசாயன உரங்களின் பயன்பாட்டையும் குறைத்து, நீடித்து நிலைத்திருக்கும் சாகுபடி முறையை நோக்கிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு மறைந்து விட்டதோடு, விவசாயிகளின் வாழ்வாதாரமும், சுற்றுச்சூழலின் தாக்குப்பிடிக்கும் தன்மையும் மேம்பட்டுள்ளது. காலா பருத்திக்கு புத்துயிர் அளிப்பதில் கமீர் முக்கிய பங்கு வகிக்கிறது. அது விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல், மார்க்கெட் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், விதைகளைப் பேணிக்காத்தல், கொள்கை ஆதரவு தருதல் என்று பல்வேறு வழிகளில் தலையிட்டு உதவி வருகிறது.

தேசி உல் : பிரிட்டிஷ் கவுன்சிலின்' கிராஃப்ட்ஸ் ஃப்யூச்சர்ஸ் ' என்னும் திட்டத்தின் கீழ் இந்தியாவின் கமீர் கிராஃப்ட்ஸ் நிறுவனமும் இங்கிலாந்தின் ஃபீல்டு ஓர்க் நிறுவனமும் கூட்டுச் சேர்ந்து தேசி ஊன் எனப்படும் சுதேசி உல்லன் நூலுக்கு புத்துயிர் ஊட்டும் புராஜெக்ட் ஒன்றில் ஈடுபட்டன. இதற்காக உள்ளூரில் கிடைக்கும் நூற்பு, நெசவு, கைகளால் நீவிவிடுதல் போன்ற கைவேலைத் திறன்களை பயன்படுத்திக் கொண்டன. 'கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ்' 38 என்பது பிரிட்டிஷ் கவுன்சில் மேற்கொண்டுள்ள ஓர் உலகளாவிய திட்டப்பணியாகும், இதன் நோக்கம் கூட்டு படைப்பு மற்றும் ஒத்துழைப்பு மூலமாக நீடித்த நிலையான எதிர்காலத்தை வளர்ப்பது.

100-க்கும் மேற்பட்ட நூல் நூற்பாளர்கள் தங்களது உல்லன் நூலின் தரம் மேம்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். அவர்கள் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தி, தங்களது சமூகத்திற்கு உள்ளேயே கைநூற்பு முறைக்கு புத்துயிர் அளித்தனர். கூடவே, இந்தத் திட்டப்பணியின்போது அறிமுகப்படுத்தப்பட்ட டிசைன்களின் அடிப்படையில் நெசவாளர்கள் தாங்களாகவே சொந்தமாக டிசைன்களை சுதேசி உல்லன் நூல்களைப் பயன்படுத்தி உருவாக்கினார்கள். அவர்கள் மூன்றாவது தரப்பு டிசைனர்களை சார்ந்திருக்கவில்லை.

இந்த அதிகாரத்தினால், ஒட்டகங்களில் இருந்து எடுக்கப்படும் தேசி உல்லன் புதுமையான முறையில் பயன்படுத்தப்படுகிறது. உள்ளூர் பொருட்களின் பிரத்யேகத் தன்மையை ஏற்கக்கூடிய புதிய டிசைன்களை நெசவாளர்கள் உருவாக்க முடிகிறது. இந்தத் திட்டப்பணியில் கட்ச் வட்டாரத்தின் 100 பெண்களும் ஈடுபடுத்தப்பட்டு, சமுதாய உணர்வும், படைப்பாற்றலும் வளர்க்கப்படுகின்றன.

கமீர் இந்த மாடலை நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் செயல்படுத்துகிறது. உள்நாட்டு நூல்களுக்கு புத்துயிர் தருவது, உள்ளூர் நெசவாளர் சமூகங்களுக்கு அதிகாரம் அளித்தல், பருவநிலை மாற்றத்தை எதிர்த்து நிற்கக்கூடிய நடைமுறைகளை வளர்த்தல், கைவினைக்கும், சுற்றுச்சூழலின் நீடித்த தன்மைக்கும் ஆக்கப்பூர்வமான ஒரு பாதிப்பை ஏற்படுத்துதல் இந்த விரிவாக்கத்தின் நோக்கமாகும்.



படம்: டெல்பைன பாவலிக்

# கோல்டன் ஃபீதர்ஸ்

## கோழி இறகுகளைக் கொண்டு புதுமையாகத் தயாரிக்கப்படும் துணி- கழிவுகளை நீடித்த நிலையான ஃபாஷனாக மாற்றுதல்

மக்கிப் போகாத கோழி இறகுகளைக் கொண்டுபோய்க் கொட்டும்போது அவை நீர்நிலைகளை மாசுபடுத்தி விடுகின்றன. இந்தக் கோழி இறகுகளினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கண்டறிந்த ராதேஷ் என்பவர், இந்தப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக, இந்த இறகுகளை மதிப்பு வாய்ந்த, இயற்கைச் சூழலுக்கு தொல்லை தராத பொருளாக மாற்ற முற்பட்டார்.

உள்ளூர் இறைச்சிக் கடைக்காரர்களிடம் இருந்து கோழி இறகுகளை சேகரித்து, அவற்றைக் கவனமாகச் சுத்தம் செய்தார். பிறகு தனிச்சிறப்புமிக்க ஒரு செய்முறை மூலம் இந்த கோழி இறகுகளை நூலாக மாற்றினார். இந்தப் புத்தாக்கத்தினால் பிரத்யேகமான துணி ஒன்று உருவானது. அது பாரம்பரிய உல்லன் சால்வைகளைக் காட்டிலும் லேசானதாக உள்ளது. மரினோ, நியூஸிலாந்து, பாஸ்மினா, செம்மறி ஆடு, வாத்து போன்ற பல்வேறு இயற்கை உல்லன்களின் தன்மையைக் கொண்டுள்ளது.

சமூகப் பாதிப்பு: கலாச்சார நம்பிக்கைகள் மற்றும் சைவ உணவு பழக்கங்கள் ஆகியவற்றினால் ஆரம்பத்தில் இவரது முயற்சிகளுக்கு நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது. எனினும், கோழி இறகுகளை நூலாக நூற்பதற்காக ஒரு குறிப்பிட்ட பழங்குடி சமூகத்துடன் ராதேஷ் தொடர்பு கொண்டார். இதனால் உற்பத்திப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. அதோடு, சமூகத்திலும் ஆக்கப்பூர்வமான ஒரு பாதிப்பு உண்டானது. பல பழங்குடி பெண்களுக்கு நல்ல வேலை கிடைத்தது. மூன்றாண்டுகளில், சுமார் 500 டன் கோழிக் கழிவுகளை கோல்டன் ஃபீதர்ஸ் மறுசுழற்சி செய்து, கைத்தறித் துணியாக மாற்றிவிட்டது. இவரிடம் சுமார் 375 ஓரளவு திறன் பெற்ற / திறன் பெறாத தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். இவருடைய கைத்தறி நடவடிக்கைகள் மூலமாக 2000-க்கும் அதிகமான பழங்குடிப் பெண்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ளது.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் தீர்த்தல்: நதிநீரும், மேல்பரப்பு நீரும் மாசுபடுதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு கோல்டன் ஃபீதர்ஸ் தீர்வு கண்டுள்ளது. அது கோழி இறகுக் கழிவுகளை பல்ப்பாகவும், நூலாகவும் மாற்றி இறகு உல்லனைத் தயாரிக்கிறது. மேலும், இந்த இறகுத் துணியும், உல்லனும் சிந்த்தெட்டிக்/ பிளாஸ்டிக் இழைகளுக்கும், பாலிஃபில்களுக்கும், பருத்தி, மற்றும் செம்மறி ஆட்டு உல்லன்களுக்கும் மாற்றாக உள்ளது. இதனால் பூமியை வெப்பமடையச் செய்யும் வாயு வெளியேறுவது கணிசமாகக் குறைந்து, மக்களுக்கும், இந்தப் பூமிக்கும் பயன் கிடைக்கிறது.



படம்: பிரிட்டிஷ் கவுன்சில்

**" கைவினைக் கலைஞர்களுடன் தொடர்பு கொள்வதால் பொருளாதார ஆதாயம் கிடைப்பதோடு, பெண்களுக்குப் பலனளிக்கும் சமூக மாற்றமும் நிகழ்கிறது என்பதை எங்களுடைய நடவடிக்கைகளின் மூலம் தெரிந்து கொண்டோம். கைவினைத் தொழில் என்பது ஊதியம் ஈட்டுவது மட்டுமல்ல, கைவினைக் கலைஞர்களுக்கு தலைமுறை தலைமுறையாக வந்து அவர்களிடம் திணிக்கப்பட்ட ஒரு வேலைக்கு வெளியே அவர்களது அடையாளம் என்ன என்பதைக் கண்டறிவது என்பதையும் புரிந்து கொண்டோம். இந்த அணுகுமுறை அவர்களின் சுதேசி அறிவாற்றலைப் பதிவு செய்ய எங்களுக்கு உதவியது. அவர்களுடைய அறிவாற்றல் மூலம் ஒன்று சேர்ந்து பருவநிலை மாற்றம் நெருக்கடிக்கு தீர்வு காணும் மைக்ரோ சிஸ்டம்கள் அவர்களிடம் இருப்பதை அறிந்தோம்."**

**-பாவ்யா கோயங்கா, நிறுவனர், ஐரோ ஐரோ**



படம்: டெல்பைன் பாவ்லிக்



# ஐரோ ஐரோ

## கழிவுகளில் இருந்து புதிய துணி ரகங்களை நெய்தல்

நீடித்து நிலைத்திருக்கும் ஒரு ஃபாஷன் பிராண்டான ஐரோ ஐரோ கைவினைத் தொழிலில் பாலி அடிப்படையிலான பொருட்களைப் பயன்படுத்துவதால் உண்டாகக்கூடிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது. இந்த நிறுவனத்தின் நோக்கம், பாலி அடிப்படையிலான கழிவுகளை அகற்றி துணிக் கழிவுகளைக் கொண்டு வந்து, கைவினையின் கலாச்சார அம்சத்தைப் பேணிக்காப்பதாகும்.

கழிவில் இருந்து நெசவு: பல்வேறு தொழிற்சாலைகளில் இருந்து துணிக் கழிவுகளைப் பெற்று, அவற்றைத் துணியாக நெய்வது ஐரோ ஐரோ நிறுவனத்தின் அணுகுமுறையாகும். இது வாங்கும் துணிக் கழிவுகள் கவனமாகப் பக்குவப்படுத்தப்பட்டு, லைனர் நூலாக மாற்றப்படுகின்றன. இந்த நூல் கையால் நெய்யப்படும் துணிகளுக்கு அடிப்படையாக அமைகிறது. இந்தச் செய்முறையினால் சுற்றுச்சூழலுக்கு நேயமான துணிகள் உருவாக்கப்படுவதோடு, கலாச்சாரச் சிறப்பையும் இது கொண்டுள்ளது. கழிவுகளைக் குறைத்து, பாலியஸ்டர் அடிப்படையிலான பொருட்களுக்குப் பதிலாக நீடித்து நிலைத்திருந்து, கலாச்சாரப் பாரம்பரியத்தை மதிக்கக்கூடிய மாற்று துணிகளை உருவாக்குவது இந்த நிறுவனத்தின் குறிக்கோள் ஆகும்.

பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்: ஐரோ ஐரோ நிறுவனத்தின் அணுகுமுறையால் பெண்களுக்கும், சமூகத்திற்கும் கைவினைத் தொழில்கள் மூலமாக அதிகாரம் கிடைத்து, அவர்கள் சமூகத் தாக்கத்திற்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றனர். பெண்களுக்கு அர்த்தமுள்ள உரையாடல்களில் பங்கேற்க வாய்ப்பளிப்பதன் மூலம், அவர்களின் அடையாளங்களைக் கண்டறிந்து, சமூக மாற்றத்திற்கு ஐரோ ஐரோ பெரும் பங்காற்றுகிறது.

ஐரோ ஐரோ நிறுவனம் கழிவுகளை மறு சுழற்சி செய்து நிலையான துணிப் பொருட்களைத் தயாரிப்பதால், கழிவுகள் குறைந்து, சுற்றுச்சூழல் பொறுப்பை அது நிறைவேற்றுகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 15 டன் வெட்டுத்துணிக் கழிவுகளைக் கொண்டு அழகான துணிகளாக மாற்றியுள்ளது. இந்த முயற்சியால், வான்வெளியில் 250 டன் கரியமில வாயு கலப்பது தடுக்கப்பட்டுள்ளது.

## 10. ஆராய்ச்சி

**' ஜிடிபி, டெம்ப்பரேச்சர், எடை, பர்ச்சேஸிங் மேனேஜர்ஸ் இண்டெக்ஸ் (பி எம் ஐ) என்று எல்லாவற்றையும் நாம் அளந்து பார்த்து மதிப்பிடுகிறோம். ஆனால், அளவு என்பதற்கு ஒரு அளவே இல்லை. எதிர்காலம் எந்த ஒரு அளவுக்கும் உட்படாத நிச்சயமற்ற நிலைமைகளைக் கொண்டிருக்கிறது. ஜிடிபி-ஐ அதிகரிப்பதற்காக நாம் எல்லா மரங்களையும் வெட்டிவிட முடியாது; நமக்கு முன்னே என்ன காத்திருக்கிறது என்பதை அது பிரதிபலிப்பதில்லை. இந்தப் பூமியில் மிகப்பெரிய உயிரினம் என்ற முறையில், கலாச்சாரங்களையும், மொழிகளையும் கடந்து அனைத்துப் பழக்கவழக்கங்களையும் உள்ளடக்கி நாம் தீர்வு காண வேண்டியிருக்கிறது. நமது நடவடிக்கைகளை அளந்து பார்த்து, அந்த அறிவைக் கொண்டு நமது பாதைக்கு வழி தேட முடியுமா?'**

**-ஆயுஷ் கஸ்லிவால், நிறுவனர் மற்றும் இயக்குநர், ஆயுஷ் கஸ்லிவால் டிசைன் பிரைவேட் லிமிட்டெட்**

**' எண்ணப்படாதவர்கள் எண்ணுவதில்லை"**

**-டாக்டர் ரிட்டு சேட்டி, தலைவர், கிராஃப்ட் ரிவைவல் டிரஸ்ட்**

இந்தியாவில், கைவினைத் தொழிலுக்கு கணிசமான சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார முக்கியத்துவம் இருக்கின்ற போதிலும், அது பெரிதும் ஆவணப்படுத்தப்படாமலே, விரிவான டேட்டா இல்லாமலே இருக்கிறது. தொழில்துறை நீடித்து நிலையான வளர்ச்சி காண வேண்டுமானால், இந்த டேட்டா இடைவெளியை நிரப்ப வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

இப்போது, சுற்றுச்சூழலில் சப்ளைத் தொடரமைப்பினால் என்ன பாதிப்பு உண்டாகிறது என்பதை விவரிக்கும் டேட்டா போதுமான அளவுக்கு இல்லை. இந்த டேட்டா வெற்றிடத்தை நிரப்பிட விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். கைவினைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக உள்ள, கைவினைத் தொழிலை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு முறையை உருவாக்குவதற்கு ஓர் அடித்தளமாக இந்த ஆராய்ச்சி இருக்கும். கைவினைத் தொழிலின் சுற்றுச்சூழல் பாதிப்புக்களை டேட்டாவைக் கொண்டு புரிந்து கொண்டு, நீடித்த நிலைத்தன்மைக்கு ஊக்கம் தந்திட மேலும் அதிகத் திறமையுடன் மேம்பட்ட உத்திகளை நம்மால் உருவாக்க முடியும்.

இந்தியாவில் கைவினைத் தொழிலினால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு எந்த அளவுக்கு பலதரப்பட்டதாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள நம்பகமான டேட்டா இல்லாமல் இருப்பது ஒரு தடையாக இருக்கிறது. இதனால் கைவினைத் தொழில்களைப் பேணிக்காத்து, ஊக்கப்படுத்தி, நவீனப்படுத்திட பயனுள்ள உத்திகளை வகுப்பது கடினமாக இருக்கிறது. மேலும், புதிய மார்க்கெட்டுகளை அடைவதற்கும், விவரம் தெரிந்து முடிவுகளை எடுப்பதற்கும், அல்லது நிதி மற்றும் நிறுவன ஆதரவை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான தகவல்கள் இல்லாமல், அது கைவினைத் தொழிலாளர்களுக்கும், பிஸினஸ் நிறுவனங்களுக்கும் ஒரு சவாலாக இருக்கிறது. இந்தியாவில் கைவினைத் தொழிலையும், நீடித்த நிலையான ஃபாஷன் பிரிவையும் மேம்படுத்துவதற்கு துறைகளுக்கு இடையிலான ஆராய்ச்சி மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது.

## கைவினைத் தொழிலை மையமாகக் கொண்டு பாதிப்பை அளவிடுதல்

கைவினைத் துறைக்குள்ளே அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையைத் தீவிரமான ஆராய்ச்சி மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், அப்படிப் புரிந்து கொண்டதை உறுதிப்படுத்தவும் கைவினைத் தொழிலை மையமாகக் கொண்ட அளவிடும் முறை முக்கியமாகத் தேவைப்படுகிறது. கைவினைத் துறையை உலகளாவிய மதிப்பீட்டுத் தொடரமைப்பில் சேர்ப்பதற்கும், அதை உலகளாவிய முறையில் அங்கீகாரம் பெறுவதற்கும் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையின் குறியீடுகளைத் தேடிக் கண்டறிந்து, அளவிட்டு தெரிவிப்பதற்கு உரிய சிஸ்டம்களை நிறுவ வேண்டியிருக்கிறது. மேலும், எந்த ஒரு உலகளாவிய பாதிப்பு மதிப்பீடும் கைவினைத் துறைக்கே உள்ள பிரத்யேகமான கலாச்சார மற்றும் கட்டமைப்பு நெளிவுசுளிவுகளை கட்டாயம் கவனிக்க வேண்டும். இந்த அம்சங்களைப் புறக்கணித்தால், கைவினைத் துறையை உலகளாவிய கட்டமைப்புக்குள் சேர்ப்பதற்கு தடங்கல் உண்டாகும். அதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. கைவினைத் துறை சுற்றுச்சூழலுக்குப் பங்களிப்பதற்கு அப்பாலும், கலாச்சார மரபுகள், பொருளாதார அதிகாரம், திறன் வளர்ப்பு, சமூக ஒற்றுமை ஆகிய மதிப்பிடற்கரிய ஒருமைப்பாட்டின் பிரதிநிதியாகவும் திகழ்கிறது. கைவினையை வெறுமனே சுற்றுச்சூழல் அளவீடுகளின் அடிப்படையில் அளக்கும்போது, அது இந்த சமூக-கலாச்சார பங்களிப்பு என்னும் பன்முகத் தன்மையை ஒதுக்கி விடுவது போலாகி விடும். இத்தகைய குறுகிய மதிப்பீடுகளினால் முதலீடு வருவது குறைந்துவிடக் கூடும், உலகச் சந்தைகளுக்கும் போக முடியாமல் போய்விடும்.
2. நீடித்து நிலைத்திருப்பதற்கான மதிப்பீடுகளைச் செய்யும்போது பரிசீலித்தே ஆகவேண்டிய வெளிப்படையான சவால்களையும் கைவினைத் துறை சமாளிக்க வேண்டியுள்ளது; பல கைவினை நடவடிக்கைகள் முறைசாரா பொருளாதாரக் கட்டமைப்புக்குள் இயங்குகின்றன. மேலும் புவியியல் அமைப்பில் ஒரே இடத்தில் இல்லாமல் பரவிக் கிடக்கின்றன. இதனால் டேட்டாவை சேகரிப்பது ஒரு சிக்கலான முயற்சியாக ஆகிவிடுகிறது.
3. மேலும், கைவினை என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்தும்போது, நீடித்த நிலைத்தன்மையை அளவிடுவதற்கு பல்வேறு இடங்களில் பரவிக் கிடக்கும் கைவினைக் கலைஞர்களைச் சென்றடைவது மிகவும் முக்கியமாகும்.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கு கைவினைத் துறையின் பங்களிப்புக்கு உள்ள ஆழத்தையும், தனிச்சிறப்பையும் உண்மையாகவே தெரிந்து கொள்ள வேண்டுமானால், முழுமையான, தேவைக்கு ஏற்ற, அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய அணுகுமுறைப்படி அளவிடுவது மிகவும் இன்றியமையாதது ஆகும்.

# 200 மில்லியன் கைவினைக் கலைஞர்கள்

## இந்தியக் கைவினைத் துறையில் டேட்டா இடைவெளியை இணைப்பது

இந்தியாவின் கைவினைப் பொருளாதாரத்திற்குள் 200 மில்லியன் கைவினைக் கலைஞர்கள் செயல்படுகின்றனர். இவர்கள் கைகளால் தயாரிக்கப்படும் தொழில்துறைக்கே உரித்தான உள்ளுறை சக்தியைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றனர். அத்தியாவசியமான அறிவாற்றல், வாய்ப்பு வளங்கள், தொடரமைப்பு ஆகியவற்றைப் பெற்று தற்சார்பை அதிகரித்து, புத்தாக்க முனைப்புடன் செயல்படுகின்றனர்.

அணுகுமுறையும், செயல்படுத்தலும்:

1. **இயற்கைச் சூழலுக்கு உதவுவது:** 200 மில்லியன் கைவினைக் கலைஞர்கள் கைவினை அடிப்படையிலான தொழிலை புத்தாக்கத்துக்கு நிதி, கருவிகள் மற்றும் கருத்துக்களை வழங்கும் முறையுடன் இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தனர். இந்த நிறுவனங்கள் சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளை வழங்கும் வகையில் கைவினைத் தொழிலாளர்களின் உத்திகள் இருந்தன.
2. **ஆராய்ச்சி நோக்குடைய கருத்துக்கள்:** டேட்டா அடிப்படையிலான ஆராய்ச்சியை வலியுறுத்தும் இந்த நிறுவனம், தகவல் குறைபாடுகளைப் போக்குவதற்கான கருத்துக்களை வழங்கி, முதலீட்டு முடிவுகளுக்கு வழிகாட்டி, கொள்கைக் கட்டமைப்புக்களைத் தெரிவித்தது.
   - அ. 2023-ஆம் ஆண்டில், ' செயலூக்கியான மூலதனம் எவ்வாறு இந்தியாவின் கலாச்சாரப் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்க முடியும்' என்ற ஆராய்ச்சி மூலம், இந்தியாவின் படைப்புத்திறன் மிக்க தொழில்களிலும், கைவினைத் தொழில்களிலும் முதலீடு செய்வதற்கான நெளிவுசுளிவுகளை ஆராயப்பட்டது. இது தொடர்பாக செயலூக்கி மூலதனத்தின் சிக்கல்களும் ஆராயப்பட்டன.
   - ஆ. 'இந்தியாவின் முறைசாரா கைவினைப் பொருளாதாரத்தை முறைப்படுத்துவதில் ' கைவினை அடிப்படையிலான தொழில்நிறுவனங்களின் பங்கு பற்றிய 2021-ஆம் ஆண்டின் முன்னெடுப்பு, கைவினைத் துறையில் படைப்பு, கலாச்சாரம், முறைசாராத் தன்மை ஆகியன பற்றிய விரிவான ஆய்வை வழங்கியது.
3. **ஒத்துழைப்புத் திட்டப்பணிகள் மூலம் அறிவாற்றலை ஒருங்கிணைப்பது:** பல துறைகளுக்கு இடையிலான பணியின் மதிப்பை உணர்ந்த 200 மில்லியன் கைவினைக் கலைஞர்கள், அறிவு, வாய்ப்புவளங்கள், கூட்டாளி உறவு ஆகியவை கலந்த புராஜெக்டுகளை மேற்கொண்டு, இந்தியக் கைவினைத் துறை பற்றிய முழுமையான புரிந்துணர்வை ஏற்படுத்தினார்கள்.

இலக்குடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் ஒத்துழைப்பு முறைகளில் ஆழ வேரூன்றிய 200 மில்லியன் கைவினைக் கலைஞர்களின் அணுகுமுறை, இந்தியக் கைவினைப் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்களைத் தீர்ப்பதற்கான கருவியாகும். அறிவாற்றலில் காணும் இடைவெளியை செயல்நோக்குடன் நிரப்புவதன் மூலம், இந்த நிறுவனம் வேகவேகமாக மாறிவரும் உலகச்சூழலில் கைவினைத் துறையின் மீட்சி ஆற்றலுக்கும், சூழலுக்கு ஏற்ப மாறிக் கொள்ளும் தன்மைக்கும் பங்களிக்கிறது.



படம்: பிரிட்டிஷ் கவுன்சில்

## 11. கைவினைக் கலைஞர்களுக்கும், கைவினை சார்ந்த தொழில் நிறுவனங்களுக்குமான இயற்கைச் சூழல்

கைவினைத் துறையில் சுழல் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் குறுசிறுநடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முன்னணியில் இருக்கின்றன. மேலும், கைவினை இயற்கைச் சூழலுக்கு உட்பட்டு புத்தாக்கமான தீர்வுகளை அவை வழங்குகின்றன. இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் பெண்களாலும், கைவினைத் தொழில் முயற்சியாளர்களாலும் நடத்தப்படுகின்றன. இவை பாரம்பரிய நடைமுறைகளை தாக்குப்பிடித்து நிலைத்து நிற்கக்கூடிய புதுவிதமான பிஸினஸாக மாற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும், இந்த நிறுவனங்களிடம் சக்தி இருந்த போதிலும், வளர்ச்சிக்குத் தடையாக பல கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

**பெண்களைச் சேர்த்துக் கொள்வதும், நிலையான நடைமுறைகளும்:** ' கைத்தயாரிப்பு பிஸினஸ்- கைத்தயாரிப்புப் புரட்சிக்காக நிதிவழங்குதல்' என்னும் அண்மைக்கால ஆராய்ச்சி, கிராஃப்ட், மைக்ரோ, மற்றும் கைத்தயாரிப்பு துறையின் (CMH) பிரத்யேகப் பங்களிப்பை எடுத்துக் காட்டுகிறது. வேறுபல தொழில்களைப் போலன்றி, CMH துறை பெண்களைச் சேர்த்துக் கொள்வதில் முனைப்பாகச் செயல்படுகிறது. இதில் பெண்கள் பல்வேறு பணிகளைச் செய்வதில் முன்னணியில் உள்ளனர். மேலும், பசுமைப் பொருளாதாரத்திற்குப் பங்களிப்பதிலும் இந்த CMH நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன. பிராண்டுகள் சர்வே செய்யப்பட்டதில், 49 சதவிகித பிராண்டுகள் மெதுவான ஃபாஷனில் ஈடுபட்டுள்ளன, 35 சதவிகித பிராண்டுகள் கழிவுப்பொருட்களைச் சுத்திகரித்துப் பயன்படுத்துகின்றன, 34 சதவிகித பிராண்டுகள் தங்களது உற்பத்திப் பணிகளில் இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்துகின்றன.

கைவினை அடிப்படையிலான குறுசிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாராட்டத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும், அவற்றுக்கு கடுமையான நிதிப்பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. 88 சதவிகித கைத்தயாரிப்பு நிறுவனங்கள் தற்போது சுயநிதி மூலம் தாங்களாகவே பணம் திரட்டிக் கொள்கின்றன. இந்தத் தற்சார்பு நிதிவசதி முறையினால் நிறுவனங்களின் உற்பத்தி அளவிலும், புத்தாக்க முயற்சிகளிலும் தடங்கல்கள் ஏற்பட்டு கணிசமான அளவுக்குப் பாதிப்பு உண்டாகிறது.

> **டிசைன் என்பது பார்வைப் புலனுக்கும் அப்பாற்பட்டது; அது நம்மிடம் உள்ள பொருட்களின் ஆயுள்காலம் முழுவதையும் உள்ளடக்கியது, உண்மையான டிசைன் என்பது, குறிப்பாக பருவநிலைப் பாதிப்பு உள்ள சூழலில் நம்மிடம் இருக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு புதுவிதமான தீர்வுகளைக் காணும் நமது திறமையைக் குறிக்கிறது. பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் சவால்கள் எப்போதும் மாறிக் கொண்டே இருக்கக் கூடியவை. இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகையில் மாறுதல் அடைந்து கொண்டே இருக்கும் பருவநிலை மாற்றச் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில், பிரத்யேகமான தீர்வுகளை உருவாக்குவதாக, நமது டிசைன்கள் இருக்க வேண்டும். '**
>
> **-சஞ்சய் கர்க், நிறுவனர் & டிசைனர், ரா மேங்கோ**

இந்த நிறுவனங்களின் முழுத்திறனையும் கட்டவிழ்த்துவிட்டு, மக்களிடமும், இந்தப் பூமியிலும் இந்த நிறுவனங்களினால் ஏற்படக்கூடிய ஆக்கப்பூர்வமான பாதிப்பைப் பயன்படுத்திட, இயற்கைச் சூழலின் உறுதியான ஆதரவு கட்டாயம் தேவைப்படுகிறது. கைவினைகளின் அடிப்படையிலான குறுசிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அவை நிலையாக நீடித்து செயல்படுவதற்காக, நெட்வொர்க்குகளும், திறன் பெற்ற கைவினைக் கலைஞர்களும், வழிகாட்டுவோரும், கொள்கைகளும் தேவைப்படுகின்றன. இந்த நிறுவனங்களுக்காக இயற்கைச் சூழலின் ஆதரவை உருவாக்கிட பாடுபடும் ஒரு நிறுவனம்தான் கிரியேட்டிவ் டிக்னிட்டி. இந்த சமூகநல அமைப்பு கைவினை அடிப்படையிலான பிஸினஸுக்கு உவகளாவிய வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதிலும், பொருட்கள் கிடைக்கச் செய்வதிலும், திறன்வளர்க்க உதவுவதிலும் கல்வி வளங்களை வழங்குவதிலும், பசுமைமய மற்றும் சுழல்முறைப் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

கைவினை அடிப்படையிலான நிறுவனங்கள் பல்வேறு வடிவங்களில் வருகின்றன. சிலவற்றை கைவினைக் கலைஞர்கள் தங்களது சமூகத்தை மேம்படுத்துவதற்கான ஆழ்ந்த கடமைப்பற்றுடன் தலைமையேற்று நடத்துகின்றனர். சிலவற்றை புத்தாக்க டிசைன் உருவாக்குகிறவர்கள் நடத்துகின்றனர். இன்னும் சிலவற்றை, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தங்களது கைவினைக்கு புதிய பரிமாணங்களைக் கொண்டுவர விரும்புவோர் நடத்துகின்றனர். இவர்களின் கவனம் எல்லாம் கைவினைத் துறைக்கு தற்போதுள்ள மற்றும் இன்னும் உருவெடுக்கிற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்வுகளை உருவாக்குவதில் உள்ளது.

டிசைன் பற்றிய கல்வி மூலம் பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்: கைவினைக் கல்வி வழங்குவதில் கைவினைக் கலைஞர்களை இணைப்பதன் மூலமே டிசைன் பற்றிய கல்வியில் மாற்றம் செய்ய முடியும். கைவினைக் கலைஞர்களின் அறிவும், அனுபவமும், ஆற்றலும் மாணவர்களுக்கு மதிப்புமிக்கவையாக இருக்கும். கைவினைக் கலைஞர்களை ஆசிரியர்களாகவும், பயிற்றுவிப்பாளர்களாகவும் வைப்பதன் மூலம், கற்கும் அனுபவத்தை நாம் செழுமையாக்குவதோடு, காலங்காலமாக இருந்து வரும் கைவினை நுட்பங்களை அடுத்த தலைமுறைக்கு மாற்றித் தர முடிகிறது.

> **' அடையாளத்தை நம்மால் எப்படி வலுப்படுத்த முடியும்? இந்த அறிவாற்றல் உள்ளவர்களை நம்மால் எப்படிப் பாதுகாக்க முடியும்? அவர்களிடம் இருப்பதை பறித்துக் கொள்ளாமல், அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்து மேலும் ஒரு படி உயர்த்தும் வகையில் எப்படி புத்தாக்கங்களைக் கொண்டு வர முடியும்?'**
>
> **-ராதி பரேக், நிறுவக இயக்குநர், ஆர்ட்டிஸான்ஸ்**

இன்டர்ன்ஷிப், கள வருகைகள், கைவினை அடிப்படையிலான புராஜெக்டுகள் என்பன போன்ற அனுபவக் கல்வி மாணவர்களுக்கு கைவினைத் துறை பற்றிய ஆழ்ந்த புரிதலைத் தரும். நேரடியாகக் கைவினைக் கலைஞர்களிடம் இருந்து கற்பதால், படிப்பறிவுக்கும், செய்முறைத் திறனுக்கும் இடையே இருக்கும் இடைவெளியை நிரப்ப முடியும். இதனால் கைவினைத் தொழிலின் நெளிவுசுழிவுகளை மாணவர்கள் விரிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

நிறைவாக, கைவினை அடிப்படையிலான குறுசிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் கைவினைத் துறையிலும், பொருளாதாரத்திலும் ஆக்கப்பூர்வமான மாற்றம் ஏற்படுகிறது. சரியான இயற்கைச் சூழல் ஆதரவு இருக்குமானால், இந்த நிறுவனங்களுக்கு தங்களது தாக்கத்தை மேலும் அதிகரித்து, நீடித்த நிலைத்தன்மைக்காகப் பாடுபட்டு, தங்களது படைப்புத் திறனை வெளிப்படுத்தி உலகை செழிப்பாக்கும் சக்தி உள்ளது.

# சிஜாமி வீவ்ஸ் முன்னெடுப்பு

## மூதாதையர்களின் நெசவு நுட்பங்களின் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

நாகாலாந்து மாநிலத்தின் தொலைதூரப் பகுதியில் உள்ள சிஜாமி வீவ்ஸ் என்னும் நிறுவனம் அப்பகுதியில் உள்ள அதிகம் வேலை கிடைக்காத 600-க்கும் அதிகமான பெண்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குகிறது. 2008-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள முன்னெடுப்பின் நோக்கம், நாகாலாந்தின் பெண்களுக்கு நிலையான வருமானம் கிடைக்கும் ஆதாரத்தைத் தருவதாகும்.

நார்த் -ஈஸ்ட் நெட்வொர்க் (NEN) என்னும் அரசு சாரா நிறுவனம் ஏற்படுத்திய NENterprise நிறுவனத்தின் கிளையாக சிஜாமி வீவ்ஸ் செயல்படுகிறது. இது சமூக நீதி, பாலின நீதி மற்றும் சுற்றுச்சூழல் நீதியை மேம்படுத்த பாடுபடுகிறது. குளோபல் ஃபவுண்டேஷன் ஃபார் விமன், ஃபோர்டு ஃபவுண்டேஷன் என்பன போன்ற அமைப்புக்களாலும், நாகாலாந்து அரசினாலும் ஆதரிக்கப்படும் இந்த சிஜாமி வீவ்ஸ், பெண்களுக்கு நீடித்த வாழ்வாதார வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் முன்னெடுப்பு எடுத்துள்ளது.

சிஜாமி வீவ்ஸ் பெண்களை அவர்களின் வீடுகளில் இருந்தே வேலை செய்ய அனுமதிக்கிறது. வீட்டில் அவர்கள் உருவாக்கும் படைப்புக்களை மையமான ஓரிடத்திற்குக் கொண்டு வந்து அங்கு இறுதித் தையல் போட்டு, துணிகளை ஒருங்கிணைக்கின்றனர். இந்த அணுகுமுறையில் லாஜிஸ்டிக்ஸ் சவால்கள் உள்ள போதிலும், பாரம்பரிய நடைமுறைகளுடன் நிலையான வாழ்வாதாரத்தை இணைத்து நீக்குப்போக்கான பணிச்சூழலை ஏற்படுத்தித் தருகிறது.

சிஜாமி வீவ்ஸ் நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ள டிசைன் நடவடிக்கைகளினால், 60 சதவிகித பெண்கள் மாதந்தோறும் ரூ.5000 முதல் ரூ.6000 வரை சம்பாதிக்கின்றனர். சிஜாமி வீவ்ஸ் ஒரு சமூக உணர்வை வளர்த்து, பல்வேறு பயிற்சித் திட்டங்கள், கல்வி வாய்ப்புக்கள், பொருட்காட்சிகள் ஆகியவற்றின் மூலமாக பெண்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது.



படம்: டெல்பைன் பாவ்லிக்

# ரங்ரெஸ்

## டிசைன் புத்தாக்கம் மூலம் லெஹரியா கைவினைத் தொழிலுக்குப் புத்துயிர் அளித்தல்

மொகம்மது சாக்கிப் நீண்டநெடும் கைவினைக் கலைஞர் பாரம்பரியத்தில் வந்தவர். இவர் லெஹரியா நெசவில் நிபுணர். லெஹரியா என்பது முடிச்சுக்களாகப் போட்டு சாயத்தில் முக்கி எடுத்து துணியில் பதிக்கும் ஒரு நுட்பமாகும். இது துணிகளின் மீது அலைஅலையாக பேட்டர்ன்களை உருவாக்குகிறது. இந்தப் பாரம்பரியக் கலையை சாக்கிப் குடும்பம் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பேணிக்காத்து வருகிறது. இவரது தாத்தா இக்ராமுதீன் நீல்கர் இந்தக் கலையில் மிகவும் புகழ்பெற்றவர். அவர் தமது வேலைத் திறன்களுக்காக பல விருதுகளை வென்றிருக்கிறார். லெஹரியா கலைக்கு பெருமைமிக்க வரலாறு உள்ள போதிலும், நவீனமாக்கல், தொழில் போட்டி, சிக்கலான வேலை நுட்பங்கள், இவற்றுடன் கூடவே குறைவான ஊதியம் என்பன போன்ற சிக்கல்களால் அழியும் அபாயத்தில் உள்ளது. இதனால் இந்தப் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றுவதற்கு கலைஞர்கள் தயங்குகின்றனர்.

பூர்வநிலைக்குத் திரும்புதல்: காலப்போக்கில் இயற்கைச் சாயங்களை விட்டுவிட்டு, கெமிக்கல் சாயங்களுக்கு மாறும் நிலை ஏற்பட்டுவிட்டதாக சாக்கிப் கூறினார். இதற்குக் காரணம், கெமிக்கல் சாயங்களைக் கொண்டு வேலை செய்வது எளிது. ஆனால் இவ்வாறு கெமிக்கல் சாயங்களுக்கு மாறியதால் துணிகளின் பூர்வநிலையான அசல் தன்மை குறைந்து விட்டது. எனவே, இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுவிட்டதை சாக்கிப் உணர்ந்தார். இயற்கைச் சாயங்களைக் கொண்டு துணிகளை உற்பத்தி செய்து லெஹரியா பாரம்பரியக் கலைக்கு புத்துயிர் ஊட்டுகிறார்.

கல்விச் செறிவும் புத்தாக்கமும்: சாக்கிப் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கிராஃப்ட் அண்டு டிசைன் என்ற கல்வி நிறுவனத்தில் பயின்றார். கைவினைத் தொழில் பற்றிய இவரது கண்ணோட்டத்தை அகலப்படுத்துவதில் இந்த கல்வி நிறுவனம் முக்கிய பங்கு வகித்தது. தமது டிசைன் கல்வியைப் பயன்படுத்தியும், மூதாதையர்களின் கைவினைத் திறன்களை நன்கு புரிந்து கொண்டும் லெஹரியா நெசவுக்கு புத்துயிர் ஊட்டும் ஒரு பயணத்தை சாக்கிப் தொடங்கினார். இவர் தமது ஆராய்ச்சியின் பயனாக, ஒரே சேலையில் 64 கலர்களைப் புகுத்தி, பாரம்பரிய டிசைன்களுக்கு புதுவடிவம் கொடுத்தார். அதே வேளையில், இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்துவதில் உறுதியாக இருந்தார்.

கைவினைத் தொழிலைப் புதுப்பிப்பதும், நீடித்த நிலையான வாழ்வாதாரமும்: சாக்கிபின் படைப்பு கைவினைத் திறனைப் பேணிக்காப்பதற்கு அப்பாலும் நீண்டு, நிலையான வாழ்வாதாரத்தை வழங்குவது, கலாச்சார அடையாளத்தைக் கைவிடாமல் இருப்பது, நேர்மையான, நியாயமான கைவினைத் தொழிலை உருவாக்குவது என்று விரிகிறது. லெஹரியா ஆடைகள் கைகளால் நெய்யப்படுவது என்பதால் பல குடும்பங்களுக்கு வருமானத்தை வழங்கியும், கலாச்சார மரபைத் தொடர வைத்தும் அது உறுதுணையாக இருக்கிறது. சாக்கிபின் பிராண்டு பாரம்பரியத்தில் ஆழ வேரூன்றி, புத்தாக்கம் புனையும் வலுவான டிசைன் அடிப்படையிலான தொழிலை நிறுவிட முக்கியத்துவம் தருகிறது.



படம்: டெல்பைன் பாவ்லிக்

# 12. ஆதரித்துப் பேசுதல் மற்றும் கொள்கை

### கைகளால் தயாரிக்கப்படும் பொருட்கள்: ஆதரித்துப் பேசுதலின் சக்தி

நீடித்த நிலையான ஃபாஷன் மற்றும் பருவநிலை மாற்றம் பற்றிய உரையாடல்கள் ஆதிக்கம் செலுத்தும் இந்தக் காலத்தில், பாரம்பரியக் கைவினைக் கலைகளால் கிடைக்கும் மதிப்பிடற்கரிய பங்களிப்பு பார்வையில் படாமல் தப்பிவிடுகிறது. இந்தக் கைவினை சிஸ்டம்கள் உள்ளூர் கலாச்சாரத்திலும், உலகளாவிய பொருளாதாரங்களிலும் ஆழ வேரூன்றியுள்ளன. மெதுவான ஃபாஷன் சிஸ்டம்களுக்காக இதுவரை பயன்படுத்தப்படாமல் இருக்கும் சக்தி இவற்றில் ஏராளமாக உள்ளன. கைவினைத் தொழிலுக்கு உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைப் பெறுவதில் இருந்து குறைவான கரியமில வாயு வெளியேற்றம் வரை, கைவினைத் தொழில்களின் கோட்பாடுகள் உலகளாவிய நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் பொருந்துவதாக உள்ளன. ஆனாலும், கைவினைத் தொழிலை நீடித்த நிலையான இலக்கு பற்றி உலகளாவிய நிலையில் நடைபெறும் உரையாடல்களுடன் இணைப்பதற்கு நிறையவே தடைகள் காணப்படுகின்றன. கைவினைத் தொழில்களில் காணப்படும் உள்ளுறை மதிப்பு பற்றி பரவலாகப் பேசப்படாமலே உள்ளது.

**கைவினைத் தொழிலும் பருவநிலை பற்றிய உரையாடல்களும்**

2023 குலா மாநாட்டில் முக்கிய உரையாற்றிய அசோக் சாட்டர்ஜி, கைவினைத் தொழில் பற்றி நிலவும் இருவேறு கருத்துக்கள் தொடர்பாக தமது சொந்த அனுபவத்தை விளக்கினார். இந்தியாவில் கைவினைத் தொழில் பற்றிப் பேசி நேரத்தை விரயமாக்க வேண்டாம் என தமக்கு ஒருமுறை எச்சரிக்கை விடப்பட்டதாக அவர் தெரிவித்தார். கைவினைத் தொழில் ' எதிர்காலமே இல்லாத ஒரு அஸ்தமனத் துறை , இது அருங்காட்சியகங்களுக்கு மட்டுமே ஏற்றது' என்று முத்திரை குத்தப்பட்டிருப்பதாக அவர் சொன்னார். இதற்கு முரணான வகையில், சில மாதங்கள் கழித்து, சீனாவில் நடைபெற்ற உலக கைவினைத் தொழில் கவுன்சில் கூட்டத்தில், கைவினைத் தொழிலை சூரிய உதயத் தொழில் என்று சீன அதிகாரி ஒருவர் வர்ணித்ததை தாம் கேட்டதாக அவர் கூறினார். கைவினைத் தொழில்தான் சீனா ஜடி துறையில் எழுச்சி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது என்றும் அந்த சீன அதிகாரி கூறியதாகத் தெரிவித்தார்.

அந்தக் கவுன்சில் கூட்டத்தில், ' போட்டிகள் மிகுந்த இன்றைய மார்க்கெட்டில் படைப்பும் புத்தாக்கமுமே உயிர் வாழ்வதற்கான ஒரே வழி. படைப்பு அல்லது புத்தாக்கத்திற்கான விதைகள் கைவினைத் துறையில் தூவப்பட்டுள்ளன, எனவே, கைவினைத் தொழிலை அழித்தால், நீங்கள் உங்களுடைய படைப்பாற்றலையும், புத்தாக்கத்தையும் அழித்தவர்கள் ஆவீர்கள், ' என்ற நம்பிக்கை சீனக் கண்ணோட்டத்தில் ஆழ வேரூன்றியிருப்பது தெரிய வந்ததாக அசோக் சாட்டர்ஜி கூறினார்.

பசுமைப் பொருளாதாரம் உருவெடுத்து வரும் நிலையில், கைவினைத் தொழிலின் சக்தியை ஒப்புக்கொள்வதில் புரிதல் இடைவெளியும், தகவல் தொடர்பு இடைவெளியும் காணப்படுவதை இந்த இருவேறு கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

பருவநிலை மாற்றத்திற்குத் தொழில்நுட்பத் தீர்வுகளை முன்வைத்து சர்வதேச உரையாடல்களில் ஓங்கி ஓங்கிப் பேசும்போது கைவினைத் தொழில் மற்றும் கலைஞர்களின் குரல் அடங்கிப் போவது வருந்தத்தக்கது. இந்தப் புறக்கணிக்கப்பட்ட குரலின் முக்கியத்தை உணர்ந்து கொண்ட ஐ.நா, நிரந்தரமான மன்றம் ஒன்றை உருவாக்கியுள்ளது. சுதேசிப் பிரச்சினைகள் பற்றிய ஐ. நா நிரந்தர மன்றம் என்னும் அந்த அமைப்பு பொருளாதார - சமூகக் கவுன்சில் மற்றும் சுதேசி சமூகங்களுக்கு பருவநிலை மாற்றம் பற்றி ஆலோசனை கூறும் மன்றமாகும்,

### நீடித்த நிலையான வளர்ச்சிக்கும் பாரம்பரியக் கைவினைகளுக்குமான உலகளாவிய உரையாடல்

பாரம்பரியக் கைவினைத் தொழில்களை  நீடித்த வளர்ச்சி குறித்த உரையாடல்களில் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகளை விரைவுபடுத்திட நான்கு முக்கிய பணிகள் அடிப்படைத் தேவைகளாக உள்ளன.

1. **கைவினைத் தொழிலின் நிலையான தேவை மற்றும் சப்ளை பற்றி உலகளாவிய உரையாடல்களில் இடம்பெறச் செய்தல்:** பாரம்பரியக் கைவினைத் தொழில்களும், உலகளாவிய நீடித்த நிலைத்தன்மையும் ஒரே கோட்பாடுகளைப் பற்றித்தான் பேசுகின்றன. ஆனாலும், அவை ஒரே கருத்தை இருவேறு மொழிகளைப் பேசுகிற இருவர் பேசுவதைப் போல தனித்தனியான உரையாடல்களில் இடம்பெறுகின்றன. உதாரணமாக, கைவினைக் கலைஞர்கள் உள்ளூரில் பொருட்களை வாங்கும் பழக்கத்தை நிலைத்தன்மைக்காக 'உள்ளூரில் பெறும்' கருத்தாக குறிப்பிடுகின்றனர். அதே போல, கைகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் பற்றிப் பேசுகையில், நிலைத்தன்மைக்காக 'குறைவான எரிசக்தி பயன்பாடு' மற்றும்' குறைவான கரியமில வாயு வெளியேற்றம்' என்னும் கருத்தாக பேசப்படுகிறது. இந்தக் கருத்துக்களை ஒருங்கிணைத்து, உலகளாவிய நிலைத்தன்மை என்னும் விரிவான கருத்தின் ஒரு பகுதியாக கைவினைத் தொழில்களின் கதையாக மாற்றிவிடலாம்.
2. **சுற்றுச்சூழல் பற்றிய உரையாடல்களில் கைவினைக் கலைஞர்களின் பிரதிநிதித்துவம்:** கைவினைக் கலைஞர்களிடம் நிலையான பழக்க வழக்கங்கள் இருந்த போதிலும்,  அவை இயற்கையுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தாலும், கைவினைக் கலைஞர்கள் பெரும்பாலும் உரையாடல்களுக்கு வெளியிலேயே ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். எனவே, அவர்களையும் உரையாடல்களில் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. கைவினைக் கலைஞர்களின் கதைகளைப் பரப்பிட ஊடகங்களுடனும், செல்வாக்கு உடையவர்களுடனும் கூட்டாளி உறவை ஏற்படுத்திக் கொண்டால் அவர்களின் இருப்பும், செல்வாக்கும் வெளியில் தெரிவது அதிகரிக்கும். முடிவெடுப்பதில் கைவினைக் கலைஞர்களையும் சேர்த்துக் கொள்வதன் மூலம், காலத்தின் சோதனையை வென்று நிற்கும் அவர்களின் அறிவாற்றலை உலகளாவிய உரையாடல்களிலும் இடம்பெறச் செய்யலாம்.
3. **கதை சொல்லுதல், ஆதரித்துப் பேசுதல் மற்றும் செல்வாக்கின் பாதிப்பு:** கைவினைகள் பற்றியும், நிலையான ஃபாஷன் பற்றியும் தொழிலில் இருப்போரும், நுகர்வோரும் புரிந்து கொள்ளச் செய்வதில் கதை சொல்லல் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. கைவினைக் கலைஞர்களின் கலாச்சார மரபு, வரலாறு, நிபுணத்துவம், கைவினை நுட்பங்கள் போன்றவற்றை ஒரு கதையாகச் சொல்லும்போது, அது கைவினைத் தொழிலின் உள்ளுறை நிலைத்தன்மை பற்றி வலியுறுத்திட சக்திவாய்ந்த கருவியாக ஆகிறது. இந்தக் கதைகளை புத்தகங்கள், ஆவணப்படங்கள், சமூக ஊடகங்கள், பொருட்காட்சிகள் என்று பல்வேறு ஊடகங்கள் வாயிலாக பரப்புவதால் நிலைத்தன்மை என்பதன் மையப்புள்ளியாக கைவினைக் கலைகள் இடம்பெற முடியும்.

**' கதை சொல்லல் மூலம் கற்பனையை மீண்டும் தூண்டிவிட முடியும் என்று போட்டோ ஜர்னலிசம், எழுத்து, கீழ் மட்டத்தில் அமைப்பு என்று பல்வேறு துறைகளில் செயல்பட்ட ஃபாஷன் ஆர்வலர் என்ற முறையில் நான் நம்புகிறேன். பருவநிலை நெருக்கடியால் வர்ணனைச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தீர்வுகளை மையமாகக் கொண்ட இதழியலில் செயல்பட்டு, ஒரு கலாச்சார மற்றும் உலகளாவிய சமூகம் என்ற முறையில் அடுத்த கட்டமாக நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை தெரிவிக்க வேண்டியிருக்கிறது; கதை சொல்லுவதற்குரிய வாகனமான ஃபாஷன், பருவநிலை நடவடிக்கை பற்றித் தெரிவிப்பதற்கு அற்புதமான ஒரு கருவியாக இருக்கிறது.'**

**-அதிதி மேயர், நிலையான ஃபாஷன் உள்ளடக்க படைப்பாளி மற்றும் கன்சல்ட்டன்ட் அதிமே**

**' செல்வாக்கு செலுத்தாமல் இருக்கும் ஒரு போக்கு இப்போது நிலவுகிறது. இந்த நிலையில் மக்கள் மெதுவான வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்து, மிகவும் கவனமாகச் செயல்பட்டு, தங்களது வேர்களுடன் மீண்டும் இணைகின்றனர். இந்தப் போக்கு கதை சொல்வதற்கு மிகச்சிறந்த சூழலாகும். விற்பனையைப் பற்றியல்ல, நாம் எவ்வாறு தேர்ந்தெடுக்கிறோம், எவ்வாறு ஆடைகளைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றியது. நாம் எவ்வாறு ஆடைகளை அணுகுகிறோம் என்னும் போக்கை அடுத்த தலைமுறை மாற்றிக் காட்டும் என்று நம்புகிறேன். அடுத்த தலைமுறையினர் ஒத்துழைப்புப் போக்கைக் கடைப்பிடித்து, உடைகளைப் பகிர்ந்து கொண்டு, எங்கு வாங்குவது என்பது குறித்து கவனமாக இருப்பார்கள். அவர்கள் ஒழுக்கமான உடைகளை அணிய விரும்புகிறார்கள் எனில், அதற்கு கைவினைத் துறையால் உரிய ஆடைகளை வழங்க முடியும், நிலையான ஃபாஷன் எதிர்காலத்தை உருவாக்கிட இந்த வர்ணனை இடைவெளியை நிரப்புவது முக்கியமாகும்.'**

**-ஷ்ருதி சிங், கண்ட்ரி ஹெட், ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா**

4. மதிப்பீடு பற்றிய கண்ணோட்டத்தை மாற்றியமைத்தல்: நிலைத்தன்மை என்னும் நிலையில் கைவினைத் தொழிலின் மதிப்பை அங்கீகரிக்க வேண்டும். பெரியபெரிய மார்க்கெட்டுகளில் கைவினைப் பொருட்கள் பெரும்பாலும் குறைவாகவே மதிப்பிடப்படுகின்றன. பெருமளவில் ஒட்டுமொத்தமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களுடன் ஒப்பிடுகையில், கைவினைப் பொருட்கள் அவ்வளவாகக் கவர்வதில்லை என்றும், குறைவான டிரெண்டியாக அவை உள்ளன என்றும் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட கண்ணோட்டத்தினால், கைவினைக் கலைஞர்களின் பொருளாதாரம் உறுதியாக இல்லாமல் போவதோடு, கைவினைப் பொருட்கள் பரவுவதும் கட்டுப்படுத்தப்படுகிறது. நீடித்து நிலைத்திருப்பதில் கலாச்சாரத்தைப் பேணிக்காப்பதிலும், உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும், பல்லுயிர்ப் பெருக்கத்திலும், நேர்மையான வர்த்தகம் மற்றும் பொறுப்பு வாய்ந்த உற்பத்தியை ஆதரிப்பதிலும் கைவினைப் பொருட்களின் பங்குபணியை ஏற்க வேண்டுமானால், அவற்றுக்கு பன்மடங்கு மதிப்பு உள்ளது என்பதை அங்கீகரிக்க வேண்டும். மதிப்பில் காணும் இந்த இடைவெளியை நிரப்புவதில் கல்விக்கும் முக்கிய பங்கு உண்டு. இந்த மதிப்புக்களை வலியுறுத்தியும், கைவினைப் பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்தும் பெரியபெரிய மார்க்கெட்டுகளில் கைவினைப் பொருட்களுக்கு உள்ள மதிப்பு பற்றிய கண்ணோட்டத்தை நாம் மாற்றலாம்.

## நிலைத்தன்மைக்கு ஒரு செயலூக்கியாக கைவினைக் கலைஞர்கள்

கதை சொல்வதன் சக்திக்கு கைவினைத் திறனை ஓர் உதாரணமாகப் பயன்படுத்தலாம். கைவினைப் பொருட்கள் பற்றிய பரிவை உண்டாக்கி, அவற்றை வாங்கும்படி தூண்டுவதற்குக் கதைகளைப் பயன்படுத்தலாம். கைவினைக் கலைஞர்களின் அறிவாற்றல், கலாச்சாரம், வரலாறு, இயற்கைச் சுற்றுப்புறத்துடன் அவர்களுக்கு உள்ள மிகவும் நுட்பமான உறவு ஆகியனவற்றை கதைகளில் விவரிக்கலாம். இந்த வர்ணனைகளைப் பயன்படுத்தி, கைவினைக் கலைஞர்கள் எந்த அளவுக்கு பருவநிலை மாற்றங்களால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என எடுத்துக் கூறலாம்.

கலைத்தன்மை உள்ள கைவினைப் பொருட்கள் நீடித்த நிலைத்தன்மையை நோக்கிய ஒரு செயலூக்கியாக இருப்பதற்கு பெற்றுள்ள சக்தியை பல்வேறு நிலைகளில் எடுத்துக்கூறி ஆதரவு திரட்ட வேண்டும். இயற்கை அடிப்படையிலான தீர்வுகளில் அதிகக் கவனம் செலுத்தும் பருவநிலை மாற்றம் தொடர்பான நிதி வாய்ப்புக்களைப் பயன்படுத்திட, இந்த இடைவெளியை நிரப்ப வேண்டியது முக்கியமாகும். நீடித்த வளர்ச்சிக்கு ஒரு வழியாகக் கைவினைத் துறையை மேம்படுத்திட கொள்கை வரைவாளர்கள், கல்வி நிறுவனங்கள், பிஸினஸ் செய்பவர்கள், தனிநபர்கள்- இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு உண்டு. கைவினைக் கலைஞர்கள் மாற்றத்தின் முகவர்கள் என்ற அங்கீகாரத்தைத் தருவதன் மூலம், நிலைத்தன்மை என்பதை ஒரு கல்விசார்ந்த அல்லது ஒரு கொள்கை நோக்குடைய கோட்பாடாக இல்லாமல், அதை ஒரு யதார்த்தமான நடைமுறையாக உருவாக்கலாம்.

## செயல்நோக்குடைய கொள்கையின் பங்கு

கைவினைத் துறை நமது கலாச்சார மரபில் ஆழப் பதிந்திருக்கிறது. ஒட்டுமொத்த தேசிய வருமானத்துக்கும் இது கணிசமாகப் பங்களிக்கிறது. கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரம், பாலின சமத்துவம், பருவநிலை மாற்றம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்புகளைச் சமாளிப்பதில் கொள்கை முடிவுகளும், நிர்வாகமும் முக்கிய பங்காற்ற முடியும். கைவினைத் துறைக்கு நிதிவசதி கிடைக்காமல் இருப்பது, மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சவால்கள், மார்க்கெட்டுகளைச் சென்றடைவதில் உள்ள பிரச்சினைகள் என்று எண்ணற்ற தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

தற்போது, கைவினைத் துறையில் கல் போன்ற பல்வேறு பொருட்கள் பயன்படுத்தப்பட்டாலும், வேறுபல கைவினைகள் இருந்த போதிலும், அது துணித்துறை அமைச்சகத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. கலாச்சார அமைச்சகம், ஊரக வளர்ச்சி அமைச்சகம், சுற்றுலா அமைச்சகம், திறன்வளர்ப்பு அமைச்சகம், எம் எஸ் எம் இ அமைச்சகம் ஆகியன உட்பட பல அமைச்சகங்களில் கைவினைத் துறைக்கான திட்டங்கள் பரவிக் கிடக்கின்றன. இத்தனை அமைச்சகங்களின் வழியாகக் கடந்து திட்டங்களின் பயனை அடைவது கடினமானதாக உள்ளது. எனவே, நாடெங்கும் பரந்து விரிந்துள்ள 200 மில்லியன் கைவினைக் கலைஞர்களின் தேவையை நிர்வகிக்க ஒற்றைச் சாளர முறை. ஒரு முறை தொடும் திரை வசதி, அல்லது ஒரே அமைச்சகம் தேவை என்னும் கருத்து பல்வேறு வட்டமேசை விவாதங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**நீடித்த நிலையான ஃபேஷனில் இந்தியாவின் கடமைப்பற்று**

சமீப காலத்தில், சூழல் துணிகளுக்கு ஓர் உலக மையமாக இந்தியாவை ஆக்கும் நோக்குடன் நீடித்த நிலையான ஃபேஷனுக்காக பல திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது.

1. **மிஷன் லைஃப் ( சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை):** 2030-ஆம் ஆண்டுக்குள் தனது கரியமில வாயு வெளியேற்றத்தை கணிசமாகக் குறைப்பதாக 2021-ஆம் ஆண்டில் நடைபெற்ற கோப்-26 என்னும் உலகளாவிய பருவநிலை மாநாட்டில் இந்தியா வலுவான வாக்குறுதி அளித்தது. இந்த வாக்குறுதியை நிறைவேற்றிட, மிஷன் லைஃப் என்னும் முன்னெடுப்பை அரசு தொடங்கியது. இதில், பருவநிலை தொடர்பான நடவடிக்கைகளில், சூழல் பொருளாதாரங்களுக்கும், சுதேசி கலாச்சாரங்களுக்கும் உள்ள ஒருங்கிணைந்த பங்கு வலியுறுத்தப்படுகிறது. ' யூஸ் அண்டு த்ரோ' என்னும் பொருள் நுகர்வு மாடலுக்குப் பதிலாக, நிலையான சூழல் பொருளாதாரத்திற்கு மாறுவது இந்த முன்னெடுப்பின் முக்கிய அம்சமாகும். கைநெசவுத் தொழிலில் கரியமில வாயு வெளியேற்றம் ஒட்டுமொத்தமாகத் தயாரிக்கப்படும் துறையுடன் ஒப்பிடும்போது கணிசமாகக் குறைகிறது. எனவே கைநெசவு இந்த முன்னெடுப்பில் கச்சிதமாகப் பொருந்துகிறது.
2. **துணி அமைச்சகத்தின் இஎஸ்ஜி அலுவல் குழு:** தொடர்புடைய பல துறைகளும் இந்த முன்னெடுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இது டி&ஏ துறையில் தனித்தனியாக இருக்கும் சவால்களைச் சமாளிப்பதற்காக இந்த அலுவல்குழு உருவாக்கப்பட்டுள்ளது. குறுசிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கண்ணோட்டங்களை ஒருங்கிணைத்து, மேலும் அதிகத் திறனுடன் கூடிய தெளிவான ஆப்பரேஷனல் நடைமுறைகளை வளர்ப்பது இந்த அலுவல் குழுவின் நோக்கமாகும். தேசிய அளவில் நிலையான துணித்துறையை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த ஆயத்தம் செய்வது இதன் பணியாகும்.
3. **துணித்துறை அமைச்சகத்தின் ' சூழல் துணி' முன்னெடுப்பு:** பெண்கள் தலைமையிலான அமைப்புக்களை சூழல் துணி என்னும் அமைப்புக்குள் ஒன்றுபடுத்தி, ஒத்துழைப்பை உருவாக்குவது இதன் நோக்கம். பருவநிலை மாற்றத்தினால் உண்டாகும் நெருக்கடி, பல்லுயிர்கள் இழப்பு, மாசு, சப்ளைத் தொடரமைப்பு சவால்கள் ஆகிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சூழல் பொருளாதாரத்திற்கு உள்ள முக்கியத்தை இது வலியுறுத்துகிறது.
4. **துணித்துறையில் சூழல் முறை மற்றும் நிலைத்தன்மையை அதிகரிக்க துணித்துறை அமைச்சகம் & யு என் இ பி கூட்டாளி உறவு:** துணிகளில் சூழல்முறை தொடர்பான விஷயங்களைப் பரப்பவும், நிலையான நடைமுறைகளை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் முதன்முதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. நுகர்வோரிடையே துணிகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதில் இது ஈடுபட்டுள்ளது. 2023 ஜனவரி 30 அன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், பல்வேறு சமூக ஊடகங்கள் வாயிலாக தொடர்புடைய 2,713 பேர் ஆன்லைனில் ஈடுபட்டுள்ளனர்.
5. **தேசிய கைவினை அருங்காட்சியகம் # உங்கள் நெசவை அறியுங்கள் விளக்க முன்னெடுப்பு:** ஆகஸ்ட் 7-ஆம் தேதி தேசிய கைத்தறி தினத்தைக் கொண்டாடும் வகையில், தேசிய கைவினை அருங்காட்சியகம் மற்றும் ஹஸ்த்கலா அகாடமியுடன் துணித்துறை அமைச்சகம் சேர்ந்து இரண்டுவார கல்வி இயக்கம் ஒன்றைத் தொடங்கியது. 75-க்கும் அதிகமான பள்ளிகளையும், சுமார் 10,000 மாணவர்களையும் ஈடுபடுத்தி, பனாரசி சரிகை மற்றும் ஆந்திராவின் இக்கட் உள்ளிட்ட பல்வேறு கைத்தறி நுட்பங்களை இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தியது, தேசிய ஃபேஷன் டெக்னாலஜி இன்ஸ்டிடியூட்டின் ஆதரவுடன் மாஸ்டர் நெசவாளர்கள் நேரடியாக செயல்விளக்கங்களைச் செய்து காட்டி, கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர். பிளாக் பிரிண்ட்டிங் மற்றும் சாயம் தோய்த்தல் போன்ற நுட்பங்களை விளக்கி மாணவர்களை கைத்தறி உலகிற்குள் ஈர்த்தனர்.
6. **பாரதிய வஸ்த்ரா எவம் ஷில்ப கோஷ் முன்னெடுப்பு:** இது ஒரு கைவினைக் கருவூல வலைதளம். துணிகள் மற்றும் கைவினைகளை மேம்படுத்திட இது தொடங்கப்பட்டுள்ளது. சுதேசிமய உற்பத்தியில் அரசு கொண்டுள்ள கடமைப்பற்றை பிரதிபலிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வலைதளம், ' வோக்கல் ஃபார் லோக்கல்' என்னும் கொள்கைக்கு ஆதரவு அளிக்கிறது. நெசவாளர்களின் பணிநிலைமையை சிரமம் இல்லாமல் ஆக்கி, அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்து, டிசைன் தரத்தை உயர்த்தி, அதை உலக மார்க்கெட் தரத்திற்குக் கொண்டு சென்று, கைவினைக் கலைஞர்களுக்கு உலக மார்க்கெட்டை அறிமுகப்படுத்த இது முனைகிறது.
7. **ஏக்தா மால் முன்னெடுப்பு:** ஒவ்வொரு மாநிலத் தலைநகரங்களிலும் மால்களை ஏற்படுத்தி, அவற்றை பல்வேறு மாவட்டங்கள்மற்றும் மாநிலங்களில் இருந்து வரும் கைவினைப் பொருட்கள் மற்றும் கைத்தறித் துணிகளைக் காட்சிக்கு வைக்கும் மையமாக மாற்றிடும் முனைப்பான முயற்சியாகும் இது. கைவினைப் பொருட்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்துவதோடு, ' மேக் இன் இந்தியா' இயக்கத்திற்கு ஏற்ப, கைவினைக் கலைஞர்களுக்கு விரிவான மார்க்கெட்டை ஏற்படுத்துவதும் இதன் நோக்கம்.

இந்தக் கொள்கைகள் நிலையான ஃபேஷன் துறைக்கு ஆதரவான கொள்கைகளை வகுக்க அரசு கொண்டுள்ள கடமைப்பற்றை எடுத்துக்காட்டுகின்றன. கைவினைத் துறையின் பெருகும் தேவைகளை நிறைவேற்றிட இத்துறையை மேலும் முன்னேற்றுவதற்காக, பொதுத்துறை மற்றும் தனியார் துறை கூட்டாளி உறவு மற்றும் ஆதரவுக்கான தேவை அதிகரித்து வருகிறது.

## 13, மேம்பாட்டு நிதியங்கள் மற்றும் முதலீடு

பருவநிலை மாற்றம் பிரச்சினையைச் சமாளிக்க உலகத் தலைவர்களும், நிதி நிறுவனங்களும் முனைப்பாக முயன்று கொண்டிருக்கும் வேளையில், கைவினைத் துறைக்கு பருவநிலை மாற்றம் தொடர்பான இன்னல்களைப் போக்கும் ஆற்றல் உள்ள போதிலும், அதில் முதலீடு குறைவாகவே உள்ளது. அதன் தயாரிப்புக்களுக்கும் நல்ல மதிப்பு தரப்படுவதில்லை. பாரம்பரியக் கைவினைகளில் உள்ள உள்ளுறை நிலைத்தன்மையும், கைவினைத் துறைகளில் புத்தாக்கம் புனைவோரும் பருவநிலை தொடர்பான முதலீடுகளில் முக்கிய பயனாளிகளாக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். ஆனால், இந்த ஆற்றல் இதுவரை முற்றிலுமாக அங்கீகரிக்கப்படாமல் அல்லது பயன்படுத்தப்படாமல் உள்ளது.

**பூமியைப் பேணிக்காப்பதில் சுதேசி சமூகங்களும், கைவினைத் தொழிலும் முக்கிய பங்காற்றுகின்றன.**



**5 சதவிகித**

சுதேசி சமூகங்களுக்குப் பாதுகாப்பு



**22 சதவிகித**

பூமிப்பரப்புக்கு பாதுகாப்பு



**80 சதவிகித**

பல்லுயிர்கள்

**27 மடங்கு** குறைவான மாசு வெளியேற்றம் சுதேசி சமூகங்களின் பராமரிப்பில் உள்ள காடுகளில் நிகழ்வதால், நெட்ஜீரோ வன அழிப்பு நிகழ்கிறது ( பிரேசில்) 39[39]

**கைவினைத் துறைக்கு தற்போது நிதி கிடைக்கும் முறை**

- அரசுத் திட்டங்கள்
- தனியார் ஃபவுண்டேஷன்கள்
- லாபநோக்கற்ற அமைப்புக்கள்
- கார்ப்பொரேட் சமூகப் பொறுப்பு

## முதல□ட்டு இடைவெளி

**அமெரிக்க டாலர் 384**

பில்லியன் ஆண்டு ஒன்றுக்கு முதல□டு உலகளாவிய நெருக்கடியைச் சமாளிக்க 2025-ஆம் ஆண்டுக்குள் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்காக (NbS),40

**அமெரிக்க டாலர் 154**

பில்லியன் ஆண்டு ஒன்றுக்கு இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்காக (NbS)தற்போதைய நிதி உதவி41



**17 சதவிகித**

மொத்த முதல□டுகள் தனியார் மூலதனத்தில் இருந்து வருகின்றன42

கைவினைத் துறை பெரும்பாலான பசுமை நிதியங்களில் இருந்து NbS-க்காக ஒரு துறையாகக் கருதப்படுவது இல்லை



**74 சதவிகித**

கைவினைத் தயாரிப்புக்களும், படைப்பாளர்களும் சரியான முதல□ட்டாளர்களைக் கண்டறிவதை ஒரு பெரிய சவாலாகக் கருதுகின்றனர்.



**65 சதவிகிதம்**

பேர்களுக்கு நிதியுதவி கிடைப்பதில் இன்னல்கள் உண்டாகின்றன



**33 சதவீதம்**

HCMகளின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு உறுதியான அர்ப்பணிப்பைப் பேணுகிறது43

## கைவினைத் துறையின் கிளைமேட் முதல□ட்டு வாய்ப்பு

1. 'பொறுப்பான நுகர்வும், உற்பத்தியும்' என்னும் UN SDG 12 இலக்கை நோக்கி முயற்சிகளை மேற்கொள்ளும் துறை சார்ந்த பிஸினஸ்களைப் பொறுத்தவரை இந்தியாவில் 1 டிரில்லியன் டாலர்களுக்கும் அதிகமான தொகை 200 மில்லியன் கைவினைக் கலைஞர்களால் பயன்படுத்தப்படாமல் இருப்பதாக ' கைவினைப் புரட்சிக்கு நிதியுதவி ' என்னும் அறிக்கை தெரிவிக்கிறது.44.
2. கைவினைத் தொழில்கள் இயற்கையுடன் இயல்பாகவே இசைவாக உள்ளன. மேலும் இவை நீடித்து நிலைத்திருப்பதால் கிளைமேட் முதல□டுகள் மற்றும் இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் (NbS) ஆகியவற்றின் கீழ் முதல□டுகளை ஈர்க்கக்கூடியவையாக உள்ளன. இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது, பராமரிப்பது, மீட்பது, நிலையாகப் பயன்படுத்துவது என்னும் நடவடிக்கைகளை NbS வலியுறுத்துகிறது 45. இயற்கைக்கு சாதகமான தீர்வுகளை பயன்படுத்துவதால், 2030-ஆம் ஆண்டுவாக்கில் ஆண்டுக்கு 4.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் வரை புதிய பிஸினஸ் வாய்ப்புக்கள் கிடைக்கும் என்று 2022- ஆம் ஆண்டில் இருந்து ஐநா பருவநிலை மாற்ற அறிக்கை தெரிவிக்கிறது 46.
3. இயற்கையை மையமாகக் கொண்ட பணித்திட்டங்களுக்கு நிதிவசதி கிடைக்காமல் இருப்பது ஆர்வம் இல்லாததால் அல்ல, புரிதலில் காணும் இடைவெளியே அதற்குக் காரணம் என்று 2023-ஆம் ஆண்டில் பிரைஸ் வாட்டர் கூப்பர் நிறுவனத்தின் ' இயற்கைக்காக நிதியுதவியைத் துரிதப்படுத்துவது' என்னும் அறிக்கை தெரிவிக்கிறது. போட்ட முதல□டுகளுக்கு வருமானம் வருவதற்கு நீண்டகாலம் ஆவதால் சில முதல□ட்டாளர்கள் தயங்குகின்றனர். குறுகிய காலத் திட்டப்பணிகள் அவர்களுக்கு கவர்ச்சிகரமானவையாக தெரிகின்றன.47
4. பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் கைவினைத் துறைக்கு இருப்பதாக நாம் நம்புவதை அங்கீகரிக்கும் டேட்டா இல்லாததால், முதல□டுகள் கிடைப்பதற்கு தடங்கலாக இருக்கும் காரணங்களில் அதுவும் ஒன்று. மெதுவான ஃபாஷனின் வளர்ச்சியின் அளவு, ஃபாஸ்ட் ஃபாஷன் பிராண்டுகளின் வளர்ச்சியைக் காட்டிலும் வேறுபட்டதாக இருப்பதும் மற்றொரு சவாலாக உள்ளது. மெதுவான ஃபாஷனின் பிரத்யேகமான தன்மை என்னவென்றால், அதை ஃபாஸ்ட் ஃபாஷனுக்கான கருவிகள் மற்றும் கட்டமைப்புக்களையே கொண்டு மதிப்பிடுவதால், அதில் முதல□ட்டு செய்வதற்கான கவர்ச்சி குறைகிறது.
5. கைவினைத் துறையை உலகளாவிய மெதுவான ஃபாஷனை நோக்கி கொண்டு செல்ல வேண்டுமானால், பல துறைகளில் முதல□டு செய்ய வேண்டியுள்ளது. கைவினைத் தொழில் முயற்சியாளர்கள் பாரம்பரியத்துக்கும், புத்தாக்கத்துக்கும் இடையே ஒரு பாலமாகத் திகழ்கின்றனர். திறன் வளர்ப்பும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதும் கைவினைக் கலைஞர்களை உலகச் சந்தைகளுடன் இணைக்கின்றன. அதே வேளையில், சப்ளைத் தொடரமைப்பு வெளிப்படையாகச் செயல்படுவதால் நுகர்வோரின் நம்பிக்கை வளர்கிறது. பொருள் புத்தாக்கம், ஆராய்ச்சி, மற்றும் நிலையான கட்டமைப்பில் முதல□டு செய்வதால், கைவினைத் துறை சிரமம் இல்லாமல் நிலையான ஃபாஷன் எதிர்காலத்துடன் பொருந்த முடியும்.
6. பாரம்பரியக் கைவினைத் தொழில்களை பருவநிலை இலக்குகளுடன் இணைப்பது இதன் மையப்புள்ளியாக உள்ளது.குறிப்பாக ஏற்பதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதும் இதில் அடங்கும். உலகளாவிய பருவநிலை முதல□ட்டு மிகவும் சிக்கலானதாக இருக்கிறது. புவிவெப்ப வாயு வெளியேற்றத்தைக் குறைப்பது, அல்லது சமூக மீட்சியை அதிகரிப்பது என்னும் குறிப்பான இலக்குகளை கவனத்தில் கொண்டு முதல□டு செய்தால் கைவினைத் துறைக்கு உரிய இடம் கிடைக்கும்.

**' சமச்சீரான, மீட்சியாற்றல் பெற்ற எதிர்காலத்திற்கான திறவுகோலை வைத்திருக்கும் இந்த சுற்றுச்சூழல் தலைவர்களின் அத்தியாவசியமான பணிகளுக்கு உறுதுணையாக கிளைமேட் முதல□டு செய்யும் அதிகம் உள்ளடக்கிய ஒர் அணுகுமுறைக்காக வாதாட வேண்டியது மிகவும் முக்கியமாகும்.**

**இந்தப் பூமிக்காக முன்னின்று செயல்படுவது யார்? அது திறமையுடன் நூல்களைக் கொண்டு நெசவு செய்யும் கைவினைக் கலைஞராக இருக்கலாம்: முழுமையான காய்கறிகளையும், பழங்களையும் சாகுபடி செய்யும் ஒரு விவசாயியாக இருக்கலாம். ஆனால், வேளாண் இயற்கைச் சூழல் கோட்பாடுகளுக்கு கட்டுப்பட்டு, பருவநிலைக்குச் சாதகமான முறைகளைப் பின்பற்றும், நமது விலைமதிப்பற்ற பூமியிடம் அக்கறை காட்டும் நபர்களை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களின் கரங்களுக்கு கிளைமேட் நிதியுதவி சென்றடையுமாறு நாம் எவ்வாறு உறுதி செய்வது? தற்போது, நிலத்தையும், நீரையும் பேணிக்காக்கும் உண்மையான ஹீரோக்களைப் புறக்கணித்துவிட்டு புதுப்பிக்கவல்ல எரியாற்றல் அல்லது ஹைடெக் புத்தாக்கங்களைப் பின்பற்றுவோர்தான் இத்தகைய ஆதரவுக்குத் தகுதியானவர்கள் எனத் தெரிகிறது.**

**-டாமரா லா கோஸ்வாமி, ஆலோசனைக் குழு உறுப்பினர், பாரத் அக்ரோஎகாலஜி ஃபண்டு**

# ஹார்த் வெஞ்ச்சர்ஸ்

## இந்தியாவின் கைவினைத் தொழில் மற்றும் சுழல் பொருளாதாரத்தில் முதலீடு

இந்தியாவின் பரந்து விரிந்த கலை மற்றும் கைவினை மரபுச் செல்வங்களுக்கு உறுதியான ஆதரவைத் தருவதற்காகவும், இந்தியாவின் கைகளினால் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களின் வளர்ச்சியைத் தூண்டவும், இரண்டு குறிக்கோள்களுடன் 2021-ஆம் ஆண்டில் ஹார்த் வெஞ்ச்சர்ஸ் நிறுவப்பட்டது. இந்தியக் கைவினைத் திறனுக்கு புதுச் சிந்தனை கொடுத்து, மேலே தூக்கிவிடுவதும், இந்தியக் கைவினைத் தயாரிப்புப் பொருட்கள் உலகளாவிய நிலையில் இடம்பெறவும், இதனால் இந்தியாவின் கிராமப்புறங்களில் உள்ள கைவினைக் கலைஞர்களுக்கு கணிசமான பயன் கிடைக்கச் செய்யவும் இந்த நிறுவனம் நோக்கம் கொண்டுள்ளது.

முதலீட்டின் குவிமையம்

பொருள் அடிப்படையிலான தொழில் நிறுவனங்கள்: ஃபர்னிச்சர், லைட்டிங், பாண்டங்கள், சுவர் ஓவியம், கிச்சன் பாத்திரங்கள், அன்பளிப்புப் பொருட்கள், அக்ஸெஸரிஸ், மற்றும் இன்னும் பல கைவினைப் பொருட்கள் இதில் அடங்கும்.

உதவுவோர்: இவர்கள்தான் இந்தியக் கைவினைப் பொருட்களை விற்கப்படுவதை சீர்ப்படுத்தும் கம்பெனிகளுக்கு முதுகெலும்பு போன்றவர்கள். இவர்கள் இ-காமர்ஸ், மொத்த விற்பனை, லாஜிஸ்டிக்ஸ், டெக் நிறுவனங்கள் மற்றும் இன்னும் பல என்று பரவியிருக்கின்றனர்.

விற்பனையாளர்கள்: இ-காமர்ஸ் மேடைகளில் இருந்து சில்லறை விற்பனைத் தொடரமைப்பு, மார்க்கெட் இடங்கள், சர்வதேச வினியோகஸ்தர்கள் வரை இந்த விற்பனையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மையத் தகுதி; கைவினைக் கலைஞர்களிடையே இதனால் ஏற்படும் பாதிப்புக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது ஐநா நிலைத்த வளர்ச்சி இலக்குகளுடன் இணைந்திருக்க வேண்டும், தொழில்முனைப்புத் திறன் பெற்றிருக்க வேண்டும், உற்பத்தி அளவும் இருக்க வேண்டும், ஹார்த்தின் வரையறைக்குள் பொருந்த வேண்டும் .

ஹார்த் வெஞ்ச்சர்ஸ் அளிக்கும் மூலதன ஆதரவு வெறுமனே நிதி ஆதரவு மட்டுமல்ல, பிஸினஸில் வழிகாட்டவும், தனது வரம்புக்குள் வரும் கம்பெனிகளிடையே இணைந்த செயல்பாட்டை உறுதிப்படுத்தவும் மதிப்பு வாய்ந்த வழிகாட்டும் சேவையையும் இது வழங்குகிறது.

போர்ட்ஃபோலியோ; இந்த நிறுவனத்தின் முதலீட்டு போர்ட்ஃபோலியோவில் கதம் ஹாத், ஷோபித்தம், ரீலவ் ஆகிய நிறுவனங்கள் உள்ளன.



படம்: பிரிட்டிஷ் கவுன்சில்



# IV. பரிந்துரைகள்


தொடர்புடையவர்களுடன் உரையாடியபோது, பருவநிலை மாற்றம் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், கைவினைத் தொழிலின் எதிர்காலத்தை மேம்படுத்திட உருப்படியான கருத்துக்களையும், கண்ணோட்டங்களையும் வழங்கும்படி பங்கேற்றவர்களைக் கேட்டுக் கொண்டோம். இந்த உரையாடல்களின்போது ஏராளமான புதுவிதமான கோட்பாடுகளும், ஆசைகளும் வெளிப்பட்டன.

கைவினைக் கலைஞர்கள், டிசைனர்கள், கல்வியாளர்களில் இருந்து, கொள்கை வரைவாளர்கள், சமூகத் தலைவர்கள் வரை- என தொடர்புடைய ஒவ்வொருவருக்கும் நீடித்து நிலைத்திருக்கும் உலகில் கைவினைத் தொழிலுக்கு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கிட ஒத்துழைப்பதற்கு வேறுபட்ட வாய்ப்புக்களை இந்த ஆலோசனைகள் வழங்குகின்றன.

படம்: டெல்பைன் பாவ்லிக்



## 14. தொடர்புடையவர்களின் ஆசைகள்



## 15. ஒன்றுபட்டு எதிர்காலத்தை உருவாக்குதல்: மாற்றத்திற்கான ஒரு திட்டம்

இயற்கைச் சூழலுக்காகப் பாடுபடுவோர் பருவநிலை மாற்ற நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில், கைவினைத் துறையின் சக்தியைப் பயன்படுத்துவதற்காக இதோ சில செயல்நோக்கப் பரிந்துரைகள்.

### 1. உலகின் தேவைகளுக்கு ஏற்ப கைவினைத் தொழிலை உருவாக்கிட தேசிய செயல்நோக்கு கட்டமைப்பு

அ. **கைவினைத் துறை தாக்குப்பிடிப்பதற்கான தேசிய உத்தி:** கைவினைத் துறையை பொறுப்புடன் தயாரிக்கும் ஒரு உலகளாவிய மையமாக மாற்றுவதற்காக செயல்நோக்குடன் கூடிய நீண்டகாலத் திட்டத்தை வகுப்பதற்காக அலுவல் குழு ஒன்றை உருவாக்க வேண்டும். இதற்கான திட்டத்தை அரசு முகமைகள், என் ஜி ஓ-க்கள், கல்வியாளர்கள், வணிக நிறுவனங்கள் என்று தொடர்புடையவர்களின் விரிவான ஒத்துழைப்புடன் வகுக்க வேண்டும். இந்தத் திட்டத்தில், பருவநிலை மாற்றத்தைத் தாங்கிக் கொண்டு மீண்டெழக்கூடியதாக கைவினைத் துறையை உருவாக்கிட ஒரு திட்டம் சேர்க்கப்பட வேண்டும்.

ஆ. **நிலையான மதிப்பீட்டுக்கு அளவுகோல்கள்:** கைவினைத் துறையினால் ஜிடிபி-க்கும்,வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கும், நிலையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் கைவினைத் துறையின் பங்களிப்பை மதிப்பிடுவதற்காக, கைவினைத் துறையின் இயற்கைச் சூழல் தொடர்பான குறிப்பான டேட்டாவை பரிசீலிப்பதற்கு முறைப்படியான மேப்பிங்கை நடத்த வேண்டும். கைவினை புராஜெக்டுகளினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை அளப்பதற்காக, நன்கு வரையறுக்கப்பட்ட மதிப்பீட்டு தகுதி மற்றும் அளவுகோல்களை உருவாக்க வேண்டும். கைவினைத் துறைக்காக நிலையான உத்திகளைத் திட்டமிட்டு வகுத்து செயல்படுத்துவதற்கு டேட்டா அடிப்படையிலான கருத்துக்கள் உதவியாக இருக்கும்.

இ. **ஒருங்கிணைந்த கைவினைத் தொழில் ஆதரவு வலைதளம்;** பல்வேறு அரசு நிறுவனங்கள் வழங்கும் தகவல்களை ஒன்று திரட்டி மையப்படுத்திய மேடை ஒன்றை உருவாக்கி, கைவினைத் தொழில்களுக்காக ஒற்றைச் சாளர அணுகு வசதியை உருவாக்க வேண்டும். இந்த வலைதளம் மூலம் திட்டங்களையும், பயன்களையும், தகவல்களையும் பெற்று கைவினைத் துறை பிசினசை மேம்படுத்துவது எளிதாக இருக்கும்.

### 2. கைவினைத் துறை இயற்கைச் சூழல், தொழில்நிறுவனங்கள் மற்றும் தொழில் முனைப்பு

அ. **கைவினைத் துறையில் நிலையான நடைமுறைகளை அங்கீகரித்தல்:** கைவினைத் துறைக்கான விருதுகள், பசுமைக் கைவினைச் சுற்றுலா, கைவினைத் தூதர் என்ற திட்டங்களை உருவாக்கி, புதுவிதமாக பொருட்களைப் பயன்படுத்தல், கழிவுகளைக் குறைத்தல், எரிசக்தியைச் சிக்கனமாக்கும் உற்பத்தி என்பன போன்ற முன்னெடுப்புக்களை உருவாக்குதல். பருவநிலை மாற்றப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நீடித்த நிலையான கைவினைகள் பற்றிய பிரச்சாரத்தை நடத்துதல். கைவினைப் பொருட்களின் புலப்பாட்டை முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்துதல்.

ஆ. **கைவினை அடிப்படையிலான மெதுவான ஃபாஷன் தொழில்முயற்சிகள்:** கைவினைக் கலைஞர்கள் நிலையான நடைமுறைகளை ஏற்றுக் கொண்டு செயல்படுவதற்காக அவர்களின் திறனை வளர்க்கும் நோக்குடன், பயிலரங்குகள், பயிற்சி, டெக்னிக்கல் உதவி என்பன போன்ற விரிவான திட்டங்களை உருவாக்குங்கள். பல கைவினைக் கலைஞர்கள் ஏற்கனவே மெதுவான ஃபாஷனுக்காக கூறப்பட்ட கருத்துக்களைப் பின்பற்றுகிறார்கள் என்பதால், அவர்களை நிலையான ஃபாஷன் உலகில் தலைவர்களாக மாறி மற்ற கைவினைக் கலைஞர்களை வழிநடத்துவதற்காக, அவர்களுக்குத் தேவையான பயிற்சியையும், வளங்களையும், மார்க்கெட் வசதிகளையும் தரவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

இ. **கைவினை பிஸினஸ் வளர்ப்பாளர்கள், விரைவுபடுத்துகிறவர்கள் மற்றும் ஆராய்ச்சி மானியங்கள்:** வளர்ந்து வரும் கைவினைத் தொழில் நிறுவனங்களுக்கு அத்தியாவசியமான வாய்ப்பு வளங்கள், நிபுணத்துவ வழிகாட்டுதல், நிதி ஆதரவு ஆகியவற்றை வழங்கும் உறுதியான ஆதரவு சிஸ்டத்தை ஏற்படுத்த வேண்டும். நிலையான கைவினைத் தொழில்களில் ஆராய்ச்சிக்கும், புத்தாக்கத்திற்கும் மானியங்களையும், நிதி உதவிகளையும் வழங்க வேண்டும். கைவினைத் துறையில் தற்போது காணப்படும் அறிவாற்றல் இடைவெளியை நிரப்பிட, ஆராய்ச்சி ஆய்வுகளை நடத்துமாறு நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஈ. **பொதுவான வசதி மையங்கள் (CFCs) :** திறன்களை வளர்க்கவும், மறுசுழற்சி பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், கைவினைக் கலைஞர்களை மார்க்கெட்டுகளுடன் இணைக்க ஆதரவான ஒரு முறையை ஏற்படுத்தவும், தாக்குப்பிடித்து வளரும் கைவினை நிறுவனங்களின் செயல்பாடுகளுக்காக நிதியுதவி வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

### 3. புத்தாக்கமும், தொழில்நுட்ப மேம்பாடுகளும்

அ. **சுதேசிப் பொருட்கள் கிடைக்க வசதி செய்வது:** மூங்கில், சணல், கயிறு, காதி போன்ற பாரம்பரிய சுதேசிப் பொருட்கள் தாங்கக்கூடிய விலையில் கிடைப்பதற்கு வசதி செய்து தரவேண்டும். இதில் வரிகளைக் குறைத்து, விநியோக முறையை சீரமைத்து, மாநில அளவில் கைவினைக் கலைஞர்களின் சமூகங்கள் ஒத்துழைப்பதற்கு ஊக்குவித்து அரசு நடவடிக்கைகளை எடுக்க முடியும், கைவினை உற்பத்தியுடன் இணைந்த சுதேசி தாவர வகைகளை பேணிக்காத்து, பரப்புவதற்காக, விதை வங்கிகளை உருவாக்க வேண்டும். இதன் மூலம், இயற்கையான சாயங்களும், நூல்களும் நம்பகமான முறையில் சப்ளை ஆவதற்கு உறுதி செய்ய முடியும்.

ஆ. **பொருள் புத்தாக்கம்:** கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, இயற்கைச் சூழலைக் கெடுக்காத, புதுவிதமான மூலப்பொருட்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு நிதி ஒதுக்குங்கள்.புதுவிதமான மூலப்பொருட்களை உருவாக்கும் பிஸினஸ் நிறுவனங்களுக்கும், புத்தாக்கம் படைப்போருக்கும் ஊக்க உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இ. **டெக்னாலஜியை உற்பத்தியுடன் இணைத்தல்:** கைவினைத் துறையில், இயற்கைச் சூழலைக் கெடுக்காத எரிசக்தியை மிச்சப்படுத்தும் பொருட்களையும், புதுப்பிக்க வல்ல எரியாற்றலைப் பயன்படுத்தும் பொருட்களையும் தயாரிப்பதற்கு ஆதரவாகக் குரல் எழுப்புங்கள். கைவினைக் கலைஞர்களின் வேலைத் திறனை உயர்த்தவும், உலகச் சந்தைகளை சிரமமின்றி சென்றடையவும் உதவும் புதிய தொழில்நுட்பங்களையும், பிஸினஸ் நடைமுறைகளை சீரமைத்து, கைவினைப் பொருளை மதிப்பிடுவதில் வெளிப்படையான தன்மை மற்றும் தேடிக்கண்டறியும் முறையையும் ஆதரியுங்கள். இவ்வாறு தொழில்நுட்பங்களை இணைப்பதால், கைவினைத் தொழில் நிலைத்திருப்பதோடு, விரைவான வளர்ச்சியும் அடையும். நம்பிக்கையையும் பெறும்.

## 4. கல்வியும் ஆராய்ச்சியும்

அ. **பல்வேறு துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பு, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்:** சுற்றுச்சூழல் அறிவியல், பிஸினஸ், இஞ்சினியரிங், கலை போன்ற பல்வேறு துறைகளுக்கு இடையே, வெவ்வேறு திறன்களையும், கண்ணோட்டங்களையும் இணைப்பதற்காக ஒத்துழைப்புத் திட்டங்களை வளர்த்து விடுங்கள். கைவினை, பருவநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி என்பவற்றை இணைக்கக்கூடிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுங்கள். ஆராய்ச்சியாளர்களும், கல்வியாளர்களும் , கைவினைத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் நிலையான கைவினைகள் தொடர்பான அறிவையும், மிகச்சிறந்த நடைமுறைகளையும் பகிர்ந்து கொள்வதற்கான அமைப்புமுறையை ஏற்படுத்துங்கள்.

ஆ. **கல்வியாளர் - கைவினைக் கலைஞர்கள் கூட்டணி:** கல்வியாளர்களுக்கும், கைவினைக் கலைஞர்களுக்கும் இடையே கூட்டாளி உறவை ஏற்படுத்துங்கள். இத்தகைய ஒத்துழைப்பு மூலம், கைவினைத் துறையின் நிலையான வளர்ச்சிக்காக பிரத்யேகமான சவால்கள், தேவைக்ள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான குறிப்பான ஆராய்ச்சிகளில் ஈடுபட முடியும்.

இ. **பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நிலையான வளர்ச்சி பற்றிய கல்வி:** கைவினைப் பொருட்களின் டிசைன், கலைகள், மற்றும் மானிடவியல் தொடர்பான விஷயங்களை விரிவான பாடத்திட்டங்களில் சேர்க்க வேண்டும். மாணவர்கள் நமது கலாச்சாரப் பாரம்பரியத்துடன் தொடர்பு கொண்டு, தங்களுடைய ஆடைகளுக்கும், பயன்படுத்தும் பொருட்களுக்கும் உயிர்கொடுக்கும் திறன்பெற்ற கைவினைக் கலைஞர்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறுவதற்காக அவர்களை கைவினைக் கலைகள் நிகழும் இடங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

5. **தாக்கத்தை ஏற்படுத்தும் முதலீட்டு மற்றும் கூட்டாளி உறவு:**

அ. **பசுமை முதலீடும், கூட்டாளி உறவும்;** மூலப்பொருட்களின் நிலையான வளர்ச்சி மற்றும் நடைமுறைகளை ஒருங்கிணைக்கும் திட்டப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கைவினை வேலைகளுடன் குறிப்பாகத் தொடர்புடைய பணித்திட்டங்களுக்கு நிதிஉதவி செய்து முதலீடு செய்யுங்கள். இந்த நிதியுதவி உத்திகள் பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி ( SDG 12) என்பதுடன் தொடர்புடையதாக இருக்கட்டும்.

ஆ. **தாக்கத்தை ஏற்படுத்தும் முதலீட்டுக்கான நிதியங்களும் அமைப்புக்களும்:** கைவினைத் தொழில்களின் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும் முதலீடுகளுக்காக பிரத்யேகமான நிதியங்களையும், அமைப்புக்களையும் ஏற்படுத்துங்கள். இந்த முன்னெடுப்புக்களினால், முதலீட்டாளர்கள் போடும் பணத்திற்கு நிதி ஆதாயம் கிடைப்பதோடு, சுற்றுச்சூழலில் ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்படும்.

இ. **முதலீட்டாளர்- கைவினைக் கலைஞர்- தொழில்முயற்சியாளர் நெட்வொர்க்:** இயற்கைச் சூழலைக் கெடுக்காத முன்னெடுப்புக்களுக்கு ஆதரவாக, முதலீட்டாளர்களுக்கும், கைவினைக் கலைஞர்களுக்கும், கைவினைத் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே உறுதியான நெட்வொர்க்கை ஏற்படுத்த வேண்டும். கைவினைத் தொழிலின் நிலையான வளர்ச்சிக்கு உதவக்கூடிய நெட்வொர்க்குகளை ஏற்படுத்தி, அறிவுப்பகிர்வுக்கும், மார்க்கெட்டை அடைவதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால், கைவினைக் கலைஞர்கள் தங்களது பொருட்களை வாங்கக்கூடியவர்கள், சில்லறை விற்பனையாளர்கள், மற்றும் வினியோகஸ்தர்களுடன் தொடர்பு கொள்வதற்காக மார்க்கெட்டை விரிவுபடுத்த முடியும்.

**"அதன் மையத்தில் காலநிலை அழிவுவாதம் உள்ளது**

**ஏனென்றால் நமக்கு கற்பனை நெருக்கடி உள்ளது. மறுகற்பனையின் தீவிரமான வேலையில் நீங்கள் ஈடுபட முடிந்தால் - அதுதான் எதிர்காலம் என்று நான் நினைக்கிறேன்.**

**- அதிதி மேயர், நிலையான ஃபேஷன் உள்ளடக்கத்தை உருவாக்குபவர் மற்றும் ஆலோசகர், ADIMAY**

# நிறைவுரை

இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கு, உலகெங்கும் கைவினைத் தொழிலும், சுதேசி அறிவாற்றலும் பருவநிலை மாற்ற நெருக்கடிகளைச் சமாளிப்பதில் முக்கிய பங்காற்றும். சுதேசி அறிவும், கைவினைக் கலைகளும் காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக கடந்து வந்திருக்கும் பழக்கங்களாகும். நிலையான வளர்ச்சியும், வாய்ப்பு வளங்களும்தான் இதன் முன்னுரிமைகள். உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, கைகளால் தயாரிக்கப்படும் பொருட்களால் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்படுகிறது. இயற்கைச் சூழலைக் கெடுக்காத பொருட்கள் மாற்று மூலப்பொருட்களாக உருவெடுக்கின்றன. பொருள் உற்பத்தி பொறுப்பு வாய்ந்ததாக மாறுகிறது. மீட்சியாற்றல், இயற்கை அடிப்படையிலான தீர்வுகள், ஆண்-பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் மாடல்கள், வாழ்வாதாரம், பருவநிலை, மெதுவான ஃபாஷன் என்பன போன்ற பல கதைகள் வட்டமேசை விவாதங்களில் வெளிப்பட்டன. மேலும், சுற்றுச்சூழலுடன் நெருங்கிய தொடர்புடைய கைவினைக் கலைஞர்களின் சமூகங்கள் இயற்கையான பொருட்களைச் சார்ந்திருப்பதால், பருவநிலை மாற்றங்களினால் அவர்கள்தான் பொறுத்தமற்ற முறையில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்பதை இந்த விவாதங்கள் உறுதிப்படுத்தின. இந்தச் சமூகங்களுக்கு மீட்சியாற்றல் கிடைக்க ஒரு திட்டத்தை வகுக்க நாம் பாடுபட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பருவநிலை மாற்றத்தில் இருந்து மீள்வதற்கும், நீடித்த நிலைத்தன்மைக்கும் கைவினைத் துறை ஆக்கப்பூர்வமாக பங்காற்றும், அதை உலகெங்கும் பெரிய அளவில் பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான செயல்திட்டங்களில் இதைச் சேர்க்க வேண்டும். இயற்கைச் சூழலுக்கு இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் உள்பட, பலமுனை அணுகுமுறை தேவைப்படுகிறது. கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்களும் ஆதரவு தரவேண்டும். பூமியை மையப்படுத்தும் தீர்வுகளை அதிகரிக்க வேண்டும். பருவநிலை மாற்றங்களுக்குத் தீர்வு காண்பதில் ஈடுபட்டுள்ள அரசுகள் கைவினைத் துறைக்கு முன்னுரிமை தந்து, இதன் வளர்ச்சிக்காக தங்களுடைய பருவநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கு நிதிவழங்கும் முறையை மாற்றியமைக்க வேண்டும்.

கைவினைக் கலைஞர்களை முன்னுக்குக் கொண்டு வந்து, சுதேசி சமூகங்களையும், நமது பூமியையும் கௌரவப்படுத்தும் எதிர்காலத்தை உருவாக்கிட, புரட்சி செய்வதற்கான காலம் வந்து விட்டது.



படம்: டெல்பைன் பாக்லிக்

## 16. தொடர்புடையவர்களும், பங்களித்தவர்களும்

**அபிஷேக் ஜானி-** தலைமை நிர்வாக அதிகாரி-ஃபேர்டிரேடு ஃபவுண்டேஷன், இந்தியா

**அதிதி மேயர்-** சஸ்ட்டெயினபிள் ஃபாஷன் கண்ட்டெண்ட் கிரியேட்டர் & கன்சல்ட்டண்ட் - அதிமே. இன்க்

**ஆலி மத்தான் -** நிறுவனர்-அலி மத்தான் கிரியேஷன்ஸ்: போர்டு டிரஸ்டி-ரெஜிஸ்ட்ரி ஆஃப் சாரீஸ்

**அபர்ணா சுப்பிரமணியம்-** பார்ட்னர்- 200 மில்லியன் ஆர்ட்டிஸன்ஸ்

**அபர்ணா ராஜகோபாலன் -** டிசைன் ரிசர்ச் டைரக்டர்- ஐகேரஸ்: சர்க்குலர் டிசைன் இந்தியா

**அனியித்தா பிரசாந்த் -** நிறுவனர்- கோ நேட்டிவ்

**அனிக்கெட் தர் -** இணை நிறுவனர்- க்ளோக்கெட்

**அன்ஷு அரோரா-** இணை நிறுவனர் மற்றும் டிசைன் டைரக்டர், ஸ்மால் ஷாப்

**அஜித் குமார் பாட்டக்-** துணை இயக்குநர்- செரிகல்ச்சர், அஸ்ஸாம் அரசு

**அலாய் பாரா-** எக்ஸிகியூட்டிவ் இயக்குநர்- இன்னோவேட், சேஞ்ச், கொலாப்ரேட் (ICCo)

**ஆலிஃபா ஜிப்ரானி -** இணை நிறுவனர்-க்ளோக்கெட்

**அஜய் குர்மல்லி**

**ஆண்ட்ரியா ஸ்டோக்ஸ்-** நிறுவனர் மற்றும் மேனேஜிங் டைரக்டர்- ஸ்வாஹ்ல

**அனன்யா சர்மா-** டிரஸ்டீ ஆஃப் ICCo ( இன்னோவேட், சேஞ்ச், கொலாப்ரேட்)

**அனுராதா குலி-** தேசிய விருது வென்றவர், நிறுவனர் மற்றும் உரிமையாளர்- நேச்சுரலி அனுராதா

**ஆராதனா நாக்பால் -** நிறுவனர்- தூப் கிராஃப்ட்ஸ் மற்றும் கியூரேட்டர்-ஃப்ளரிஷ் ஷாப்

**அனுராதா சிங்-** தலைவர்-நிலா ஹவுஸ்

**அன்விதா பிரஷாந்த் -** நிறுவனர்- கோ நேட்டிவ்

**ஆஷாதீப் பருவா-** நிறுவனர் & தலைமை நிர்வாக அதிகாரி -க்ளோக்கெட்

**அசோக் குமார் தாஸ்-** முதல்வர்- அஸ்ஸாம் டெக்ஸ்டைல் இன்ஸ்டிடியூட்

**அத்தெளர் ரஹ்மான் -** இணை இயக்குநர்- செரிகல்ச்சர், அஸ்ஸாம் அரசு மற்றும் மைய அதிகாரி, அக்ரிபிஸினஸ் மற்றும் ரூரல் டிரான்ஸ்ஃபர்மேஷன் ( APART) அஸ்ஸாம் புராஜெக்ட்

**அட்ஷோல் தோப்பி-** புராஜெக்ட் கோ ஆர்டினேட்டர்-சிஜாமி வீவ்ஸ் அண்டு மேலூரி நேச்சுரல் காட்டன் இனிஷியேட்டிவ்

**அல்ப்பி பொய்ல்லா -** டைரக்டர்- சேவ் தி லூம்

**ஆஸ்தா ஜெயின் -** புரோகிராம் அஸோஸியேட்- ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

**அதிதி ஹொலானி-** கொல்கத்தா லீட்-ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

**அருனீத்தா தாஸ்-** டெக்ஸ்டைல் டிசைனர், உதவிப் பேராசிரியர்- தேசிய இன்ஸ்டிடியூட் ஆஃப் பாஷன் டெக்னாலஜி

**அங்கித் அகர்வால்-** நிறுவனர்- பூல் கோ-ஃப்ளீத்தர் மெட்டீரிய

**அனுபவ் நாத்-** நிறுவனர் இயக்குநர்-ஓஜாஸ் ஆர்ட் கேலரி

**ஆயுஷ் கஸ்லிவால்-** நிறுவனர் மற்றும் இயக்குநர்- ஆயுஷ் கஸ்லிவால் டிசைன் பிரைவேட் லிமிட்டெ

**அவுஷாஜ்யா சைக்கியா-** புரோகிராம் மேனேஜர்- ICCo

**பனோ மெகோல்ஹுஸாவ் ஹராலு-** இந்தியப் பத்திரிக்கையாளர் மற்றும் புரோகிராம் மேனேஜர்- வைல்டுலைஃப் அண்டு பயோடைவர்ஸிட்டி கன்சர்வேஷன் டிரஸ்ட், நாகாலாந்து, கன்சர்வேஷனிஸ்ட்

**பாரதி கோவிந்தராஜ்- தலைவர்-** கிராஃப்ட் கவுன்சில் ஆஃப் கர்நாடகா

**படாஷிஷா லிங்டோ -** புரடக்ஷன் மேனேஜர்- ஸ்வாஹ்ல

**பாவ்யா கோயங்கா-** நிறுவனர் மற்றும் டிசைனர்- ஐரோ ஐரோ

**போர்னாலி டேக்கா -** நெசவாளர்- பகாரா கைத்தறி கிளஸ்ட்டர், அஸ்ஸாம்

**பிரிகேடியர் ( ஓய்வு) ராஜீவ் குமார் சிங்-** மேனேஜிங் டைரக்டர்- நார்த் ஈஸ்ட்டர்ன் ஹேண்டிகிராஃப்ட்ஸ் அண்டு ஹேண்ட்லூம்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிட்டெட் (NEHHDC)

**பிரிகிட்டெ சிங்-** டெக்ஸ்டைல் டிசைனர்- பிரிகிட்டே சிங் ஸ்டூடியோ

**சந்திராணி -** உரிமையாளர்-கிராஃப்ட் கஃபெ அண்டு ஹேண்ட்லூம் கேலரி

**தரம்ஜீத் குமார்-** இணை நிறுவனர்-அயாங்கின் லெக்போ, அயாங் டிரஸ்ட்

**தர்ஷனா கஜாரே-** ஹெட் ஆஃப் சஸ்டெயினபிலிட்டி- ரைஸ் வேர்ல்டுவைடு ( லக்மே ஃபாஷன் வீக்)

**தீபாலி கண்டேல்வல்-** கம்யூனிகேஷன் கன்சல்ட்டண்ட்- ஷிஃப்ட் ஃபெஸ்டிவல்

**தீபாலி சேனாபதி-** நெசவாளர்- பகாரா ஹேண்ட்லூம் கிளஸ்ட்டர், அஸ்ஸாம்

**திபாமோனி மெஹ்தி-** நெசவாளர்- பகாரா ஹேண்ட்லூம் கிளஸ்ட்டர், அஸ்ஸாம்

**தேவ்யானி சஹாய்-** அசோசியேட் டைரக்டர்- ஓஜாஸ் ஆர்ட் கேலரி

**டெல்பைன் பாவ்லிக்-** துணை இயக்குநர் ஆர்ட்ஸ், பிரிட்டிஷ் கவுன்சில்

**தேவிகா புரந்தரே-** தலைவர், ரீஜினல் ஆர்ட்ஸ் புரோகிராம், தெற்காசியா- பிரிட்டிஷ் கவுன்சில்

**டெல்பைன் வில்லியோட்-** பாலிசி அண்டு கேம்பெய்ன் மேனேஜர்- ஃபாஷன் ரெவல்யூஷன்

**திவ்யா பத்ரா தாஸ்-** இணை நிறுவனர்- குயிர்க்ஸ்மித் லைஃப்ஸ்டைல் எல் எல் பி

**திவ்யா ஹெக்டே-** நிறுவனர், தலைமை எக்ஸிகியூட்டிவ் டைரக்டர்-400 திங்ஸ்.இன்

**திவ்யா கிருஷ்ணன் -** சுயேச்சையான ஸ்டைலிஸ்ட் அண்டு கிராஃப்ட் நிபுணர்

**கங்காம்பிகா சோமசேகரப்பா-** இன் கண்ட்ரி கம்யூனிட்டி மேனேஜர்- ஓப்பன் அப்பேரல் ரெஜிஸ்ட்ரி

**கௌரி கே. புரோகித்-** உதவிப் பேராசிரியர்- பேர்ள் அகாடமி, ஜெய்ப்பூர்

**கீதாஞ்சலி கஸ்லிவால்-** நிறுவனர் மற்றும் மேனேஜிங் டைரக்டர்-அனந்த்யா ரீட்டெய்ல்ஸ் பிரைவேட் லிமிடெட் ( ஆயுஷ் கஸ்லிவால் டிசைன் பிரைவேட் லிமிட்டெட்)

**கிரிராஜ் சிங் குஷ்வாஹா-** செயலர்- இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கிராஃப்ட்ஸ் & டிசைன் ( IICD)

**கௌரி குமாரி-** இணை நிறுவனர்- பிரின்ஸஸ் தியா குமாரி ஃபவுண்டேஷன்

**குஞ்ஜன் ஜெயின் -** நிறுவனர் மற்றும் கிரியேட்டிவ் - விரிக்ஷ் டிசைன்ஸ் ( கிரியேட்டிவ் டிகினிட்டியின் உறுப்பினர்)

**ஹேமா சாரதா -** டிசைனர்- பேம்பூ அண்டு பஞ்ச்

**ஹிமான்ஷு ஷானி-** நிறுவனர் மற்றும் கிரியேட்டிவ் டைரக்டர்-11:11 / லெவன் லெவன்

**இபா மல்லை-** நிறுவனர் மற்றும் கிரியேட்டிவ் டைரக்டர்- கினிஹோ க்ளாத்திங்

**இஷிதா தாஸ்-** நிறுவனர்- தி சில்க் கான்செப்ட்; இணை நிறுவனர்-கனெக்டிங் என் இ ஆர்

**ஐரிஸ் ஸ்டிரில்-** கிரியேட்டிவ் டைரக்டர் மற்றும் இணை நிறுவனர்-சிலைவாலி

**ஜேன் ஹாரிஸ்-** பேராசிரியர், டிஜிட்டல் டிசைன் & இன்னோவேஷன் - யுனிவர்சிட்டி ஆஃப் ஆர்ட்ஸ், லண்டன்

**கபிதா தி-** நெசவாளர், அஸ்ஸாம்-டாடா அந்த்தரன் புரொகிராம்

**காமினி சாஹ்னி-** டைரக்டர்- மியூசியம் ஆஃப் ஆர்ட் அண்டு போட்டோகிராபி (மேப்)

**கவிதா சௌத்ரி-** டிசைன் டைரக்டர்- ஜெய்பூர் ரக்ஸ்

**கரிஷ்மா ஷஹானி கான் -** தலைமை நிர்வாக இயக்குநர்- கா-ஷா

**கிரித்தி டுலா-** கிரியேட்டிவ் டைரக்டர் மற்றும் நிறுவனர்- டூட்லேஜ்

**குலேந்திரா நாத் பாட்டக்-** ஒருங்கிணைப்பாளர்- அரசினர் செரிகல்ச்சர் பண்ணை, ஹௌலி

**கனிகா கார்வின்கோப்-** நிறுவனர்- நோ பார்டர்ஸ் ஷாப்

**கார்த்திக் வைத்யநாதன் -** நிறுவனர் & பிரின்சிபல் டைரக்டர்-வர்ணம் கிராஃப்ட் கலெக்டிவ்

**கே. ராதாராமன் -** நிறுவனர் , தலைமை எக்ஸிகியூட்டிவ் அதிகாரி, பிரின்சிபல் டிசைனர்- ஹவுஸ் ஆஃப் அங்காடி

**மதுஸ்மிதா கோண்ட்-** உதவி இயக்குநர்- ஸ்டேட் பேம்பூ டெவலப்மெண்ட் ஏஜன்சி, அஸ்ஸாம்

**மது வைஷ்னவ்-** நிறுவனர் மற்றும் எக்ஸிகியூட்டிவ் டைரக்டர்- ஸஹேலி விமன்

**மங்க்கிரன் தில்லோன் -** பார்ட்னர்ஷிப் ஸ்ட்ரேட்டஜிஸ்ட்- ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

**மீனாட்சி சிங்-** பேராசிரியர் டிசைன் - இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் கிராஃப்ட்ஸ் & டிசைன் ( IICD)

**மீரா கொராடியா-** நிறுவனர் மற்றும் எக்ஸிகியூட்டிவ் டைரக்டர்- கிரியேட்டிவ் டிக்னிட்டி

**மொகமது சாக்கிப்-** டை அண்டு டை கலைஞர்; டெக்ஸ்டைல் டிசைனர்- ரங்ரெஸ் கிரியேஷன்

**மேதா சைக்கியா-** நிறுவனர் தலைவர்- நார்த் ஈஸ்ட் இந்தியா ஃபாஷன் அண்டு டிசைன் கவுன்சில்- FNDC

**மனீஷ் திரிபாதி-** உரிமையாளர்- அந்த்தர் தேஸி

**மீட்டா மஸ்தானி**- இணை நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி-பிண்டாஸ் கலெக்டிவ்
**முடித்த ஸ்ரீவாஸ்தவா**- டைரக்டர்-கோல்டன் ஃபீதர்ஸ்; முடித்த & ராதேஷ் பிரைவேட் லிமிட்டெட்
**நான்ஸி பளேன்** - நிறுவனர்- திஸ் ஃபார் தேட்
**நேஹா சிங்**- பார்ட்னர்- குயிக் ஸேண்ட் ( சிஎஃப் கிரானைட்)
**நாக நந்தினி தாஸ்குப்தா**- டீன் - சிருஷ்டி மணிப்பால் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆர்ட், டிசைன் அண்டு டெக்னாலஜி
**நிகிடா சேத்தி**- நிறுவனர்-கல்பனே
**நிஷா கோட்டியான்** - மேனேஜர்- பிரிட்டிஷ் கவுன்சில்
**நயன்மோனி பரூவா**- ஜெனரல் மேனேஜர்-நியூ இரா டிசைன் பிரைவேட் லிமிட்டெட், குவஹாத்தி (NEDPL)
**டாக்டர் நயன் மித்ரா( பிஎச்டி)**- நிறுவனர்-சஸ்டெயினபிள் அட்வான்ஸ்மெண்ட்ஸ் ( Opc) பிரைவேட் லிமிட்டெட்
**நெங்கநியத்தம் ஹெங்னா**- மேனேஜிங் டைரக்டர்- ரன்வே இந்தியா
**நவோமி- நிறுவனர்**- புயோன் இந்தியா
**நிமிஷா சாரா பிலிப்**- இம்பேக்ட் இன்வெஸ்ட்மெண்ட் வழக்குரைஞர்
**நிரஞ்சலி காக்கோட்டி** - முதல்வர்- சுவால்குச்சி இன்ஸ்டிடியூட் ஆஃப் பாஷன் டெக்னாலஜி ( SIFT)
**நிகில் காலா**- உதவிப் பேராசிரியர்: இண்டீரியர் டிசைனிங் அண்டு ஸ்டைலிங் கோர்ஸ் லபீடர்-பேர்ள் அகாடமி
**நூபுர் கேஷன்** - பார்ட்னர்-அஸாமா எண்ட்டர்பிரைஸ் எல் எல் பி
**பர்வேஸ் ஆலம்**- கிரியேட்டிவ் டிசைன் லபீட்- டாடா டிரஸ்ட்ஸ்
**பௌல்மி கோகோய்**- இணை நிறுவனர்- வோவன் டேல்ஸ் ஆஃப் நார்த் ஈஸ்ட்
**பிரதிபா தி**- நெசவாளர், அஸ்ஸாம்-டாடா அந்த்ரன் புரொகிராம்
**பிரேரனா அஞ்சலி சௌத்ரி**- நிறுவனர்- ஹவுஸ் ஆஃப் நூரி
**பூஜா தாஸ்**- புராடக்ட் டிசைன் இண்ட்டர்ன் - இன்னொவேட் சேஞ்ஜ் கொலாப்ரேட் (ICCo)
**புபேரன் சர்மா**- இயக்குநர்- என்ஹான்ஸ் ஃபவுண்டேஷன்
**பத்ம ராஜ் கேஷ்ரி**- ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா
**பவித்ரா முதயா**- நிறுவனர்- விமோர் ஹேண்ட்லூம் ஃபவுண்டேஷன்
**பிரமீளா பிரசாத்** - நிறுவனர், உரிமையாளர்- கன்யா ஹெரிட்டேஜ் சாரீஸ்
**பிரியா கிருஷ்ணமூர்த்தி**- நிறுவனர் & சி இ ஓ- 200 மில்லியன் ஆர்ட்டீஸன்ஸ்
**புரோபி போர்டோலோய்**- நெசவாளர்-பாகரா ஹேண்ட்லூம் கிளஸ்ட்டர், அஸ்ஸாம்
**ராதேஷ் அக்ரஹரி** - இயக்குநர்- கோல்டன் ஃபீதர்ஸ்
**ரவி கிரண்**- உரிமையாளர்-மெட்டாபோர் ரச்சா
**ரேமா சிவராம்**- இணை நிறுவனர்- எத்திக் அட்டிக் பை ஃபேர்கொனெக்ட்
**ரேணுகா தி**- நெசவாளர், அஸ்ஸாம்- டாடா அந்த்தரன் புரோகிராம்
**ரிச்சர்டு பெல்ஹோ**- பேம்பூ ஆர்க்கிடெக் -ஜைனோரிக் -பேம்பூ பயோனியர் விருது பெற்றவர்
**ரிஷி ராஜ் சர்மா**- புராஜெக்ட் தலைவர்- மாட்டி மையம்
**ரித்துராஜ் தேவன்** - இணை நிறுவனர்- 7 வீவ்ஸ் ரிசர்ச் ஃபவுண்டேஷன்
**ரிச்சனா குமந்த்தெம்**- கிரியேட்டிவ் டைரக்டர்-குமெந்த்தம்
**ரிச்சிகா அகர்வாலா**- இணை நிறுவனர்- அஸாமா எண்ட்டர்பிரைஸ் எல் எல் பி
**ரூபா மேத்தா**- தலைமைச் செயல் அதிகாரி- சாஷா அசோசியேஷன் ஃபார் கிராஃப்ட் புரட்யூஸர்ஸ்
**ரோமா நர்ஸிங்கானி**- கியூரேட்டிவ் புரட்யூஸர்- ஃப்யூச்சர் கலெக்டிவ்
**ராஷி ஜெயின்** - இயக்குநர், மேற்கு இந்தியா- பிரிட்டிஷ் கவுன்சில்
**ராதி பரேக்** - நிறுவனர் டைரக்டர்-ஆர்ட்டிஸன்ஸ்
**ருச்சிகா சச்தேவா**- நிறுவனர் & கிரியேட்டிவ் டைரக்டர் -பாடீஸ்
**டாக்டர் ரிட்டு சேத்தி**- நிறுவனர் -டிரஸ்டீ; தலைவர்- தி கிராஃப்ட் ரிவைவல் டிரஸ்ட்
**ஸாகர் மன்சூர்**- நிறுவனர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி- பேர் நெஸஸிட்டிஸ்- ஜீரோ வேஸ்ட் இந்தியா
**சந்தீப் ஸாங்கரு**- நிறுவனர், டைரக்டர்- ஸாங்கரு டிசைன் ஆப்ஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்

**சிவா தேவிரெட்டி-** நிறுவனர், மேனேஜிங் டைரக்டர்- கோசூப்

**ஷியாம் சுக்ரமணி-** நிறுவனர்- கோரா ஜீன்ஸ்

**ஸ்ரீதர் போதர்-** நிறுவனர்- காஷ் ஃபவுண்டேஷன்/ எவோக் லண்டன்

**ஸ்ரீவி கல்யாண்- டீன் -** லா, என்விரோன்மெண்ட் & பிளானிங்-சிருஷ்டி மணிப்பால் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்ட்ஸ், டிசைன் அண்டு டெக்னாலஜி

**சூஸன் தாமஸ்-** இயக்குநர்- நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபாஷன் டெக்னாலஜி, பெங்களூரு

**ஸ்வாதி மஸ்கேரி-** டீன், இண்டஸ்டிரியல் ஆர்ட்ஸ் & டிசைன் பிராக்டிஸ், சிருஷ்டி மணிப்பால் இன்ஸ்டிடியூட் ஆப் ஆர்ட்ஸ், டிசைன் அண்டு டெக்னாலஜி

**சௌமார் சர்மா-** நிறுவனர்- இந்தியன் வீவர்ஸ் அலயன்ஸ் இன்க்

**சங்கமித்ரா காலிட்டா-** நிறுவனர், கிரியேட்டிவ் டைரக்டர்-எகோனிக்

**சஞ்சய் கர்க்-** நிறுவனர் அண்டு டிசைனர்- ரா மேங்கோ

**சாயாலி கோயல்-** நிறுவனர் அண்டு கிரியேட்டிவ் டைரக்டர்-கோகோ அண்டு ஜாஸ்மின்

**ஷெஃபாலி வாசுதேவ்-** எடிட்டர் இன் சீஃப்- தி வாய்ஸ் ஆஃப் ஃபாஷன்

**ஸ்ரேயா மொஜும்தார்-** எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர்- ஆல் இந்தியா ஆர்ட்டீஸன்ஸ் அண்டு கிராஃப்ட் ஒர்க்கர்ஸ் வெல்ஃபேர் அசோசியேஷன் (AIACA)

**ஷ்ரவணி தேஷ்முக்-** கல்ச்சுரல் இண்ட்டெலக்சுவல் புராப்பர்ட்டி ரைட்ஸ் இனிஷியேட்டிவ் (CIPRI)

**ஷிவம் புனியா-** நிறுவனர் & கிரியேட்டிவ் டைரக்டர்- பெஹ்னோ

**சாரதா கௌதம்-** மண்டலத் தலைவர், வடக்கு- டாடா டிரஸ்ட்ஸ்

**செவாலி போர்டோலோய்-** நெசவாளர்- பகாரா ஹேண்ட்லூம் கிளஸ்ட்டர், அஸ்ஸாம்

**ஸ்டீபனி ஓவன்ஸ்-** டீன் ஆஃப் ஆர்ட்ஸ், டிசைன் அண்டு மீடியா & கன்வீனர் , மேக்கிங் ஃப்யூச்சர்ஸ் ரிசர்ச் குரூப்- ஆர்ட்ஸ் யுனிவர்சிட்டி, பிளைமவுத்

**ஷாலினி குப்தா-** அசோசியேட் டீன், ஸ்கூல் ஆஃப் ஃபாஷன் - பேர்ள் அகாடமி

**ஷிக்கா காலிட்டா-** கைவினைக் கலைஞர்- மார்க்கெட்டிங் அண்டு சேல்ஸ்

**ஷிப்ரா சஞ்ச்சல்-** ஸ்டோரி டெல்லிங் மேனேஜர்-ஜெய்பூர் ரக்ஸ்

**ஷிக்கா சோனி-** மன ஆரோக்கிய ஆய்வாளர்

**ஷ்ருதி சிங்-** கண்ட்ரி ஹெட்- ஃபாஷன் ரெவல்யூஷன் இந்தியா

**ஷிவானி கோஸ்வாமி-** டெக்ஸ்டைல் டிசைனர்- இன்னொவேட் சேஞ்ஜ் கொலாப்ரேட் (ICCo)

**சுலக்னா சென் -** டாடா அந்த்தரன் புரோகிராம்

**செனோ ட்ஸுஹாஹ்-** அட்வைஸர், நார்த் ஈஸ்ட் நெட்வொர்க்-சிஜாமி வீவ்ஸ்

**சரோஜ் பாண்டே-** நிறுவனர்- புனர்னாவா கிராஃப்ட்ஸ்

**சுப்ரதா பாண்டே-** நிறுவனர் அண்டு மேனேஜிங் டைரக்டர்- புனர்னவா கிராஃப்ட்ஸ்

**சுஜயா ஹஸாரிகா** - இணை நிறுவனர் மற்றும் கிரியேட்டிவ் டைரக்டர்- ஜோஸாக்கி ஸ்டூடியோ

**ஸ்வாதி சின்ஹா-** உதவிப் பேராசிரியர், கோர்ஸ் கோ ஆர்டினேட்டர், இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் கிராஃப்ட்ஸ் & டிசைன் ( IICD)

**டாக்டர் ஷாலு ரஸ்தோகி-** பேராசிரியர்- இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் கிராஃப்ட்ஸ் & டிசைன் ( IICD)

**டாமரா லா கோஸ்வாமி-** அட்வைஸரி போர்டு உறுப்பினர்- பாரத் அக்ரோஎக்காலஜி ஃபண்டு

**ஷெரிங் டி புட்டியா-** உதவிப் பேராசிரியர்-நேஷனல் இன்ஸிடியூட் ஆஃப் ஃபாஷன் டெக்னாலஜி , ஷில்லாங் (NIIFT)

**தான்யா கோட்னலா -** ஆர்ட்டிஸன் டிசைனர்- அவ்னி மஹால்

**வித்யுன் சிங்-** இணை நிறுவனர் & கிரியேட்டிவ் டைரக்டர்-ஃப்யூச்சர் கலெக்டிவ்

**விபுல் அமர்-** போட்டோகிராபர், விஷுவல் ஆர்ட்டிஸ்ட் & ஃபிலிம் மேக்கர்- தி விஜபி போட்டோகிராபி ஆர்ட்ஸ் கம்பெனி

**விவேக் சர்மா-** இணை நிறுவனர்- பிரியஞ்ஜோலி

## 17. சொல்லடங்கல்

கார்பன் கிரெடிட்ஸ் என்பது உலகளாவிய பருவநிலை இலக்குகளை எட்டும் அளவில் வைத்திருப்பதற்காக கம்பெனிகள் மேற்கொள்ளும் வெளிப்படையான, அளவிடத்தக்க, பலன் தரும் அடிப்படையிலான நடவடிக்கைகளைக் குறிக்கிறது. காடுகள் போன்ற இயற்கையான கரியமில வாயுவை அடக்கும் சூழல், அல்லது கடல்வழி இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டல், அல்லது கரியமில வாயு வெளியேற்றத்தை அகற்றும் டெக்னாலஜியை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு கம்பெனிகள் ஆதரவு தரலாம்.மேலும், கரியமில வாயு வெளியேற்றத்தை அளவிடும் பாயின்ட்டுகளாகவும் இவை செயல்படலாம்.

கார்பன் செக்கொஸ்ட்ரியன் என்பது புறவெளியில் கலக்கும் கார்பன் டை ஆக்ஸைடை உயிரியல், ரசாயன அல்லது பௌதிக முறைப்படி பிடித்து வைத்து சேர்த்துவைக்கும் நடைமுறையைக் குறிக்கிறது. இது ஓர் இயற்கையான நடைமுறையாகும். இதை உலகளாவிய பருவநிலை மாற்றம் ஆபத்தை ஒழிப்பதற்காக புறவெளியில் கார்பன் டை ஆக்ஸைடு கலப்பதைக் குறைப்பதற்காக மேம்பட்ட தொழில்நுட்பத்தின் மூலமும் அடையலாம்.

சர்குலர் எகானமி என்பது உற்பத்தி மற்றும் நுகர்வின் பொருளாதார மாடல். இதன் நோக்கம் வரையறைக்கு உட்பட்ட சுற்றுச்சூழல் வளங்களுக்கு ஏற்ப நீடித்த நிலையான, தன்னாட்சி சமுதாயத்தை உருவாக்குவது. வளங்களை சரியான அளவில் பயன்படுத்தவும், கழிவுகளை குறைந்தபட்ச அளவுக்கு குறைக்கவும், தயாரிக்கப்பட்ட பொருளின் ஆயுளை நீட்டிக்கவும் புதிய செய்முறைகளையும், தீர்வுகளையும் வடிவமைப்பதன் மூலம் மறு உருவாக்கப் பொருளாதாரமாக மாறுவதற்கு இது முனைகிறது. இதில் ஏற்கனவே உள்ள மூலப்பொருட்களையும், தயாரிக்கப்பட்ட பொருட்களையும் பகிர்தல், குத்தகைக்கு விடுதல், மறு உபயோகம் செய்தல், ரிப்பேர் செய்தல், புதுப்பித்தல் மற்றும் கூடிய வரை மறுசுழற்சி செய்தல் ஆகியன அடங்கும்.

கிளைமேட் சேஞ்ஜ் என்பது வெப்பநிலையிலும், வானிலை அமைப்பிலும் நீண்டகால மாற்றங்கள் ஏற்படுவதைக் குறிக்கிறது. இந்த மாற்றங்கள் இயற்கையாக அல்லது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டு நிகழலாம். குறிப்பாக,மண்ணில் புதைந்திருக்கும் எரிபொருட்களை எரிப்பதால் உண்டாகலாம். தற்போது இந்தச் சொல் புவி வெப்பமடைவதையும், பூமியின் கிளைமேட் நிலையில் இதனால் உண்டாகும் விளைவுகளையும் குறிக்கிறது. பூமியின் கீழ் புறவெளியில் அதிக வெப்பத்தை சிக்கவைத்து, புவியை வெப்பமடையச் செய்யும் வெப்ப வாயு வெளியேற்றம் இதில் அடங்கும்.

கிளைமேட் ரீசிலியன்ஸ் என்பது கிளைமேட் தொடர்பான ஆபத்தான நிகழ்வுகள், போக்குகள், அல்லது தொந்தரவுகளை எதிர்பார்த்துச் செயல்படும் திறமையைக் குறிக்கிறது.

இகோ கிரெடிட்ஸ் என்பது இயற்கைச் சூழலைக் கெடுக்காத நுகர்வோர் பழக்கவழக்கங்களை ஊக்கப்படுத்தும் ஒரு ரிவார்டு வழங்கும் சிஸ்டமாகும். இது ஆக்கப்பூர்வமான சுற்றுச்சூழல் விளைவுகளை உண்டாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. இது பொருட்களை இறுதிநிலையில் பயன்படுத்துகிறவர்கள் திரும்பப் பயன்படுத்தவும், பொருட்களை மறுசுழற்சி செய்யவும் ஊக்கப்படுத்துகிறது.

என்வியோரன்மென்ட்டல் ஸ்டீவர்ட்ஷிப் என்பது இயற்கையான சுற்றுச்சூழலை பராமரிப்பு முயற்சிகள் மற்றும் நீடித்த நிலையான பழக்கங்கள் மூலம் பாதுகாப்பதையும், பயன்படுத்துவதையும் குறிக்கிறது. இதில் சுற்றுச்சூழல் பராமரிப்பாளர்களாகச் செயல்படும் தனிநபர்கள், குழுக்கள், லாபநோக்கற்ற குழுக்கள், அரசு அமைப்புக்கள், மற்றும் இதர நெட்வொர்க் அமைப்புக்கள் அடங்கும்.

ஃபாஸ்ட் ஃபாஷன் என்பது சமீபத்திய கேட்வாக் போக்குகளையும், ஆடம்பரமான ஃபாஷன் டிசைன்களையும், அதிக தேவைகளைச் சமாளிப்பதற்காக அவற்றை குறைவான செலவில் பெருமெடுப்பில் உற்பத்தி செய்து உடனுக்குடன் சில்லறை விற்பனைக் கடைகளுக்குக் கொண்டுவருவதைப் பிரதிபலிக்கும் ஒரு பிஸினெஸ் மாடலைக் குறிக்கிறது. ஃபாஸ்ட் ஃபாஷனில் நுகர்வோருக்கு குறைவான விலையில் ஸ்டைல்களைத் தருவதற்காக தரம் குறைவான பொருட்கள், பெரும்பாலும் சிந்தெடிக் துணிகள் பயன்படுத்தப்படுவது ஊக்கப்படுத்தப்படுகிறது.

ஹேண்டிகிராஃப்ட்ஸ் என்பது கைகளால் அல்லது எளிமையான கருவிகளால் உருவாக்கப்படும் பொருட்களை, சாதனங்களை, தொழில்களைக் குறிக்கிறது. பாண்டங்கள், பட்டாசித்ரா பெயிண்ட்டிங், வெண்ணிச் சல்லடை வேலைப்பாடுகள், அரக்குமெழுகு போன்ற பொருட்கள் இதில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் மனிதர்களின் திறன் மற்றும் திறமை மூலம் சுலபமான, சிக்கலற்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஹேண்ட்லூம் என்பது கைகளால் இயக்கப்படும் தறியாகும். இது மோட்டாரினால் அல்லது மின்சாரத்தினால் இயங்கும் தறியை விட வேறுபட்டது. நூல்களைப் பின்னிப்பின்னி இழுத்தும் தள்ளியும் நெருக்கியும் நெசவாளர்கள் நெய்வதால் விரைவாகவும், ஒரே சீராகவும், நீடித்து உழைக்கும் வகையிலும் நெய்யப்படுகிறது. முதுகில் சுமந்து செல்லும் தறிகளில் இருந்து அறைக்குள்ளேயே அதன் அளவுக்கு சரியாகப் பொருந்தும் வகையில் நிறுவப்படும் தறிகள் வரை கைத்தறிகள் உள்ளன.

இன்வேஸிவ் பிளாண்ட் ஸ்பீசிஸ் என்பது நோக்கத்துடனோ, தற்செயலாகவோ புதிய சூழலில் அறிமுகப்படுத்தப்பட்டு, அங்கு வேகவேகமாகப் பரவி வளர்ந்து, அந்தப் பகுதியின் இயற்கைச் சூழல் சமநிலையைக் கெடுக்கும் தாவர வகையைக் குறிக்கிறது. இவை சில பகுதிகளில் கெடுதியை உண்டாக்கக்கூடும் என்றாலும், 'மோசமானவை' என்று சொல்லிவிட முடியாது. அயல் இயற்கைச் சூழலை இவை கெடுக்கும்போதுதான் பிரச்சினை உண்டாகிறது.

பெர்மாகல்ச்சர் என்பதில் தன்னிறைவு தரும் வகையிலும், நீடித்திருக்கும் வகையிலும் விவசாய இயற்கைச் சூழலை சாகுபடி செய்வது அடங்கும். பலதரப்பட்ட பயிர்களைச் சாகுபடி செய்தல், மீட்சியாற்றல், இயற்கையான உற்பத்தித் திறன், நீடித்து நிலைத்திருத்தல் என்ற அடிப்படையில் ஒத்திசைவான சாகுபடி முறையை இயற்கை வழியில் உருவாக்குவது இதன் முக்கிய அம்சம்.

பவர்லூம் என்பது 1784-இல் பிரிட்டனில் எட்மண்ட் கார்ட்ரைட் என்பவர் கண்டுபிடித்த ஒரு இயந்திரக் கருவியாகும். இதில் விசைக்காக ஒரு டிரைவ் ஷாஃப்ட் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்பால் கைத்தறிகளில் உற்பத்தியாவதை விட வெகுவேகமாக துணிகளை நெய்ய முடிகிறது. எனவே இதை தொழில்புரட்சிக்கு ஓர் அடையாளமான மெஷின் இது என்று கருதப்படுகிறது.

ரீஜெனரேட்டிவ் அக்ரிகல்ச்சர் என்பது முழுமையான சாகுபடி சிஸ்டம் ஆகும். இதில் மண்ணின் ஆரோக்கியம், உணவின் தரம், பல்லுயிர்ப் பெருக்க மேம்பாடு, தண்ணீரின் தரம், காற்றின் தரம் ஆகிய அனைத்து அம்சங்களிலும் கவனம் செலுத்தப்படுகிறது. மண்ணில் மக்கும் பொருள், பயோட்டா மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம், நீர்ப்பிடிப்புக் கொள்ளளவை அதிகரித்தல் கார்பன் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை இது வலியுறுத்துகிறது.

ஸ்லோ ஃபாஷன் என்பது துணி நெய்வதற்குத் தேவைப்படும் செய்முறைகளையும், பொருட்களையும் கவனமாகக் கருத்தில் கொண்டு நீடித்த நிலையான ஃபாஷனை உருவாக்குவதற்கான அணுகுமுறை மற்றும் விழிப்புணர்வை குறிக்கிறது. சில தடவைகள் அணிந்த பிறகு குப்பைக் கிடங்கில் கொண்டு போய்க் கொட்டப்படும் டிரெண்டி உடைகளை விட , காலவரையறை இல்லாமல், உயர்தரமான டிசைன்களை உருவாக்குவதற்கு இதில் முன்னுரிமை தரப்படுகிறது. துணிகளும், உடைகளைத் தயாரிப்பவர்களும் மக்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும், பிராணிகளுக்கும் மரியாதை தந்து மதிக்க வேண்டும் என்று இது கோருகிறது.

யு என் எஸ்டிஜி ( நிலையான வளர்ச்சி இலக்குகள்) என்பது 2015-ஆம் ஆண்டில் ஐநா வறுமைக்கு முடிவுகட்டி, பூமியைப் பாதுகாத்து, 2030-ஆம் ஆண்டுக்குள் அமைதி மற்றும் வளச்செழிப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று உலகிற்கு அழைப்பு விடுத்து நிறைவேற்றிய தீர்மானத்தை குறிக்கிறது. ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த இந்த 17 இலக்குகளில், ஒரு பகுதியில் எடுக்கப்படும் நடவடிக்கை மற்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே வளர்ச்சி என்பது சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையை சமநிலையில் வைப்பதாக இருக்க வேண்டும்.

## 18. குறிப்புக்கள்

1. ஏஆர்6 சிந்தெஸிஸ் அறிக்கை; கிளைமேட் சேஞ்ஜ் 2023 (2023) பருவநிலை மாற்றம் பற்றிய அரசுகளிடை பேனல் (IPCC) . கிடைப்பது : <https://www.ipcc.ch/report/sixth-assessment-report-cycle/>
2. இந்தியா(2023) கிளைமேட் ஆக்ஷன் டிராக்கர் , கிடைப்பது: <https://climateactiontracker.org/countries/india/>
3. பிரவுன், எம்.இ. மற்றும் அவுட்ராட்,சி டெ ஜே (20233) பாலினம், பருவநிலை மாற்றம், மற்றும் பாதுகாப்பு: தொடர்புப்படுத்துவது. வில்சன் சென்டர்; கிடைப்பது: <https://www.wilsoncenter.org/article/gender-climate-change-and-security-making-connections>
4. கிருஷ்ணமூர்த்தி ,பி. மற்றும் சுப்பிரமணியம் .ஏ. (2021) இந்தியாவின் கைவினைப் பொருளாதாரத்தில் முறைசாராத் தன்மையைப் புரிந்துகொள்ளல்: இம்பேக்ட் எண்ட்டர்பிரனர். கோ டு இம்பேக்ட் எண்ட்டர்பிரனர். கிடைப்பது: <https://impactentrepreneur.com/understanding-informality-in-indias-artisan-economy/>
5. பெர்னார்டு எச். (2023) தெற்காசியக் கைவினைஞர்களின் ஸ்திரமற்ற நிலையைப் புரிதல் . தி போர்ஜெர் புராஜெக்ட் . கிடைப்பது: <https://borgenproject.org/south-asian-artisans/>
6. கைவினைத் தொழில் மற்றும் சுழல் பொருளாதாரம் (2022) வேர்ல்டு கிராஃப்ட் கவுன்சில். கிடைப்பது: <https://www.wccinternational.org/crafts-and-circular-economy>
7. சுழல் பொருளாதாரம்(2022) கிராஃப்ட்ஸ் கவுன்சில் . கிடைப்பது: <https://www.craftscouncil.org.uk/documents/1827/Circular_Economy.pdf>
8. ஃபாஷன் தொழில் குறைவான கார்பனுக்கு மாற ஐநா உதவி (2018) ஐநா கிளைமேட் சேஞ்ஜ் சார்ட்டர். கிடைப்பது: <https://unfccc.int/news/un-helps-fashion-industry-shift-to-low-carbon>
9. அனுபிரேர்ணா.டி (2022) கைத்தறி, கால வரம்பற்ற பாரம்பரியம் & அதன் ஆக்கப்பூர்வ சுற்றுச்சூழல் பாதிப்பு. அனுபிரேர்ணா . கிடைப்பது: <https://anupreria.com/blog/handloom-a-time-less-tradition-its-positive-environmental-impact>
10. கிருஷ்ணமூர்த்தி ,பி. மற்றும் சுப்பிரமணியம் .ஏ. (2021) இந்தியாவின் கைவினைப் பொருளாதாரத்தில் முறைசாராத் தன்மையைப் புரிந்துகொள்ளல்: இம்பேக்ட் எண்ட்டர்பிரனர். கோ டு இம்பேக்ட் எண்ட்டர்பிரனர். கிடைப்பது: : <https://impactentrepreneur.com/understanding-informality-in-indias-artisan-economy/>
11. பெர்னார்டு எச். (2023) தெற்காசியக் கைவினைஞர்களின் ஸ்திரமற்ற நிலையைப் புரிதல் . தி போர்ஜெர் புராஜெக்ட் . கிடைப்பது: <https://borgenproject.org/south-asian-artisans/>
12. கைத்தறி & இந்தியாவில் கைத்தறித் தொழில் ( தேதியில்லை) கைத்தறி & இந்தியாவில் கைத்தறித் தொழில் கிடைப்பது: <https://www.investindia.gov.in/sector/textiles-apparel/handlooms-handicrafts>
13. கைத்தறித் தொழில் மற்றும் ஏற்றுமதிகள் (2022). இந்தியன் டிரேட் வலைதளம்: கிடைப்பது: https://www.indiantradeportal.in/vs.jsp?id=0%2C31%2C24100%2C24112 HYPERLINK "https://www.indiantradeportal.in/vs.jsp?id=0%2C31%2C24100%2C24112&lang=0"& HYPERLINK"https://www.indiantradeportal.in/vs.jsp?id=0%2C31%2C24100%2C24112&lang=0"lang=0
14. இந்தியக் கைவினைப் பொருள் மார்க்கெட் சைஸ், பங்கு, மதிப்பீடு,, அறிக்கை 2023-2028 (2022) இந்தியக் கைவினைப் பொருள் மார்க்கெட் சைஸ், பங்கு, மதிப்பீடு,, அறிக்கை 2023-2028 . கிடைப்பது: <https://www.imarcgroup.com/india-handicrafts-market>
15. இந்தியாவில் நிலையான ஃபாஷன் பற்றிய குளோபல் எக்ஸ்பெர்ட் மிஷன் (2021) இன்னொவேட் யுகே கே டி என் . கிடைப்பது: https://iuk.ktn-uk.org/wp-content/uploads/2021/11/KTN_Sustainable-Fashion-India.pdf <%20https://iuk.ktn-uk.org/wp-content/uploads/2021/11/KTN_Sustainable-Fashion-India.pdf>
16. இந்தியாவில் நிலையான ஃபாஷன் பற்றிய குளோபல் எக்ஸ்பெர்ட் மிஷன் (2021) இன்னொவேட் யுகே கே டி என் . கிடைப்பது: https://iuk.ktn-uk.org/wp-content/uploads/2021/11/KTN_Sustainable-Fashion-India.pdf <%20https://iuk.ktn-uk.org/wp-content/uploads/2021/11/KTN_Sustainable-Fashion-India.pdf>
17. கைத்தறி & இந்தியாவில் கைத்தறித் தொழில் ( தேதியில்லை) கைத்தறி & இந்தியாவில் கைத்தறித் தொழில் கிடைப்பது: <https://www.investindia.gov.in/sector/textiles-apparel/handlooms-handicrafts>
18. மெக்ஃபால்-ஜான்ஸன். எம் (2019) சர்வதேச விமானங்கள் மற்றும் கடல்வழி செல்லும் கப்பல்கள் சேர்ந்து வெளிவிடும் கார்பனை விட அதிகமாக ஃபாஷன் தொழில் வெளிவிடுகிறது. பூமியில் இதன் மிகப்பெரிய பாதிப்பு இது, பிஸினஸ் இன்சைடர். கிடைப்பது: https://www.businessinsider.in/science/news/the-fashion-industry-emits-more-carbon-than-international-flights-and-maritime-shipping-combined-here-are-the-biggest-ways-it-impacts-the-planet-/articleshow/71640863.cms
19. ஃபாஷன் தொழில் , நிலையான வளர்ச்சிக்காக ஐநா பின்பற்றும் கிளைமேட் ஆக்ஷன் (2018) ஐநா கிளைமேட் சேஞ்ஜ் சார்ட்டர். கிடைப்பது: <https://unfccc.int/news/fashion-industry-un-pursue-climate-action-for-sustainable-development>
20. கிராஃப்ட் மற்றும் சுழல் பொருளாதாரம் (2023) கார்லேண்ட் மேகசீன். கிடைப்பது: <https://garlandmag.com/loop/craft-and-the-circular-economy>
21. நம்பகமான மொழிபெயர்ப்புக்கள்(2023) சுதேசி மொழிகளின் சுற்றுச்சூழல் அறிவுச் சொற்கள், நம்பகமான மொழிபெயர்ப்புக்கள். கிடைப்பது: <https://www.trustedtranslations.com/blog/indigenous-languages-environmental-words-of-wisdom>
22. கிரான் எம்( 2020) அய்னி: மனிதகுலத்தை மதிப்பது குளோபல் தொண்டர்கள், கிடைப்பது: <https://globalvolunteers.org/ayni-honoring-the-humanity-in-all/>
23. எரி சில்க்: அமைதியான சில்க்(2023) நாங்கள் கே ஏ எல் . கிடைப்பது: <https://www.wearekal.com/pages/eri-silk>
24. உகாண்டாவில் மரப்பட்டைத் துணி நெசவு (தேதியில்லை) இண்ட்டேஜிபிள் கல்ச்சுரல் ஹெறிட்டேஜ்.கிடைப்பது: <https://ich.unesco.org/en/RL/barkcloth-making-in-uganda-00139>
25. ப்லேடாக்கில் இருந்து யாக் உல், செம்மறி ஆட்டு உல், வெள்ளாட்டு உல் (2023) வி ஆர் கே ஏ எல். கிடைப்பது: <https://www.wearekal.com/pages/wool-from-the-himalayas>
26. கோஷ்.ஏ. (2018) வடகிழக்கு இந்தியாவில் மிகவும் கேடுதரும் களையில் இருந்து கைவினைச் செல்வத்தை உருவாக்கிய 10 ஆண்டுகள். தி இண்டியன் எக்ஸ்பிரஸ்.கிடைப்பது: <https://indianexpress.com/article/lifestyle/art-and-culture/in-the-northeast-water-hyacinth-crafting-notorious-weed-5080471/>

27. Www.directcreate.com (2023) ஆகாயத்தாமரை நெசவு கிராஃப்ட். டைரக்ட் கிரியேட். கிடைப்பது: <https://www.directcreate.com/craft/water-hyacinth-weaving>

28. மாஹிபத். டி. எட் அல், (2022) பங்களாதேஷில் லைஃப்சைக்கிள் மதிப்பீடு மூலம் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதிப்புக்களின் மாடலிங். பூமி சிஸ்டம் மற்றும் சுற்றுச்சூழல் மாடலிங். ஸ்பிரிங்கர் லிங்க். கிடைப்பது: <https://link.springer.com/article/10.1007/s40808-022-01491-7>

29. பிரியா எம். ( 2018) கமலாதேவி சட்டோபாத்யாய - இந்தியக் கைவினைக் கலைகளின் ஆதரவாளர். சாரங்கி. கிடைப்பது: <https://www.sarangithestore.com/blogs/sarangi-journal/kamaladevi-chattopadhyay-the-torchbearer-of-indian-crafts>

30. கோஷ் எஸ். (2018) அஸ்ஸாமின் முகா பட்டுப்புழுக்களின் பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போர். மோங்காபே. கிடைப்பது: <https://india.mongabay.com/2018/02/assams-muga-silkworm-battles-climate-change/>

31. (2023) பருவநிலை மாற்றம் மூலமாக கைவினைக் கலைஞர்களுக்கு ஆதரவாக டேட்டாவை பயன்படுத்துதல் . rep. NEST & McGovernFoundation . Available at: <https://www.buildanest.org/wp-content/uploads/2023/08/2023_McGovernFoundation_InsightsForImpact.pdf>

32. (2023) Using Data to Support Artisans Through Climate Change. rep. NEST & McGovernFoundation . Available at: <https://www.buildanest.org/wp-content/uploads/2023/08/2023_McGovernFoundation_InsightsForImpact.pdf>

33. சுழல்பொருளாதாரம் அறிமுகம் ( தேதி இல்லை) எல்லென் மெக் ஆர்தர் ஃபவுண்டேஷன் .கிடைப்பது: <https://ellenmacarthurfoundation.org/topics/circular-economy-introduction/overview>

34. மஸ்தானி . எம். (2021) நாம் ஏன் கிராஃப்ட்வாஷிங்கை அழைக்க வேண்டும். தி வாய்ஸ் ஆஃப் ஃபாஷன். கிடைப்பது: <https://www.thevoiceoffashion.com/fabric-of-india/artisan-x-designer/why-we-must-call-out-craftwashing--4684>

35. ஆஹரிதாஷ் . ஏ. கே. சர்மா,ஏ மற்றும் பாஹேல் கே. (2015) இந்திய நிலைமைகளில் கழிவுநீரை டிரீட்மெண்ட் செய்வதில் கல்வாழைக்கு உள்ள சக்தி, Int J Phytoremediation. Available at: <https://pubmed.ncbi.nlm.nih.gov>

36. ரஹ்மான். ஏ.பி. (2019) கட்ச் பகுதியின் வகாட் அல்லது காலா பருத்தி: கிட்டத்தட்ட மடிந்த நிலையில் இருந்து மீண்டது. Mongabay. Available at: <https://india.mongabay.com/2019/07/kutchs-wagad-or-kala-cotton-back-from-the-almost-dead/>

37. காலாபருத்தி: இந்தியாவின் பழங்கால ஆர்கானிக் பருத்தி (2022) இந்தியன் டெக்ஸ்டைல் ஜர்னல். கிடைப்பது: <https://indiantextilejournal.com/kala-cotton-indias-old-world-organic-cotton/>

38. கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ் ( தேதி இல்லை) கிராஃப்டிங் ஃப்யூச்சர்ஸ் | யுகே & சர்வதேச ப்ராஜெக்டுகள் | டிஎஃப்- பிரிட்டிஷ் கவுன்சில்- கிடைப்பது: <https://design.britishcouncil.org/projects/crafting-futures/>

39. (2017) சுதேசி மக்களும் பருவநிலை மாற்றமும், ரெப். ீசர்வதேச தொழிலாளர் நல அமைப்பு, கிடைப்பது: <https://www.ilo.org/wcmsp5/groups/public/---dgreports/---gender/documents/publication/wcms_551189.pdf>

40. உலகளாவிய நெருக்கடியைச் சமாளிக்க 2025-ஆம் ஆண்டுக்குள் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்கு நிதியுதவியை இரட்டிப்பாக்குதல்- ஐநா அறிக்கை (2022) ஐநா சுற்றுச்சூழல் திட்டம். கிடைப்பது: https://www.unep.org/news-and-stories/press-release/doubling-finance-flows-nature-based-solutions-2025-deal-global

41. உலகளாவிய நெருக்கடியைச் சமாளிக்க 2025-ஆம் ஆண்டுக்குள் இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுக்கு நிதியுதவியை இரட்டிப்பாக்குதல்- ஐநா அறிக்கை (2022) ஐநா சுற்றுச்சூழல் திட்டம். கிடைப்பது: https://www.unep.org/news-and-stories/press-release/doubling-finance-flows-nature-based-solutions-2025-deal-global

42. ஈப் (2023) இயற்கை அடிப்படையிலான தீர்வுகளில் முதலீடு செய்தல், யூரோப்பியன் இன்வெஸ்ட்மெண்ட் பேங்க், கிடைப்பது: <https://www.eib.org/en/publications/20230095-investing-in-nature-based-solutions>

43. 200 மில்லியன் ஆர்ட்டிஸன்ஸ் (2023) கைத்தயாரிப்பு பிசினஸ். கைத்தயாரிப்பு புரட்சிக்கு நிதியுதவி செய்தல்: செயலூக்கி மூலதனம் எவ்வாறு இந்தியாவின் கல்ச்சுரல் பொருளாதாரத்தை உந்திவிடும். கிடைப்பது: www.businessofhandmade2.com <http://www.businessofhandmade2.com>

44. 200 மில்லியன் ஆர்ட்டிஸன்ஸ் (2023) கைத்தயாரிப்பு பிசினஸ். கைத்தயாரிப்பு புரட்சிக்கு நிதியுதவி செய்தல்: செயலூக்கி மூலதனம் எவ்வாறு இந்தியாவின் கல்ச்சுரல் பொருளாதாரத்தை உந்திவிடும். கிடைப்பது: www.businessofhandmade2.com <http://www.businessofhandmade2.com>

45. யூனிட் பி. (2006) பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த கோட்பாடு. கிடைப்பது: <https://www.cbd.int/convention/articles/?a=cbd-02>

46. உணவு மற்றும் வேளாண் துறையில் நில உபயோகம் மாறுபாட்டால் ஏற்படும் நிதிப்பாதிப்பை மதிப்பிடுதல் (2022) கிளைமேட் சாம்பியன்ஸ், கிடைப்பது: https://climatechampions.unfccc.int/wp-content/uploads/2022/09/Assessing-the-financial-impact-of-the-land-use-transition-on-the-food-and-agriculture-sector.pdf

47. ஈப் (2023) இயற்கை அடிப்படையிலான தீர்வுகளில் முதலீடு செய்தல், யூரோப்பியன் இன்வெஸ்ட்மெண்ட் பேங்க், கிடைப்பது: <https://www.eib.org/en/publications/20230095-investing-in-nature-based-solutions>

## 19.வட்டமேசை உரையாடல்களின் கருத்துக்கள்

பெங்களூரு, தில்லி, குவஹாத்தி, ஜெய்ப்பூர், மும்பை ஆகிய நகரங்களில் நடைபெற்ற ஐந்து சுற்று வட்டமேசை விவாதங்களில் இருந்து கிடைத்துள்ள கூடுதல் கருத்துக்கள் பின்வருமாறு.

**கைவினைத் தொழில், நிலைத்திருத்தல் மற்றும் அளவு**

' கைவினைத் தொழில் என்பதன் உண்மையான மதிப்பை பலரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அது ஒரு மெதுவான, விரிவான நடைமுறை. தேவை இருக்கிறது என்பதற்காக பெருமெடுப்பில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் போல கைவினைத் தொழிலில் பொருள் உற்பத்தி அளவை அதிகரித்துவிட முடியாது. ஆனால், மெதுவான நடைமுறை என்பதில் அபாரமான வலிமையும், உணர்வுபூர்வமான தொடர்பும் இருக்கிறது. கைவினைத் தொழில் பல தலைமுறைகளாகக் கைமாறி வருவது. அதுவே இதன் மதிப்பை நம்பற்கரிய வகையில் கூட்டுகிறது. உதாரணமாக, குஜராத் மற்றும் ஜெய்ப்பூரில் இருந்து வரும் நேர்த்தியான பிரிண்ட்டுகளைப் பாருங்கள். அவை மிகவும் கவனமாகவும், பிரிண்ட் துணிகளுடன் ஒப்பிட்டால், கைவினைக் கலையின் மதிப்பு டிஜிட்டல் பிரிண்ட் உடைகளில் இருக்காது.'

' நாங்கள் சுமார் 2000 நெசவாளர்கள் மூன்று வெவ்வேறு குடியிருப்புக்களில் வேலை செய்கிறோம். ஆனால் பருவநிலை மாற்றம் என்னும்போது, இயற்கை நிலையாக இருக்க வேண்டும் என்றே எப்போதும் நாங்கள் விரும்புகிறோம். நிலைத்தன்மை மற்றும் வானிலை மாற்றம் பற்றிய கொள்கைகளில் விட்டுக்கொடுக்காமல் பாரம்பரிய அறிவையும், விஞ்ஞான அறிவையும் ஒருங்கிணைப்பது சவாலாக உள்ளது. தண்ணீர் பயன்பாடு, வளவளங்களைப் பேணிக்காத்தல், ஆபத்தான கெமிக்கல்களைத் தவிர்த்தல், அல்லது தூய்மையான எரியாற்றல் திட்டங்களை செயல்படுத்துதல் -இப்படி எந்த ஒரு விஷயம் ஆகட்டும், இந்த நடைமுறைகளை நாங்கள் வேலை செய்யும் சமூகத்தினரிடையே உணர்த்துவதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். பொறுப்பு வாய்ந்த எங்களுடைய பிஸினஸ் புரொகிராம் மூலம் பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பொறுப்புணர்வோடு பிஸினஸ் செய்ய வேண்டும் என்பதை விளக்கி வலியுறுத்துகிறோம்.'

' கைவினைப் பொருட்களைப் பார்ப்பீர்களானால், உதாரணமாக, நாங்கள் வடகிழக்குப் பகுதிகளில் வேலை செய்யும்போது, ஏராளமான பொருட்கள் மூங்கிலால் செய்யப்பட்டன. முதலில் இருந்து முடிவு வரை பயன்படுத்தப்பட்ட எல்லா மூலப்பொருட்களுமே மூங்கிலாகத்தான் இருந்தன. மூங்கில்தான் வெகு விரைவிலேயே திரும்ப முளைத்து விடுகிறது. குறைவான சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதற்காக நாங்கள் மக்கும் பொருட்களை பயன்படுத்துகிறோம்.'

இந்தியாவில் கைவினைப் பொருட்கள் என்னும்போது, எனது கருத்துப்படி அவற்றிடம் நம்பமுடியாத அளவுக்கு நிலையான மற்றும் இயற்கைச் சூழலைக் கெடுக்காத தன்மைகள் உள்ளன. ஏன்? ஏனென்றால், கைவினைக் கலைஞர்கள் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு வேலை செய்கிறார்கள்; தங்களைச் சுற்றிலும் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். இது அவர்கள் சார்ந்திருக்கும் வட்டாரத்துடன் உண்மையிலே ஆழ்ந்த இணைப்புக் கொண்ட ஒரு வாழ்க்கை முறை. இதனால் இந்த நடைமுறை நீடித்து நிலைத்திருக்கிறது. ஆனால், ஒரு கவலை; பெருமெடுப்பிலான மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் நாம் கவனம் செலுத்தத் தொடங்கினால், கைவினை என்பதன் சாராம்சத்தில் சமரசம் செய்து கொள்ள வேண்டிய ஆபத்து இருக்கிறது. பெருமளவுக்கு தேவையை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடி ஏற்படுமானால், குறுக்கு வழியில் செல்ல வேண்டியிருக்கும் அல்லது தரத்தில் சமரசம் செய்ய வேண்டியிருக்கும், அப்போது கைவினைத் திறன் என்னும் உண்மையான உணர்வை நாம் இழந்து விடுகிறோம்.'

' ஐந்தாண்டுகளுக்கு முன்பு எங்களின் புராஜெக்டை நாங்கள் தொடங்கியபோது, வடகிழக்கு வட்டாரம் முழுவதுமே பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த செழுமையான பூமி என்பதை நாங்கள் உணர்ந்தோம். எனினும், வழக்கமான நடைமுறைகளால் சுற்றுச் சூழலுக்கு மிகவும் முக்கியமான,இந்த பல்லுயிரி மண்டலத்திற்கு ஆபத்து உண்டாகும் என்பதையும் கண்டுகொண்டோம். எனவே, இயற்கைச்சூழலியலார் மற்றும் டிசைனர்கள் அடங்கிய ஒரு குழுவினர் சேர்ந்து ஆராய்ச்சி இன்ஸ்டிடியூட்டை ஏற்படுத்தினோம். நாங்கள் ஒன்று சேர்ந்து, பல்லுயிரிகள் நிறைந்த இந்த வட்டாரத்தைப் பேணிக்காத்து, உலகெங்கிலும் உள்ள மற்ற பல்லுயிர் மண்டலங்களிலும் செயல்படுத்தக்கூடிய ஒரு மாடலை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறோம். தற்போது, இரண்டு புராஜெக்டுகளில் வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஒன்று, மேகாலயாவின் காப்புக் காட்டிலும், இன்னொன்று பில் வனவிலங்கு மையத்திலும் நடைபெறுகிறது. இரண்டுமே, உள்ளூர் பகுதி மக்களுடன் சேர்ந்து செயல்பட்டு, பருவநிலை தொடர்பான ஆக்கப்பூர்வ அணுகுமுறைகளைப் பற்றி கற்றுக் கொள்கிறோம்.'

' கைவினை என்பது மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியது. ஆனால், இதனால் ஏற்படும் பாதிப்பை வெளிப்படையாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. இயற்கை என்பது இயற்கையிலேயே புரிந்து கொள்ள முடியாதது.'

' கடந்த சில ஆண்டுகளில் எங்களுடைய வேலைகளில் இருந்து எங்களிடம் பருவநிலை மீட்சிக் கருத்துக்கள் உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டோம். எங்களிடம் பாரம்பரிய நடைமுறைகள் உள்ளன. அவற்றை பிராண்டாக மாற்ற வேண்டும். இதுதான் எங்களிடம் இருக்கும் தீர்வு. நம்மிடம் 1000 ஆண்டுகள் பழமையான சுழல் பொருளாதாரம் கிராமங்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அது இப்போது தேவை. பெண்கள் இயற்கையுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு இயற்கையான மூலப் பொருட்கள் கிடைக்கின்றன. இதைத்தான் நாம் பல ஆண்டுகளாகச் செய்து கொண்டிருக்கிறோம். பாரம்பரிய அறிவையும், சமூகத்தையும் திரும்பிப் பார்ப்பது மிகவும் முக்கியமானது.'

' இது ஒரு பாரம்பரியம். இதை நாம் மதித்தாக வேண்டும். ஒரு கிராமத்தின் பின்னணியில் நகரத்தின் கருத்துக்களைத் திணிக்காமல் இருப்பது அவசியமாகும்.'

**பருவநிலை மாற்ற நெருக்கடியால் கைவினைக் கலைஞர்களுக்கும், கைவினைத் தொழிலின் இயற்கைச் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்பு**

"வெள்ளப் பெருக்கு, பட்டு உற்பத்தி பாதிப்பு, சுகாதார மற்றும் தண்ணீர் பிரச்சினைகள், தாமதிக்கும் உற்பத்திச் சுழற்சி, அதிகரிக்கும் வெப்பம், கைவினைக் கலைஞர்களின் குடிப்பெயர்வு, மண்சரிவுகள், நதிக்கரைகளில் அரிப்பு, தண்ணீர் தேங்குதல் மற்றும் மாசடைந்த நீர்நிலைகள். மக்களின் வீடுகளிலும், பணிக்குச் செல்லும் சாலைகளிலும் வெள்ளம் சூழ்ந்தது. மூலப்பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு. தூக்கி எறியப்படும் துணிகளினால், குப்பைக் கிடங்குகள் வேகவேகமாக நிரம்பி வழிகின்றன. வனவிலங்குகளும், செடிகொடிகளும் வளரமுடியவில்லை. காட்டுப்பட்டு மறைந்து விட்டது. பிராணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. பருவநிலை மாற்ற நெருக்கடியால் நெசவாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். வெப்பம் அதிகரிப்பதால், கடுமையான உடல் உழைப்பு செய்ய வேண்டியிருக்கிறது".

இந்த மாதிரியான மோசமான பருவநிலைக் காரணங்களினால் ஆராய்ச்சி & மேம்பாட்டு ஆதரவு நிறைய தேவைப்படுகிறது. முகா பட்டுப்புழுக்கள் 100% வெளிப்புறத்தில் வளர்க்கப்படுவதால், அவை வளர்வதற்கு 28 முதல் 29 டிகிரி வெப்பம் தேவை. ஆனால் இப்போது, இன்று, இந்த மார்ச் மாதத்தில் வெப்பம் 30 டிகிரியாக இருக்கிறது. இப்படி இருக்கும்போது, பட்டுப்புழுக்கள் எப்படி உயிர் வாழும்? இது ஒரு பெரிய கேள்வி. இத்தகைய மோசமான பருவநிலையிலும் தாக்குப்பிடித்து வளரக்கூடிய பட்டுப்புழு ரகத்தை உருவாக்க ஆராய்ச்சி & மேம்பாட்டு ஆதரவு தேவைப்படுகிறது. ஏப்ரல்- மே மாதங்களில் வெப்பம் 39-40 டிகிரி வரை அதிகரிக்கும். குளிர் ரத்தப் பிராணியான பட்டுப்புழுக்களினால் உயிர்வாழ முடியாமல் போய்விடும்."

**கைவினைத் தொழிலும், சுதேசி சமூகமும்**

" நமது சுதேசி அடையாளத்தை மீட்பது எப்படி என்பதுதான் எப்போதுமே எனது ஆராய்ச்சியின் நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. நான் வேலை செய்யும் பகுதியில் உள்ள ஒரு ரப்பர் கிராமத்திற்கு நான் சென்றிருந்தபோது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. நான் துணிகளுடன் வேலை செய்வதில் ஆர்வம் கொண்டவன் என்றும், சுதேசி நெசவுகளையும், அதன் சின்னங்களையும் உருவாக்கிட நான் ஆர்வம் கொண்டவன் என்றும் கூறியதும், ஒரு பெண் உடனே பேசத் தொடங்கினாள்;" நாங்கள் மொழியை இழந்து விட்டோம். எங்களால் எங்களுடைய தாய்மொழியைக் கூட பேச முடியாது,". இதைக் கேட்டதும் சமூகங்களுக்குள் நிலவும் கலாச்சார நினைவுகளின் மதிப்பு எவ்வளவு சிறப்பானது; மக்கள் பல்வேறு காரணங்களினால், தங்களது பேச்சுமொழியை இழந்துவிட்டால் கூட, அவர்களின் நெசவு மொழியை நம்மால் மீட்க முடியும் என்பதை நான் உணர்ந்தேன். "

" அவர்களின் இந்த அடையாளத்தை எவ்வாறு வலுப்படுத்துவது? இந்த அறிவாற்றல் உள்ளவர்களை நம்மால் எவ்வாறு பாதுகாக்க முடியும்? அவர்களிடம் இருந்து எதையோ எடுத்துக் கொள்ளாமல், புத்தாக்கம் கொண்டுவர அவர்களுடன் இணைந்து எவ்வாறு உருவாக்க முடியுமானால் கூட., அவர்கள் இருக்கும் நிலையில் இருந்து எவ்வாறு ஒரு எட்டு மேலே எடுத்து வைக்க முடியும்?"

**நிலையான ஃபேஷன், கைவினைகள் மற்றும் ஜென் இஜட்**

" இன்றைக்கு உங்களுடைய எந்த ஒரு ஃபேஷனுக்கும் மிகப்பெரிய நுகர்வோராகவும், வாடிக்கையாளர்களாகவும் இருப்பவர்கள் மிகமிக வேகமாக நுகரும் தன்மையுள்ள அடுத்த தலைமுறையினரான ஜென் இஜட் தலைமுறையினர். இப்போது, இந்த நிலையை நம்மால் எப்படி மாற்ற முடியும்? அவர்களின் மொழியில் பேசி, அவர்களின் மொழியில் டிசைன் செய்து, அவர்களின் மொழியில் தகவல்களைத் தருவதன் மூலம் மட்டுமே இந்த நிலையை மாற்ற முடியும். "

" இதை ஒரு பேரார்வமாக நீங்கள் மாற்ற வேண்டும். இளைஞர்களுக்கு ஜரா ஒரு பேரார்வம் மிக்கவராக உள்ளார். நீங்கள் கிராமங்களுக்குச் செல்லுங்கள். நல்லது எல்லாவற்றையும் பற்றிப் பேசுங்கள். அப்போது 20 ரூபாய் வைத்திருக்கும் ஒரு குழந்தை ஓடிப்போய் ஒரு பாக்கெட் சிப்ஸ் வாங்க ஆசைப்படுவதை நீங்கள் பார்க்கலாம். ஏனென்றால், சிப்ஸ் பற்றி நன்றாக யாரோ விளம்பரப்படுத்துகின்றனர். குழந்தைகள் வாழைப்பழம் வாங்குவதில்லை. அது அதிகம் ஆரோக்கியம் உள்ளதாக இருக்கலாம். எனவே வாழைப்பழத்தின்மீது அவர்களுக்கு பேரார்வம் ஏற்படச் செய்ய வேண்டும். அப்படித்தான் செய்யமுடியும்."

ஜென் இஜட் பருவநிலை பற்றி ஆழ்ந்து அக்கறை காட்டுகிறது. ஆனாலும், அவுட்ஃபிட் ஆஃப் தி டே (OOTD) போன்ற சமூக ஊடகங்களின் போக்குகளினால் தூண்டப்பட்டு அல்ட்ரா ஃபாஸ்ட் ஃபேஷன் அதிகரிப்பதைக் காண்கிறோம். தங்களுடைய பிரத்யேகத் தன்மையையும், படைப்புத் திறனையும் பிரதிபலிக்கக்கூடிய ஃபேஷனை அவர்கள் நாடுகின்றனர். அதனால்தான் செலவிடும் கலாச்சாரம் அதிகரித்து விட்டது. இதில் கைவினைகள் முக்கிய பங்காற்ற முடியும். இது இருவேறு உலகங்களைப் பற்றிய கதை- சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் தனித்துவத்தை நாடுவது- இந்த இரண்டு பேரார்வங்களையும் நிறைவேற்றும் ஆற்றல் கைவினைத் தொழிலுக்கு இருக்கிறது."

### கைவினைத் துறைக்கு உள்ள தடைகள்

கைத்தறிகளுக்கும், கைவினைத் தொழிலுக்கும் அவை தோன்றிய காலத்தில் இருந்தே பாரம்பரியப் பிரச்சினைகள் இருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். இது தொடர்பாக மூன்று முக்கிய கவலைகள் உள்ளன. முதலில், காலப்போக்கில் அந்தந்தப் பகுதிகளின் உள்ளூர் இயற்கைச் சூழல் அழிந்து விட்டது. இரண்டாவதாக, டிசைன் மற்றும் டெக்னிக்கல் ஆதரவு தேவைப்படுகிறது, மூன்றாவதாக, கைவினைக் கலைஞர்களின் சமூகத்திற்கு டிசைன், பிஸினஸ் மற்றும் தகவல் தொடர்பு பற்றிய அடிப்படைக் கல்வி அளித்து அவர்களுக்கு அதிகாரம் வழக்க நாம் ஆசைப்படுகிறோம். மார்க்கெட் இணைப்பும் நமது முயற்சிகளில் முக்கியமானதாக இருக்க வேண்டும். இந்த அளவீடுகளின் அடிப்படையில் செயல்பட்டு, கைவினைக் கலை சமூகம் முழுவதற்கும் நிலையான நடைமுறைகளை ஏற்படுத்த பாடுபடுகிறோம்."

" நூல்விலை ஒரு பெரிய பிரச்சினையாக இருப்பதை நான் கண்டேன். நூலுக்கு நிலையான விலை எதுவும் குறிக்கப்படாமல் அது தாறுமாறாக அதிகரிக்கிறது. இதனால் உற்பத்தியில் பிரச்சினைகள் உண்டாகின்றன. மேலும், ஆறுமாதங்களுக்குள் நூல் விலை மாறிக் கொண்டே இருப்பதால், துணிகளுக்கு விலை நிர்ணயம் செய்வதில் சிக்கல் உண்டாகிறது. நூல்விலைகளைக் கட்டுப்படுத்திட ஒருவகையான மார்க்கெட்டிங் சமநிலை அல்லது ஒழுங்குபடுத்தும் விதிகள் இருக்க வேண்டும். கையால் நூற்கப்படும் இயற்கை நூல்களின் விலை மிகவும் அதிகம். இதற்குக் காரணம் அவற்றின் பிரத்யேகத் தன்மை மற்றும் நிறைய தொழிலாளர்கள் தேவைப்படுகிறது. ஆனால் அவற்றின் மதிப்பை மக்கள் உணர்வதில்லை. உரிய பொருத்தமான விலை கொடுத்து வாங்க விரும்புவதில்லை. நமது கைத்தறி உற்பத்தியை விசைத்தறித் துணிகளுடன் ஒப்பிடுவது நியாயமற்றது. கைத்தறித் துணிகளை நெய்வதற்கு நீண்டகாலம் ஆகிறது. உற்பத்தியும் குறைவாகவே ஆகிறது. பாரம்பரிய, இயற்கை நூல்களை ஊக்கப்படுத்த மார்க்கெட்டிங் ஒழுங்காற்று விதிகள் இருக்க வேண்டும்; இல்லையெனில், இந்தக் கலை மெல்ல இனிச் சாகும். மேலும், 'கைத்தறி' என்ற சொல்லுக்கே பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். பட்டுக்கு ஒரு முத்திரை இருப்பது போல, கைத்தறித் துணிகளுக்கும் ஒரு முத்திரை போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு ஒளிவுமறைவற்ற நிலையை உறுதிப்படுத்த வேண்டும்."

"இடுப்புத் தறி என்பது இடுப்பைச் சுற்றிக் கட்டப்படும் தறியாகும். இதனால் நெசவாளர்கள் தறியை இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தரையில் அமர்ந்து நெய்யும்போது, உடல்வலி மிகவும் கடுமையாக இருக்கும், எனவே இவ்வாறு நெய்யப்படும் துணிக்கு வித்தியாசமான ஓர் அங்கீகாரம் தரவேண்டியிருக்கிறது. இன்னொரு விஷயம் என்னவென்றால், அக்ரிலிக் இழை எளிதில், மலிவான விலையில் கிடைப்பதால் மக்கள் அதற்கு பழக்கப்பட்டு விட்டார்கள்; இயற்கை நூலைப் பயன்படுத்துவதை நிறுத்தி விட்டார்கள். இயற்கை நூலைக் கொண்டு நெசவு போட ஆயத்தம் செய்வதற்கு நிறைய நேரம் பிடிக்கிறது என்று எனது நெசவாளர்கள் பலரும் சொல்கின்றனர். எனவே, அவர்களுக்கு உரிய விலை கிடைப்பதற்காக நாம் ஊக்கப்படுத்த வேண்டியிருக்கிறது."

" சிந்தெட்டிக் இழைகள் உடனுக்குடன் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு நெய்வது சுலபம். அதனால் ரத்தம் வருவதில்லை, என்று அவர்கள் கூறுகின்றனர். எனவே, ஆர்கானிக் பொருட்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன்களை எடுத்துக் காட்டுவதற்காகவும், இதனால் உடம்புக்கும், சருமத்திற்கும் எவ்வளவு சௌகரியம் என்பதைக் காட்டவும் நான் பெருமுயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. மெதுவான முன்னேற்றம் ஏற்படுகிறது."

" நாம் அனைவரும் நாம் பார்க்கும் இயற்கைச் சூழல் பிரச்சினையை சுட்டிக்காட்டுகிறோம். வடகிழக்குப் பகுதிகளில், ஒரே ஒரு நூல் பதப்படுத்தும் யூனிட்தான் இருக்கிறது. அது போதுமானது அல்ல. மாநிலத்திற்கு வெளியே இருந்து நூல் வாங்குவதில் நிறைய நேரத்தையும், பணத்தையும் வீணாக்குகிறோம். இதனால் தயாரிப்புப் பொருட்களின் விலை அதிகமாகி, மார்க்கெட்டில் குறைவாகவே போட்டியிட முடிகிறது. அப்புறம் செலவைக் குறைப்பதற்காக, நாங்கள் நெசவாளர்களுக்கு ஊதியத்தைக் குறைக்க வேண்டியிருக்கிறது. இது நியாயமல்ல. நாம் அவர்களை மார்க்கெட்டின் தேவைக்காக அதிகம் உற்பத்தி செய்யுமாறு கட்டாயப்படுத்துகிறோம். இதனால் உடல்நலப் பிரச்சினைகள் உண்டாகி, வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது. இது ஒரு சங்கிலி போல அமைந்து விட்டதை நாங்கள் பார்க்கிறோம். எனவே, முன்பு நம்மிடம் இருந்ததைப் போல, நிலையான கிராமப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்க வேண்டும். கடந்த காலத்தில், பருத்தி வளர்க்கப்பட்டு, நூற்கப்பட்டு, நூல் எடுத்து உள்ளூரில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு சாயம் தோய்த்து, தற்சார்பு இயற்கைச் சூழல் சிஸ்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் பல்வேறு கொள்கைகள் காரணமாக, இது சீர்கெட்டுவிட்டது. இப்போது, நாம் மீண்டும் வலுவான இயற்கைச் சூழல் சிஸ்டத்தை உருவாக்க வேண்டியுள்ளது."

### நுகர்வோர் விழிப்புணர்வின் முக்கியத்துவம்

" நாமும் ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறது. மார்க்கெட்டுக்கு இணைப்புத் தர முயற்சிக்க வேண்டும். நூல் விலை உயரும்போது, அது நேராக நாங்கள் தயாரிக்கும் துணிகளின் விலையைப் பாதிக்கிறது. அப்புறம், நமது வாடிக்கையாளர்களுக்கு சொல்லி விளக்க வேண்டியது நமது பொறுப்பாகிறது. நமது முந்தைய கலெக்ஷனை விட இப்போது விலை ஏன் 20-30-40% அதிகரித்து விட்டது என்று அவர்கள் கேட்கின்றனர். "

" நான் கையால் நெய்த ஒரு ஆடையை ஒரு பெரிய பிராண்டு எடுத்துக் கொண்டது. எனினும், பெரிய பிராண்டுகளில் இருக்கும் ஸ்கேனிங் சிஸ்டத்தினால் கையால் நெய்யப்பட்ட ஆடைகள் நிராகரிக்கப்படுகின்றன. கையால் தயாரிக்கப்படும் ஆடைகளின் இயல்பான தன்மையை அது ஏற்பதில்லை. எனவே, எனது பெரும்பாலான சேலைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன. கைத்தறியில் உண்மையிலேயே என்ன இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளாமலே பெரிய ஃபேஷன் ஹவுஸ்கள் கைத்தறியை புரோமோட் செய்வதைப் பார்க்க கஷ்டமாக இருக்கிறது."

எங்களுடைய புராடக்டுகள் இயற்கை இழைகளில் இருந்து தயாரிக்கப்படுகின்றன, மரம், பிளாஸ்டிக், அக்ரிலிக், அல்லது செராமிக்ஸ் போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களுடன் நாங்கள் போட்டி போட வேண்டியிருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக என்னுடைய கஸ்டமர்கள் இதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இவை பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்டவை அல்ல ; அளவுக்கு அதிகமான ஈரப்பதத்தினால் பூஞ்சைத் தொற்று போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க இவற்றை மிகவும் கையாள வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை."

**விசைத் தறியும் கைத்தறியும்**

"சமீபத்தில், விசைத்தறியில் சுமோசா தயாரிப்பதை நிறுத்திவிட்டு அதை கைத்தறியில் தயாரிக்க வேண்டுமென அஸ்ஸாம் சி எம் ஓ அறிவித்தார். எனினும், என்னுடைய வீட்டில் என் அம்மா சுமார் 50-60 கமோஸாக்களை வாங்குகிறார். நான் வீட்டிற்குத் திரும்பும்போது மேலும் சிலவற்றை வாங்கி வருமாறு கூறுகிறார். மலிவான கைத்தறி கமோசாவே 250 ரூபாய் விலைக்குக் கிடைக்கிறது என்று நான் அம்மாவுக்கு விளக்க முயற்சிக்கிறேன். ஆனால் நகரத்தில் 100 ரூபாய் விலையில் தாம் வாங்குவதாக அவர் வற்புறுத்திச் சொல்கிறார். கைத்தறிக்கும், விசைத்தறிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அம்மாவே புரிந்து கொள்ளவில்லை என்பதை இது காட்டுகிறது. நமது 90% நுகர்வோர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். கைத்தறி பற்றி நுகர்வோருக்கு எடுத்துச் சொல்லி விளக்குவது முக்கியமான முதல் நடவடிக்கை. அப்போதுதான், நுகர்வோர் மற்றும் பிராண்டிங், பற்றாக்குறை என்ற பிரச்சினைகள் பற்றி நாம் விவாதிக்க முடியும். சாதாரண மக்களுக்கு மலிவான கமோசாவுக்கும், ஓரளவு நல்ல தரமான கமோசாவுக்கும் இடையே உள்ள வித்தியாசம் புரிவதில்லை. ஆகவே அவர்கள் மலிவான ஒன்றையே தேர்ந்தெடுப்பது இயல்பே."

" இது நமது நாடு முழுவதிலும் நடந்து கொண்டிருக்கிறது. இதைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியம், விசைத்தறிகளை திடீரென மூடுவது தீர்வாகாது. ஏனென்றால் விசைத்தறிகளிலும் பலர் வேலை செய்கின்றனர். நான் விசைத்தறி நெசவாளர்களிடம் பேசும்போது, வேலை நிறுத்தப்படுவது பற்றிக் கவலைப்பட்டனர். வேலை கிடைப்பது நின்றுவிட்டால், பட்டினியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். மக்கள் மற்ற நாடுகளில் இருந்து மலிவான விலையில் கிடைக்கும் இறக்குமதிப் பொருட்களை வாங்கத் தொடங்குவார்கள் என்று சொன்னார்கள், இந்தப் பிரச்சினைக்கு நாம் தீர்வு கண்டாக வேண்டும். கைத்தறிக்கும், விசைத்தறிக்கும் இடையே வித்தியாசப்படுத்துவது பற்றி நீங்கள் சொன்னது முக்கியமானது. நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை நுகர்கிறீர்கள். நுகர்வோருக்கு சாய்ஸ் இருக்க வேண்டும். ஆனால் அந்த சாய்ஸின் விளைவு என்ன என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மலிவான 5 பொருட்களை வாங்குவதை விட, நல்ல தரமான 1 கைத்தறி ஆடையை வாங்கலாம் . இந்த நிலை இப்போது நிகழாமல் இருப்பதற்கு காரணம் கன்ஸ்யூமரிஸம்."

" பிரதமர் வாராணசியில் கூறிய ஒரு விஷயம் என் மனதில் பட்டது. கைகளால் நெய்யப்பட்ட துணிகளை விரும்புகிறவர்களுக்கு கைத்தறி நெய்யட்டும், விசைத்தறிகளோ அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்யட்டும் என்று அவர் பேசியிருந்தார். நாம் எதிர்கொள்ளும் பிரச்சினை என்னவென்றால், மார்க்கெட்டில் கீழ்த்தட்டில் இருப்பவர்கள் நமது இலக்காக உள்ளனர்; அவர்களுக்காகக் கைத்தறி துணிகளை உற்பத்தி செய்கிறோம். இது பிரச்சினையை ஏற்படுத்துகிறது. உலகின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தியில் 95% இந்தியாவில் உற்பத்தியாகிறது. ஆனாலும், நம்மால் மார்க்கெட் முழுவதையும் பிடிக்க முடியவில்லை. நாம் பெரிதும் கார்ப்பெட்களையே ஏற்றுமதி செய்கிறோம். வெளிநாடுகளில் அறியப்படாத மார்க்கெட் பெரிய அளவில் இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் கைகளால் நெய்யப்படும் துணிகளின் மதிப்பைப் புரிந்து கொண்டு பாராட்டுகின்றனர், கடந்த 10 ஆண்டுகளில் ரா மேங்கோ போன்ற கைத்தறி பிராண்டுகள் 100% வளர்ச்சி அடைந்திருக்கின்றன. காரணம், அவை டிசைனில் கவனம் செலுத்தி, சரியான மார்க்கெட்டைப் பிடித்து, நெசவாளர்கள் பயனடையும் வகையில் தங்களுடைய தயாரிப்புக்களுக்கு விலை நிர்ணயித்துள்ளன. கைத்தறித் துறையை மேம்படுத்திட, டிசைன்களை வழங்குவதும், திறம்பட மார்க்கெட் இணைப்பு ஏற்படுத்துவதும் அத்தியாவசியம் ஆகும்."

" நெசவாளரின் கதையைக் கூறுவதும் நல்ல மார்க்கெட்டிங்தான். ஒரு பொருள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதையும், அதைத் தயாரிக்க எவ்வளவு கடினமாக உழைக்கிறார்கள் என்பதையும் மக்கள் புரிந்து கொள்வார்கள். இவ்வளவு முயற்சிகளைப் பார்த்த பிறகு இது வாங்குவதற்குத் தகுதியானதுதான் என நினைப்பார்கள், நாங்கள் தொழில்மயத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். அது கைத்தறியுடன் சேர்ந்து இயங்க வேண்டும். மேலும், நாம் ஏன் வாங்குகிறோம், என்ன வாங்குகிறோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தொழில்மயத்தை எதிர்ப்பதில் அர்த்தம் இல்லை. கைத்தறி அல்லாத எதையும் நிராகரிப்பதும் சரியல்ல, இரண்டும் சேர்ந்து இயங்குவதை நாம் ஏற்க வேண்டும்."

" எல்லா கைத்தறிகளுமே இயற்கைச் சூழலுக்கு நேயமானது அல்ல என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், நாம் விசைத்தறிகளுடன் கட்டாயம் போட்டி போடவேண்டும் என்னும்போது, நமது கைத்தறி பழக்கங்கள் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பானவையாகவும் இருக்க வேண்டும். கைத்தறி என்று சொல்லிவிட்டாலே அது இயற்கைச் சூழலுக்கு உகந்தது என்றாகி விடாது. எதிர்காலத் தலைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் பாதிப்பையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மண்ணைக் கெடுக்கும் குப்பையாக மாறும் அக்ரிலிக் துணிகளையும், ரசாயனச் சாயங்களையும் நாம் பயன்படுத்துகிறோமா? விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் இடையே தேர்ந்தெடுப்பதை விட, இந்தச் சவால்களுக்குத் தீர்வுகண்டாக வேண்டும்."

**விரைவான உற்பத்தி Vs மெதுவான உற்பத்தி**

" சிறு பிஸினஸ் உரிமையாளர்களின் கண்ணோட்டத்திலேயே நாம் இந்த விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம் என நினைக்கிறேன். எனினும், ஒரு பெரிய பிரச்சினை என்னவென்றால், ஃபாஸ்ட் ஃபாஷன் கட்டுப்படுத்தப்படாமல் வளர்ந்து கொண்டே இருக்கிறது, நமது விவாதங்களில் ஃபாஸ்ட் ஃபாஷன் உரிமையாளர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், வரம்பின்றி லாப நோக்குடன் செய்யப்படும் இந்த மாதிரியான ஃபாஸ்ட் ஃபாஷன் பிரச்சினையைத் தீர்க்காமல், உற்பத்தியை குறைக்கிறோமா அல்லது கூட்டுகிறோமா, எவ்வாறு உற்பத்தி செய்கிறோம் அல்லது என்ன பொருட்களை நாம் ஊக்கப்படுத்துகிறோம் என்பதன் பாதிப்பை நம்மால் உண்மையிலேயே ஏற்படுத்த முடியாது. நமது உற்பத்தி நடைமுறைகளுக்கு ஃபாஸ்ட் ஃபாஷன் தரம் நிர்ணயிக்கிறது. காலக்கெடு குறிக்கிறது, பொறுப்பு வாய்ந்த பிஸினஸ் உரிமையாளர்களைப் பற்றி மட்டுமே கவனம் செலுத்துவது போதாது. உற்பத்தியில் ஈடுபடும் அனைத்துத் துறையினருக்கும் பொறுப்பு இருக்க வேண்டும்."

**நிலையான உற்பத்தி பற்றி வரையறுத்து, மெட்ரிக்குகளை உருவாக்க வேண்டிய தேவை.**

" ஒரு பிராண்டை மெதுவானது அல்லது நிலையாக நீடித்திருக்கும் பிராண்ட் என்று வகைப்படுத்துவது எது என்பதை நான் புரிந்து கொள்ளணும்."

" வயலில் இருந்து நூல் வரை, நூலில் இருந்து துணி வரை , பிறகு சாயம் தோய்ப்பது வரை -இப்படி எல்லா நிலைகளிலும் நாம் பசுமைக் குறியீடு அல்லது நிலையான அல்டிமேட் ஆடை எது என்று வரையறுக்கும் ஒன்றை நாம் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த வரையறை பல நிலைகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. எனவே, நான் உடுத்தியிருக்கும் உடை 30% இயற்கைச் சூழலுக்கு நேயமானதா என்பதை மதிப்பிடுவதற்கு நீண்டகாலம் ஆகும். ஏனென்றால், நூல் எப்படி உருவாகிறது, எவ்வாறு துணி நெய்யப்படுகிறது என்பதை எல்லாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது."

**கல்வி**

" நாம் இதை பாடத்திட்டத்தில் எப்படி சேர்ப்பது? இந்த பாரம்பரிய மரபைப் பற்றி இளம் தலைமுறையினரை அதிகம் அறியச் செய்ய வேண்டும், அதிகம் கலந்துரையாடவேண்டும், அதிகம் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். இதை நாம் எங்கு பேசுகிறோம் என்பது முக்கியமானது. ஆதாயம் தரக்கூடியது. கல்வியின் காரணமாக, கைவினைக் கலைஞர்களின் இளம் தலைமுறையினர் வெளியேறுகின்றனர். கைவினைக் கலைஞர்களின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுடன், இளம் மாணவர்கள் உரையாடினால், அவர்கள் இருதரப்பினரும் கைவினைத் தொழில் பற்றி முற்றிலும் வித்தியாசமான முறையில் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கும் என நினைக்கிறேன். பாரம்பரிய மனப்பக்குவம் மூலமாக அல்லாமல், பாரம்பரியத்தை எவ்வாறு சமகால நடைமுறையுடன் இணைப்பது என்று பார்ப்பார்கள்."

" கைவினைக்கும், மெதுவான ஃபாஷனுக்கும் இடையே உள்ள தொடர்பு, பெட்டிகளில் என்ன இருக்கிறது என்பதை எவ்வாறு நீங்கள் உணர்கிறீர்கள்? நாம் ஏற்கனவே பெட்டிகள் மீது டிக் அடித்து விட்டோம். ஆ, ஆனாலும் நாம் அதன் உள்ளே பார்க்கவில்லை. இன்னொரு விஷயம் நாம் பேசுவது என்னவென்றால், டிரேட் - ஆஃப். எதுவுமே 100% நிலையானதல்ல, எதுவுமே 100% மிகச்சிறந்தது அல்ல, இவை யாவும் முடிவெடுக்க உதவும் கருத்துக்கள். ஏனென்றால், நீங்கள் என்ன செய்தாலும், அதனால் சுற்றுச்சூழலுக்கு ஒரு விலை இருக்கும். அதைத் தயாரிக்கும் கைவினைக் கலைஞர்களுக்கு ஒரு பாதிப்பு இருக்கும். எனவே, சமூகத்துடன் நாம் செயல்பட்டு, நாம் செய்யும் உற்பத்தியினால் ஏற்படும் பாதிப்பை மேம்படுத்திட வேண்டும். அது மிகவும் முக்கியம். இதனால்தான் இந்த பிராண்டுகள் வெற்றியடைகின்றன. ஆனால் அவை 100% சுற்றுச்சூழலுக்கு நேயமானவை அல்ல. நிறைய சம்பளம் தருகின்றன, அற்புதமான டிசைன்களைத் தருகின்றன. இது எல்லாமே ஆல் -இன் -ஒன் அல்ல, நாமே நமது கதைகளைக் காண வேண்டும்."

**கதை சொல்வதும், சமூக ஊடகமும்**

" செல்வாக்கைக் குறைப்பது என்னும் ஒரு போக்கு நிலவுகிறது. இது மெதுவான வாழ்க்கையைப் பின்பற்றி, மிகவும் கவனமாகச் செயல்பட்டு, தங்களது வேர்களுடன் மீண்டும் இணையும் மக்களைப் பற்றியது. இதுதான் கதை சொல்லும் உத்தி. இது விற்பனையைப் பற்றியது அல்ல, ஆனால், நாம் எவ்வாறு மிகவும் கவனத்துடன் தேர்ந்தெடுக்கிறோம்; எவ்வாறு துணிகளை நுகர்கிறோம் என்பதைப் பற்றி கதைகதையாகச் சொல்வது. நாம் துணிகளை எவ்வாறு அணுகுகிறோம் , ஒத்துழைப்பு அணுகுமுறையை பின்பற்றுகிறோமா, உடைகளைப் பகிர்ந்து கொள்கிறோமா , கவனத்துடன் பொருட்களை வாங்குகிறோமா என்பதை எல்லாம் நமது அடுத்த தலைமுறை மாற்றிவிடும் என நம்புகிறேன். அவர்கள் அவர்களின் காலத்திய ஒழுக்க உடைகளை விரும்பினால், அதை கைவினைத் துறை அதற்கேற்ப தயாரிக்க வேண்டும், எதிர்காலத்தில் நிலையான ஃபாஷனுக்கு இந்த இடைவெளியை நிரப்புவது முக்கியம்."

நிறைய முதலீட்டு செய்யாமலே நமது பிராண்டுக்கு அடையாளத்தை உருவாக்கும் மதிப்புமிக்க வழியாக ஒரு காலத்தில் சமூக ஊடகம் இருந்தது. ஆனால், அந்த நிலை மாறிவிட்டது, காரணம் மக்களின் கணக்கீடுகளில் மாற்றம். நமது படைப்புத் திறனையும், வீச்சையும் மட்டுப்படுத்தி, விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட வகை துணிகளை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. நம்மில் பலரால் இது முடிவதில்லை. அப்போது உள்ளடக்கம் என்னும் கோட்பாடு வரும். நியூரோ டைவர்ஜென்ஸ் பற்றி என்ன சொல்வது?

**நுகர்வோர் மற்றும் பிஸினஸ் நிறுவனங்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்**

" நூல் விலை உயரும்போது, அது நேராக நாங்கள் தயாரிக்கும் துணிகளின் விலையைப் பாதிக்கிறது. அப்புறம், நமது வாடிக்கையாளர்களுக்கு சொல்லி விளக்க வேண்டியது நமது பொறுப்பாகிறது, நமது முந்தைய கலெக்ஷனை விட இப்போது விலை ஏன் 20-30-40% அதிகரித்து விட்டது என்று அவர்கள் கேட்கின்றனர். "

" நான் கையால் நெய்த ஒரு ஆடையை ஒரு பெரிய பிராண்டு எடுத்துக் கொண்டது. எனினும், பெரிய பிராண்டுகளில் இருக்கும் ஸ்கேனிங் சிஸ்டத்தினால் கையால் நெய்யப்பட்ட ஆடைகள் நிராகரிக்கப்படுகின்றன. கையால் தயாரிக்கப்படும் ஆடைகளின் இயல்பான தன்மையை அது ஏற்பதில்லை. எனவே, எனது பெரும்பாலான சேலைகள் நிராகரிக்கப்பட்டு விட்டன. கைத்தறியில் உண்மையிலேயே என்ன இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளாமலே பெரிய ஃபாஷன் ஹவுஸ்கள் கைத்தறியை புரோமோட் செய்வதைப் பார்க்க கஷ்டமாக இருக்கிறது."

எங்களுடைய புராடக்டுகள் இயற்கை இழைகளில் இருந்து தயாரிக்கப்படுகின்றன, மரம், பிளாஸ்டிக், அக்ரிலிக், அல்லது செராமிக்ஸ் போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களும் நாங்கள் போட்டி போட வேண்டியிருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக என்னுடைய கஸ்டமர்கள் இதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இவை பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்டவை அல்ல ; அளவுக்கு அதிகமான ஈரப்பதத்தினால் பூஞ்சைத் தொற்று போன்ற பிரச்சினைகள் ஏற்படமால் இருக்க இவற்றை மிகவும் கையாள வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை."

" நான் பொதுவாக செய்வது என்னவென்றால், கைவினைப் பொருட்களைப் பற்றி மக்கள் அவ்வளவாகப் புரிந்து கொள்வதில்லை. கொள்கைகளைப் பற்றி நாம் நிறையப் பேசுகிறோம். ஆனால் மக்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஒரு தடவை நான் பிரகதி மைதானுக்குச் சென்றிருந்தேன். எரிப் பட்டு நெசவாளர் ஒருவரை சந்தித்தேன். எரி சால்வையைப் பார்த்தால் அதை நீங்கள் ஒரு காட்டன் துணி என்று நினைப்பீர்கள். அது ஒரு மோட்டா ரக பருத்தித் துணி போல் இருந்தது. அந்தப் பெண்மணி நிறைய ஸ்டோல்களை விற்றுக் கொண்டிருந்தாள். " இதை உங்களால் விற்க முடிகிறதா?" என்று கேட்டேன். ஆரம்ப காலங்களில் டிரேட் ஃபேர் போகும்போது மிகவும் கஷ்டமாக இருந்தது என்றாள். அதை எப்படி விற்பது என்று அவளுக்குத் தெரிந்திருக்க வில்லை. ஏனென்றால் அதை ஒரு பட்டு என்று யாருமே புரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் அதில் பட்டுக்கே இருக்கும் பளபளப்பு இல்லை. அப்போது அவளுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்ததாம். தனது பாட்டி நெய்த எரி சால்வை பளபளப்புடன் இருப்பதை பார்த்திருக்கிறாள், அதை பொருட்காட்சிக்கு எடுத்துவரத் தொடங்கினாள். அதை மக்களிடம் காட்டி விற்கத் தொடங்கினாள், இப்படித்தான் பிராக்டிக்கலாக செய்ய வேண்டும், நீங்கள் மக்களிடம் காட்டும்போது, அதை அவர்கள் வெகு எளிதில் புரிந்து கொண்டு வாங்கத் தொடங்குவார்கள்."

#CraftingConnections

www.britishcouncil.in